விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 25 புதன்கிழமை (11.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296

## 13ஆம் திகதி அரசியல் கைதிகளுக்காக முழுமையான கதவடைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலையை வலியுறுத்தியும், மீளவும் அவர்களது வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணத்தில் கதவடைப்புக்கு (ஹர்த்தாலுக்கு) அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பினை இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், அகில இலங்கை சைவ மகாசபை, வடக்கு மாகாண புதிய அதிபர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, வலி வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்குழு, தமிழ் 04

## பிரபாகரனைப் பார்த்து வேதனை அடைந்தேன்

– ராகுல் காந்தி



24

## அமைச்சரவையில் மனோ பிரஸ்தாபம்



(கொழும்பு)

தமது வழக்குகள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டமையை எதிர்த்து பதினைந்து நாட்களாக உண்ணாவிரதம் இருக் 23

## தொடர்ந்தும் உண்ணாவிரதம்


(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவர் தொடர்ந்தும் 16 ஆவது நாளாக நேற்றும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் நேற்றையதினமும் உணவை உட்கொள்ள 23

# வட – கிழக்கு இணையாவிடில் கிழக்கு பறிபோய்விடும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்) வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாவிட்டால் திருகோணமலை மாவட்டத்திற்கு என்ன நடந்ததோ அதுவே நாளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திற்கும் நடக்கும். அதாவது கிழக்கு பறிபோய்விடுமென வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## முடிவின்றி தொடரும் சைட்டம் சர்ச்சை
## மாணவர்கள் மீது தடியடி; 18 பேர் காயம்



23

## நாமல் ராஜபக்ஷ கைது



(அம்பாந்தோட்டை)

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியது குறித்து வாக்கு மூலம் அளிக்க பொலிஸில் ஆஜரான நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவரை அம்பாந்தோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இரண்டு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் கைது செய்ய 23

## பேருந்தை மறித்து இருவர் அட்டகாசம்

(கரவெட்டி)

வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் ஊடாக கொழும்பு சென்ற தனியார் பேருந்து ஒன்று மீசாலையில் வைத்து தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது. மோட்டார் சைக்கிளில் 23

## தமிழ் மக்கள் தொடர்பில் உறுதியளித்ததை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்

## பிரித்தானியா வலியுறுத்தல்

(லண்டன்)

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் தொடர்பில் உறுதி யளித்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய ஆளுங்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளனர்.

ஜெனீவா பிரேரணையின் பரிந்துரைகளை அமுலாக்குதல், மறுசீரமைப்பு பொறிமுறை உள்ளிட்ட பல உறுதிமொழிகள் இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேசத்திடம் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை உரிய வகையில் நடைமுறைப்படுத்த நட 23

## மயிலிட்டியில் 27 குண்டுகள் மீட்பு

(மயிலிட்டி)

மயிலிட்டியில் மீள்குடியேற்றப்பட்ட பகுதியில் உள்ள காணி ஒன்றின் கிணற்றில் இருந்து 27 மோட்டார் வெடி குண்டுகள் காங்கேசன்துறை பொலிஸாரால் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன. மயிலிட்டி பகுதியில் ஜே/251 கிராம 24

## சுவிஸ் நீதியான விசாரணையை நடத்த வேண்டும்; பிள்ளைகள் கோரிக்கை



## சனி, ஞாயிறு, யாழ். இந்துவில் தேசிய தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் முதல் தடவையாக தேசிய தமிழ்த்தின விழா மற்றும் பாடசாலைகளின் கலாசார விழா 14ம், 15ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட பல அரசியல் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மத்திய கல்வி அமைச்சும், ஜங்கரன் மீடியா சொலுஷன் நிறுவனமும் இணைந்து நடத்தும் 24

## விட்ரோ காஸ் நிறுவன தலைவருக்கு விளக்கமறியல்



(கொழும்பு)

தாய்வான் நாட்டு வங்கியொன்றின் கணனி கட்டமைப்பை ஊடுருவி 60 மில்லியன் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்

உறவுகளுக்கு துரித நாமல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021-222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(சி-9956)


# வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு

(கண்டி) கண்டி, தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கண்டி மஹியங்கனை பிரதான வீதியில் செலுத்தப்பட்ட கார் ஒன்று நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி குடை சாய்ந்ததில் இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

விபத்திற்குள்ளான கார் வீதியோரம் நின்று கொண்டிருந்தவர்கள் மீதும் மோதியுள்ளது.

காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெல்தெனிய வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (மு)


## சுயதொழில் வாய்ப்பு

முல்லைத்தீவு பகுதியில் ஒரே இடத்தில் சுயமாக மாடு வளர்க்கவும் ஊடு பயிர் செய்யவும் ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும். (சி-9957)

தொடர்பு: 077 168 1697



## வாழும் கலை அமைப்பு வழங்கும் "உபநயனம்" யாழ்ப்பாணத்தில்




- உன்னதமான "பிரம்ம உபதேசம்"
- குருவின் அருளால் பெறும் "காயத்திரி மந்திரம்" உபதேசம்
- தீயவை போக்கும் "அக்னி கோத்ரா" யாகம், சந்தியா வந்தனம்
- தியானம், யோகா மற்றும் வேத ஆகமங்களின் சொற்பொழிவு
- ஆன்மீக பாதையில் ஓர் புதிய பிறப்பு

- இப் பயிற்சி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருதேவ் அவர்களின் சீடர் ஸ்ரீ காசிஜி அவர்களினால் நடத்தப்படும்.
- தனிப்பட்ட ரீதியாகவும், அமைப்புகளின் ஊடாகவும் பங்குபெறலாம்.
- செப்பிலான தாமரைக் கிண்ணம் மற்றும் அனைத்து செப்பு உபகரணங்களும் வழங்கப்படும்.

காலம்:-ஒக்டோபர் 16ஆம் திகதி முதல் 19 வரை
16ஆம் திகதி காலை 6.30 முதல் மதியம் 12.30
17, 18, 19ஆம் திகதி காலை 6.30 முதல் 8.30

மேலதிக விபரங்களுக்கு

**வாழும் கலை அமைப்பு**

**077 100 0750, 071 257 9504**

(சி-9960)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கச்சாய் அ.த.க பாடசாலை



மாணவி செல்வி

**நவீனன் மீதுசா**

2017 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி பல்கலையும் கற்று பல பட்டங்களையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
அப்பப்பா - மனோகரன்
அப்பம்மா - சிவசாந்தினி
கச்சாய் வடக்கு, கொடிகாமம்.

(சி-9955)


## தேவை

கொங்கிறீட் மிக்சர் (ஒருபாகி) உடன் தேவை

தொடர்பு: 0774366704

(சி-9963)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பொன்மனப் பேராளன் கல்விக் கொடையாளர்

**உயர்திரு.இராசையா குவேந்திரநாதன்**

**(உரிமையாளர் ராஜா பிளாசா)**

கோண்டாவில் மேற்கு மக்கள் நலன்பேணும் அமைப்பினால் 08.10.2017 அன்று நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு நிகழ்வில் கோண்டாவில் வாழ் சமூக சேவையாளர்கள் உயர்திரு. இராசையா குவேந்திரநாதன், குவேந்திரநாதன் றஞ்சினிதேவி தம்பதியினருக்கு "இல்லக ஜோதி" எனும் கௌரவ பட்டத்தினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அவர்களும் பேராசிரியர் க.தேவராஜா அவர்களும் இணைந்து வழங்கி கௌரவித்தமையை பாராட்டி நாமும் வாழ்த்துவதோடு மேலும் பல்லாண்டு காலம் வாழ ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யுமாம் மழை"

*தங்கள் சமூகப்பணி தொடர வாழ்த்துவோர்,*

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும்

(C-9961)

# கண்ணீர் அஞ்சலி

**09.10.2017**

## அமரர் முருகேசு கார்த்திகேசு



முள்ளியவளைப் பிரதேச வர்த்தக சங்கத்தின் செயலாளர் திரு.கா.சிவகுமார் அவர்களுடைய தந்தையார் முருகேசு கார்த்திகேசு அவர்களுடைய மரணச் செய்தி கேட்டு ஆறாத் துயர் அடைகின்றோம்.

அன்னார் இழப்பின் துயரில்நாமும்பங்குகொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக ஊற்றங்கரை விநாயகரை வேண்டுகின்றோம்.

தகவல்: முள்ளியவளைப் பிரதேச வர்த்தக சங்கம், தண்ணீரூற்று, முள்ளியவளை.

(சி-9959)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31-ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

**முத்துராசா கனகராசா**

(மெக்கானிக் குட்டி)



மண்ணில்: 21.10.1943 - விண்ணில்: 11.09.2017

கடந்த 11.09.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வு 11.10.2017 இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.47/1, யமுனா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்: குடும்பத்தினர்
0771296170, 0778679735

(972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு

# இலங்கை விழிப்புலனற்ற பட்டதாரிகள் பேரவைக்கு ஜனாதிபதியால் நிதியுதவி



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் கொடி விற்பனை வாரத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் முதலாவது கொடி நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அணி விக்கப்பட்டது.

இலங்கை விழிப்புலனற்ற பட்டதாரிகள் பேரவையின் தலைவர் சரத்குமார மடுகஸ்வத்தவினால் ஜனாதிபதிக்கு கொடி அணி விக்கப்பட்டதுடன், சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியினால் விழிப்புலனற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கிவைக்கப்பட்டன.

விழிப்புலனற்றவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அப் பிரச்சினைகள் உள்ளடங் கிய ஒரு அறிக்கை ஜனாதிப தியிடம் கையளிக்கப்பட்டது.

விழிப்புலனற்றவர்களின் தேவைக்காக நிர்மாணிக்கப்பட்டுவரும் கேட்போர்கூட நிர்மாணப்பணிகளை நிறைவு செய்வதற்கு 17 இலட்சம் ரூபா தேவைப்படுவதாக பேரவையினால் ஜனா திபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, அக்கட்டடத்தைத் துரிதமாக நிர்மாணிப்பதற்கு 20 இலட்சம் ரூபாவை ஜனாதிபதி அவ்விடத்திலேயே பேரவையிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் இலங்கை விழிப்புலனற்றபட்டதாரிகள் பேரவையின் தலைவர் சரத்குமார மடுகஸ் வத்த, செயலாளர் பத்மகுமாரி கருணாதிலக்க உள்ளிட்ட சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (இ-7))

# பொய்ப் பிரசாரங்கள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பல முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என தெரிவித்த பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, பொய்ப் பிரசாரங்கள் தொடர்பில் மக்கள் விழிப்போடு இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலை முன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கடந்த ஒரு வாரமாக பல்வேறு சமூக வலைத்தளங்கள் ஊடாக 08.10.2017 இல் ஆர்ப்பாட்டம் நடத்த போவதாக அறிவித்திருந்தார்கள். பொதுமக்களையும் பல்வேறு சமூக அமைப்புக்களையும் ஆர்ப்பாட்டத்திற்கு அழைத்திருந்தார்கள். ஆனால், அன்றையதினம் பொதுமக்களோ சமூக அமைப்புக்களோ ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்களில் முக்கியமானவர் இப்பகுதியிலுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரி ஆவார். இவர் கடந்த சில காலங்களாக வைத்தியசாலைக்கு வந்திருந்த போது இவர்மீது பல்வேறு முறைப்பாடுகள் காணப்பட்டன. எனவே இவர் மீதான முறைப்பாடுகளைப் பதிவு செய்து சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உரிய விசாரணை மேற்கொள்ளும் படி அனுப்பியிருந்தோம். அதன் பிரகாரம் இப்போது அந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இது தவிரவும் நீதி அமைச்சுக்கும் இவர் இந்த கடமைக்கு பொருத்தமற்றவர். எனவே அவரை வைத்தியசாலைக்கு திடீர் மரண விசாரணைகளுக்காக அனுப்பவேண்டாம் எனவும் கேட்டு கடிதம் மூலம் அறிவித்திருந்தோம். அதற்கான விசாரணைகளும் நடைபெற்று வருவதாக அறிந்திருந்தோம்.

இச்சந்தர்ப்பதில் இவ்வாறான ஒரு ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்து இருப்பது அவர் தன்மீது இருக்கும் குற்றச்சாட்டுக்களை மூடி மறைப்பதற்கு என்றே நான் நம்புகின்றேன். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல கோரிக்கைகளை துண்டுப் பிரசுரம் மூலமாக அறியத் தந்துள்ளார்கள். அவற்றில் பல முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை. ஒரு சில குறைபாடுகள் வைத்தியசாலை பற்றி கூறப்பட்டுள்ளன. அவை எம்மால் பரிசீலனை செய்து நிவர்த்தி செய்யப்படும். எமது வைத்திய சாலை மீது வந்த பாரிய குற்றச்சாட்டுகள் எவையும் ஏற்றுக் கொள்ள முடியாதவை குறிப்பாக எமது வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான குறைபாடுகள் எதுவும் எமது வைத்தியசாலையில் இல்லை.

குறிப்பாக ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் பொதுமக்கள் நேரடியாக அல்லது எழுத்துமூலமாக எமக்கு அறியத்தரும்போது பூரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்படும். கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றன.

கலகக்காரரினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் பற்றி பொது மக்கள் விழிப்போடு இருக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

ஏனெனில், யாழ்.போதனா வைத்தியசாலையானது வடமாகாணத்தின் முக்கியமான வைத்தியசாலை ஆகும். வடமாகாணத்திலுள்ள அனைத்து பொது மக்களுக்கும் சேவை வழங்கும் ஒரு நிறுவனமாகும். எனவே இந்த நிறுவனம் தொடர்பான தவறான கருத்துக்களையும் சேறு பூசும் நடவடிக்கைகளையும் பற்றி பொது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். வைத்தியசாலை அனைவருக்கும் சொந்தமானது.

அதன் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் அனைவரும் பங்களிக்க வேண்டும். ஆகவே பொதுமக்கள் அனைவரும் இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டும். இவ்வாறானவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்தோடும் விழிப்புணர்வோடும், செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# சைவப் பாடசாலைகளில் அசைவ உணவு வேண்டாம்

## வடக்கு கல்வியமைச்சிடம் வீணாகான குருபீடம் கோரிக்கை

சைவப் பாடசாலைகளில் அசைவ உணவுகள் வழங்கப்படுவதை நிறுத்த வேண்டும் என வீணாகான குருபீடத்தால் வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக வீணாகான குருபீட அமைப்பாளர் வண. சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ. சபா. வாசுதேவக் குருக்கள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

உலகில் ஈழத்தமிழினம் பெருமையும் சிறப்பும் பெற்று திகழ்வதற்கு அதன் கலாசார விழுமியங்களை பேணுவதில் கொண்டுள்ள பற்று பிரதானமான காரண மாகும். எமது மண் பல யுத் தங்களையும் பேரழிவுகளை யும் கண்டிருந்தபோதும் எமது இனம் கலாசார விழுமியங்களை கைவிடவில்லை. அதனைப்பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் சமூகத்தினில் பல சமய சமூகத் தலைவர் கள், மதகுருமார்கள், கல்விமான்கள், அரசியற் தலைவர்கள் அரும்பாடுபட்டுக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

தமிழர் பாரம்பரியம் கல்விப் பாரம்பரியத்துடன் இணைந்து காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

மாணவ சமூகமே கலாசார விழுமியங்களை பின்பற்ற ஆரம்பிக்கின்ற முதல் படிநிலையாளர்களாக திகழ்கின்றார்கள். பாரம்பரிய கலாசார விழுமியங்களில் உணவுப் பழக்கவழக்கமும் ஒன்றாகும். நற்குண நற் செயற்பாடுகளை தூண்டு வதில் உணவுப் பழக்க வழக் கம் முதலிடம் வகிக்கின்றது. சைவ உணவு, அசைவ உணவு என்பது மதம் கடந்த ஒன்றாகும். சைவ உணவு அனைத்து மதத்தவர்களாலும் விரும்பி உண்ணும் உணவாக காணப்படுவதாகும். சைவ போசனம் உடையவர்களாக இருப்பது எமது சைவசமய கடப்பாடும் ஆகும்.

மாணவர்களின் கல்வி உணவின்மையால் தடைப்படக்கூடாதுஎன்னும்நல்நோக்கத்தினில் பாடசாலைகளில் மதிய உணவு இலவசமாக வழங்கப்படுவது மாணவர்களுக்கு மாத்திரமல்ல பெற்றோருக்கும் பெம் பேறாக அமைந்ததாகும். இருந்தாலும்கூட ஒருசில பாடசாலைகளில் குறிப்பாக சைவப் பாடசாலைகளில் எமது பாரம்பரியத்தினை அவமதிக்கும் வகையினில் மதிய உணவிற்காக அசைவ உணவானரின் மீன் வழங்கப்படுவது பெரும் கவலை தரும் விடயமாக உள்ளது. இது எமது சைவப் பாரம்பரியத்தை முற்று முழுதாகப் புறந்தள்ளுவதாக அமைந்திருக்கின்றது. வன்முறையற்ற சமூகத்தினை உருவாகும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கல்விச் சமூகம் அதற்கு மாறாக செயற்படுவது போல் உள்ளது. இந்த நடவடிக்கை சைவத்தினையும் தமிழையும் வளர்ப்பதற்கு தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் முதலான பெரியவர்களின் தொண்டுகளை உதாசீனப்படுத்துவதாகவும் அவர்களின்ஆத்மாவைஅமைதியிழக்கச் செய் வதாகவும் அமைந்து விடுகின்றது.

இவ்விடயத்தில் பாடசாலை சமூகம் பெற்றோர்களின் விருப்பத்தினை கருத்தினிற் கொண்டு நாம் செயற்படுகின்றோம் என கருத்துக் கூறுவதும் தொண்டு நிறுவனங்கள் தருவதைத்தான் நாம் பெற முடியும். இல்லாவிட்டால் மதிய உணவினை நிறுத்தி விடுவார்கள் எனக் காரணம் கூறுவதும் பொதுவான கருத்தாக காணப்படுகின்றது.

எமது கலாசார விழுமியங்களை அழித்து அல்லது விட்டுக்கொடுத்து அல்லது எம்மை நாம் விற்றுத்தான் எமது உண்டி வளர்க்க வேண்டும் என்னும் தேவை ஈழத்தமிழினத்திற்கு இன்னமும் வரவில்லை.

மாணவ பருவத்தில் நல்வழிப்படுத்தாவிட்டால் எதிர்காலத்தில் பாடசாலைகளும் பசுவதை செய்யும் கொல்களங்களாக மாறும் என்பதில் ஐயமில்லை.

இவ்விடயத்தினில் கல்விச் சமூகமும் இந்து நிறுவனங்களும் அதிகமான அக்கறை எடுத்து எமது பாரம்பரியம் பேணுவதற்கு ஒத்துழைப்பினைத் தர வேண்டும் என மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-9)

# கர்ப்பிணிப்பெண் படுகொலை காணொலி அறிக்கை மன்றில்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் ஏழு மாத கர்ப்பிணிப் பெண்ணொருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சம்பவம் இடம்பெற்றபோதுவேறொரு இடத்தில் இருந்ததாக கூறப்பட்டு அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட காணொலி ஆய்வுக்கு அனுப்பப்பட்ட நிலையில் அதன் அறிக்கை மன் றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவ் அறிக்கையானது மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் குறித்த வழக்கின் விசாரணையை குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றுமாறு இருதரப்பு சட்டத்தரணிகளும் மன்றை கோரிய போதும், ஒரு குற்றச் சம்பவம் பல பகுதிகளுடன் தொடர்புபட்ட தாக இருந்தாலே குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்ற முடியும் எனவும் அவ்வாறில்லாவிட்டால் அதனை மாற்ற முடியாது என சட்டமா அதி பரது சுற்று நிருபம் கூறுகின்றது என கூறி அவர்களது கோரிக் கையை நீதவான் மறுத்திருந்தார்.

வேண்டுமானால் இவ் விசாரணையை ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் இருந்து யாழ். மாவட்டத்தின் ஏனைய ஏதாவதொரு பொலிஸ் பிரிவுக்கு மாற்றலாம் எனவும் குறிப்பிட்டார். எனினும் அவ்வாறு வேறு பொலிஸாருக்கு மாற்றுவது வீணான கால நீடிப்பை ஏற்படுத்தும் எனக்கூறி இருதரப்பு சட்டத்தரணிகளும் அதனை நிராகரித்துடன் ஊர்காவற்றுறை பொலிஸாரே விசாரணை செய்யுமாறும் கூறினர்.

இதேவேளை சந்தேக நபர்கள் இருவரையும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டதுடன் அதுவரை வழக்கை ஒத்தி வைக்கவும் ஏ.எம்.எம்.றியால் உத்தர விட்டார். (இ-4)

# மிதிவெடி வெடித்ததில் மாட்டின் காலில் காயம்



மறவன்புலோ கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை மிதிவெடி ஒன்று வெடித்ததில் வளர்ப்பு மாடு ஒன்றின் கால் சிதைவடைந்துள்ளது.

குறித்த பகுதி யில் வசிக்கும் கணபதிப்பிள்ளை நகுலராசா என்பவருடைய வீட்டின் பின்புறமாக அவருடைய வளர்ப்பு மாடு மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிரு ந்தது. நேற்று அதிகாலை அப்பகுதியில் வெடிப்பு சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்த போது அவருடைய வளர்ப்பு மாடு மிதிவெடியில் அகப்பட்டு கால் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது.

மறவன்புலோ கிராமம் கடந்த 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. பின்னர் பொதுமக்கள் மீள் குடியேற்றப்பட்ட போது அரச சார்பற்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9-60)

# கட்டுநாய்க்க நோக்கி வந்த இந்தியப் பிரஜை உயிரிழப்பு

குவைத்திலிருந்து கட்டுநாயக்க நோக்கி வந்த விமானத்தில் இருந்த பயணி ஒருவர் ஆகாய மார்க்கத்திலேயே உயிரிழந்துள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதாஜ் முருகன் (வயது-52) என்ற இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் மரண விசாரணையொன்றைமேற்கொண்டு சடலத்தை இந்தியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்புரண்டது இந்தியா: குவஹாட்டி ரி20இல் ஆஸி வெற்றி

கடந்த போட்டிகளில் ஏற்பட்ட தவறுகளை 2ஆவது ரி20 போட்டியில் நிவர்த்தி செய்த அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களால் அசத்தல் வெற்றி பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட ரி20' தொடரில் பங் கேற்கிறது.

முதல் போட்டியில், இந்தியா வெற்றி பெற்ற நிலையில், 2ஆவதுபோட்டி, அசாமின் குவ ஹாட்டியில் உள்ள பார்சபரா மைதானத் தில் நடந்தது. இது இந்திய மண்ணில் அறிமுக மான 49ஆவது மைதானமாக அமைந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்தி ரேலிய அணித் தலைவர் வோர்னர், முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**மோசமான ஆரம்பம்**

இந்திய அணியின் முன்வரிசை துடுப் பாட்டம் ஆரம்பத்திலேயே தடம்புரண்டது. முதல் ஓவரை வீசிய பெஹ்ரன்டார்ப், 4ஆவது பந்தில் ரோகித் சர்மா (8), 6ஆவது பந்தில் அணித் தலைவர் ஹோலியை 'டக்' அவுட்டாக்க, மைதானம் 'ஷாக்' ஆனது.

**ஜாதவ் ஆறுதல்**

இந்த சோகத்தில் இருந்து மீள்வதற்குள், மணிஷ் பாண்டே (6) பெவிலியன் திரும்பி னார். தவான் (2), தோனி (13) பொறுப்பற்ற முறையில் ஆட்டமிழந்தனர்.

கேதர் ஜாதவ் 27, பாண்ட்யா 25 ஓட்டங் கள் எடுக்க, இந்திய அணியின் ஓட்ட எண் ணிக்கை ஒரு வழியாக 100ஐ எட்டியது. பின் வரிசையில் பும்ரா (7), குல்தீப் (16) ஓட்டங்கள் எடுக்க இந்திய அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங் களை மாத்திரமே எடுத்தது.

**எளிய இலக்கு**

எளிய இலக்கை விரட்டிய அவுஸ்திரே லிய அணிக்கு வோர்னர் (2), பின்ஞ் (8) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பின் வந்த ஹென்றிக்ஸ், ஹெட் இரு வரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, அவுஸ்திரேலிய அணி வெற்றியை எளிதாக நெருங்கியது.

குல்தீப் ஓவரில் அடுத்தடுத்து சிக்ஸர் அடித்த ஹென்ரிக்ஸ் அரைசதம் எட்டினார். இவர், சகால் பந்தை பவுண்டரிக்கு அனுப்ப,

அவுஸ்திரேலிய அணி 15.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றியிலக்கை (122) அடைந்தது.

ஹென்ரிக்ஸ் (62), ஹெட் (48) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்தி ரேலிய அணியின் ஜேசன் பெஹ்ரண்டார்ப் தெரிவானார்.

இதையடுத்து 'ரி20' தொடர் 1-1 என்ற கணக்கில்சமநிலையை அடைந்தது. 3ஆவது மற்றும் கடைசி போட்டி நாளை மறுதினம் 13ஆம் திகதி ஹைதராபாத்தில் நடக்கிறது.



**முற்றுப்புள்ளி**

குவஹாட்டி போட்டியில் தோற்றதை அடுத்து, சர்வதேச 'ரி20' அரங்கில் அவுஸ் திரேலிய அணிக்கு எதிராக, தொடர்ந்து ஏழு வெற்றி பெற்ற இந்திய அணியின் வெற்றி நடை முடிவுக்கு வந்தது. தவிர, 2012க்குப் பின், இந்தியாவுக்கு எதிரான 'ரி20' போட்டி யில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

## அரசியல் கைதி...

தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணி, ஜனநாயக மக் கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுத லைக் கூட்டணி, அரசியல் கைதிகளை விடு தலை செய்வதற்கான தேசிய அமைப்பு, யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிரா மிய உழைப்பாளர் சங்கம், தமிழ் மக்கள் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், யாழ்.பொறியியலாளர் சங்கம், ஐக்கிய சோச லிச கட்சி, புதிய ஜனநாயக மாக்கிச லெனி னிச கட்சி, தமிழ் சிவில் சமூக அமையம், தமிழ் மக்கள் பேரவை ஆகியன இணைந்து விடுத்துள்ளன.

கதவடைப்பு அழைப்புத்தொடர்பில் மேற்படி அமைப்புகள் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் தேசிய இனத்தின் பிறப்புரிமை களை உறுதிப்படுத்துவதற்காகத் தங்களது வாழ்வை அர்ப்பணித்துப் போராடியவர்கள் உட்படப் பலர் அரசியற் கைதிகளாகச் சிறை களில் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருப்ப தனைக் கண்டிக்க வேண்டியதும், அவர்க ளது விடுதலையை வலியுறுத்திப் போராட வேண்டியதும் ஒவ்வொரு தமிழ் மக்களதும் ஒவ்வொரு தமிழ் மகனதும் தார்மீகப் பொறுப்பும் வாழ்வுக் கடமையும் ஆகிவிட்டது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு என்பது, தற்போது ஒரு சட்டரீதியான விடயம் என்பதைக் கடந்துவிட்டது. அது நியாயத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டிய ஓர் விடயமாக ஆகிவிட்டது. அத்தோடு - ஓர் அரசியல் தீர்மானத்தின் ஊடாகத் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படையான பிரச்சினை களுள் ஒன்று என்ற பரிமாணத்தையும் அடைந்துவிட்டது.

போரின் இறுதிநாள்வரை ஆயுதங்கள் தாங்கிப் போராடிய பல மூத்த போராளிகள் உட்பட 12,000 முன்னாள் விடுதலைப் புலி களை, குறுகிய காலத் தடுப்பிற்குப் பிறகு, மீள வும் சமூகத்துடன் இணைய வழிவகை செய்த ஓர் அரச பொறிமுறையானது, வெறும் 132 பேர்களை மட்டும் தொடர்ந்தும் சிறை களில் அடைத்திருப்பதானது எவ்வித சட்ட அர்த்தமும் இல்லாத ஓர் செயற்பாடு ஆகும். தமிழர்களுடன் தொடர்பில்லாத அரசியற் காரணங்களினாலேயே அவர்கள் தொடர்ந் தும் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது.

எமக்கான காரியங்களை ஆற்றுவதற் காக எமது வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகள், அரசாங் கத்தின் பங்காளிகளாக மாறி, அனைத்து விடயங்களிலும் அரசாங்கத்திற்கு உறுதுணை யாக இருக்கின்றார்கள். நாடாளுமன்றச் செயற்பாடுகள் அனைத்திலும் அரசாங் கத்தை நியாயப்படுத்தி ஆதரிக்கின்றார்கள். தமது ஆதரவுக்கான ஒரு பிரதியீடாகத்தன் னும் - உறுதியான தளம்பலற்ற வார்த்தைக ளால் பேசி - சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அவர் களால் முடியும். ஆனால், எமது உறவுகள் சிறைகளில் வாடினாலும் பரவாயில்லை, தாம் அரசாங்கத்தைச் சங்கடப்படுத்தக் கூடாது என்பதற்காகவும், அரசாங்கத்துட னான தமது உறவுகள் பாதிப்புறக்கூடாது என்பதற்காகவும், மென்மையாகப் பேசி எமது பிரதிநிதிகள் காலத்தைக் கடத்தி வருகின்றார்கள்.

எமது பிரதிநிதிகளின் இந்த அலட்சியப் போக்கினதும், உதாசீனத்தினதும், அக்கறை யின்மையினதும் விளைவாக - தான்தோன் றித்தனமாகச் செயற்படும் இந்த நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களம், தமிழ் பிர தேச நீதிமன்றங்களில் உள்ள எமது அரசியற் கைதிகளின் வழக்குகளை, சிங்களப் பிர தேசங்களுக்கு மாற்றுகின்றது. அவர்களுக்கு எதிரான சாட்சிகளுக்குப் பாதுகாப்புப் பிரச் சினை என்று சினமூட்டும் காரணங்களை அடுக்குகின்றது. அத்தோடு - வழக்குகளைத் துரிதமாக நடத்தி முடிக்காமல் வேண்டு மென்றே இழுத்தடிக்கின்றது.

இதன் காரணமாக - தமக்கான அடிப்படை நீதியைக் கோரி தமிழ் அரசியற் கைதிகள் மூவர், கடந்த 16 நாட்களாக உண வுத் துறப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் கள். தங்களது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்றுவதுடன், தமது வழக்குகளை துரிதமாக நடத்தி முடிக்க வேண்டும் என்பதுவே அவர்களது உடனடிக் கோரிக்கையாக உள்ளது.

அவர்களது கோரிக்கையை நிறை வேற்ற வலியுறுத்தி எமது அதிகூடிய வல்ல மைக்கு உட்பட்ட எமது அழுத்தத்தை நாம் ஒவ்வொருவரும் ஒன்றாய் திரண்டு பிர யோகிப்போம். எவர் கைவிட்டாலும் அவர் களை நாம் கைவிடமாட்டோம் என்ற தகவலைச் சொல்லுவோம்.

(1) தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண் டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்டதன் பின்பு, தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவு காண வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உணவுத் துறப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும்,

(2) முழுத் தமிழ் அரசியற் கைதிகளை யும் ஓர் அரசியற் தீர்மானத்தினூடாக விடுவி க்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும்,

(3) அசமந்தப் போக்கைக் கைவிட்டும் - மழுப்பல் பதில்களை வழங்காமலும் - அனைத்து தமிழ் அரசியற் கைதிகளையும் விடுவிப்பதற்கான நேரடி அழுத்தத்தினை அரசாங்கத்தின் மீது பிரயோகிக்குமாறு எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளை வற்புறுத்தியும்,

(4) வரும் 14.10.2017 சனிக்கிழமை, யாழ்ப்பாணம் வருகைதரவிருக்கும் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, தாமத மற்ற தீர்வு காண வேண்டிய இந்த விவகாரத் தின் தீவிரத்தன்மையை உணர்த்துவதற்குமாக,

எதிர்வரும் 13.10.2017 வெள்ளிக் கிழமை வடமாகாணம் தழுவிய முழுமை யான கதவடைப்பினை மேற்கொள்வதற்கு அனைத்து தமிழ் மக்களையும் நாம் உரிமை யோடு அழைக்கின்றோம். அவசர மருத்துவ சேவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் செயற்பாடுகளையும் முழுமனதோடு நிறுத்தி - நியாயத்தோடும் சாவோடும் போராடுகின்ற தமிழ் அரசியற் கைதிகளுக்கு எமது ஆத்ம பலத்தைக் கொடுப்போம்.

தமிழ் அரசியற் கைதிகளுக்கு நிரந்தர விடுதலை கிடைக்கும்வரை நாம் ஓயமாட் டோம் என்ற செய்தியை - இந்த நாட்டின் அர சாங்கத்திற்கும் எமது நாடாளுமன்றப் பிரதி நிதிகளுக்கும் இதன் பொறுப்புடைய ஒவ் வொரு தரப்புக்கும் உறுதியாகத் தெரி விக்க எதிர்வரும் 13.10.2017 வெள்ளிக் கிழமை காலை 09.30 மணிக்கு வடக்கு மாகாண ஆளு நர் செயலகம் முன்பாக ஒன்றாகத் திரள்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-4)




**கார், வான் வாடகைக்கு தேவை**

நிறுவனத்துக்கு கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்குத் தேவை

தொடர்பு:- (978)

**076 448 1101**




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் குறித்து படையினரை பொறுப்புக்கூற வைக்க கடும் முயற்சி

## இராணுவத் தலைமை அதிகாரி அமல் தகவல்

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பாக வன்னி களமுனையில் நிலை கொண்டிருந்த இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினரைப் பொறுப்புக் கூற வைக்க கடும் முயற்சிகள் முன்னெடுக் கப்படுவதாக இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் அமல் கருணாசேகர தெரிவித்துள்ளார்.



பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்குத் தீர்வுகாண இராணுவம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"வன்னியில் போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற அடிப்படையில், சண்டையிடும் படைப் பிரிவுகள் தண்டிக்கப்பட்டுள்ளன.

படைப் பிரிவுகளுக்கு தலைமை தாங்கிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு திரும்பத் திரும்ப அமெரிக்க நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது. 59 ஆவது டிவிசனுக்கு தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு அவுஸ்திரேலியா நுழைவிசைவு வழங்க மறுத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

## சிகரெட்டுக்களுடன் சிக்கிய 5 சீனர்கள்

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை சிகரெட்டுக்களை இலங்கைக்கு கொண்டுவர முற்பட்ட ஐந்து சீனப் பிரஜைகள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது, சந்தேகநபர்கள் வசம் இருந்து 355 சிகரெட் ப்க்கெற்றுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளை மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)


அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 12.09.2017 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம்

அமரர்

சின்னத்தம்பி சிற்றம்பலம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.10.2017) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று நாளை 12.10.2017 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலே சபிண்டீகரண கிரியைகளும் மதிய போசனமும் நடைபெறும்.

இவ் அழைப்பினை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாகக் கருதி அதில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கோவிற் சந்தை, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

இங்ஙனம்:- குடும்பத்தினர்

(A-9950)


## இராசி பலன்

11.10.2017

(புரட்டாதி 25, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

சஷ்டி பிற்பகல் 12.57 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 2.41 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம், கேட்டை | | ராகு |
| கேது | | | செவ் |
| | சனி | புத. குரு | சூரி சுக் |

**மீனம்:** தொழில் ரீதியாக வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மேடம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நீண்டநாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும்.

**இடபம்:** அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று இடம்பெறலாம், முயற்சிகளில் சில மாற்றங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும், அரசியல் செல்வாக்கு மேலோ-ங்கும் நாள்.

**மகரம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், உடல்நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பொன்னான நாள், வீட்டிற்கு விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அரசு வழியில் அனுகூலம் கிட்டும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புகளைக் காணும் நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், மனதில் இனம்புரியாத சந்தேகங்கள் தோன்றி மறையும்.

**துலாம்:** காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர், பொருளாதார நிலை உயர என்ன வழியொன்று யோசிப்பீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கன்னி:** செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரி வருமானங்கள் கைக்கு கிடைக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களுக்கு உள்ளக மதிப்பீடு தொடர்பான கருத்தமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கான உள்ளக மதிப்பீடு தொடர்பான கருத்தமர்வு இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அந்த வகையில் யாழ். மற்றும் நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கருத்தமர்வு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்திலும் கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கருத்தமர்வு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் இடம்பெறும் என யாழ். கல்வி வலய பணிப்பாளர் இ.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார். (இ-9-136)

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பதிவு செய்க

இந்த வருடம் நடைபெற்று முடிந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பிரதேசத்தில் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் யாழ். குருநகர் பிரதேசத்தின் ஜே/68, ஜே/69, ஜே/70, ஜே/71, ஜே/72 ஆகிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை யாழ். குருநகர் சனசமூக நிலையத்தில் பதிவு செய்யுமாறு குருநகர் மக்கள் முன்னேற்ற செயலாளர் அறிவித்துள்ளார். (இ-9-10-109)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 13வயது சிறுமி உதவிகோரல்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் பாசையூரைச்சேர்ந்த யேசுராசா அபிஷா என்னும் 13 வயதுச் சிறுமி இரத்தப் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அகதி முகாமில் இருந்து கடந்த வருடம் நாடு திரும்பிய பாசையூர் இலக்கம் 21, முதலாம் குறுக்குத் தெருவில் வசிக்கும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த இச் சிறுமியின் சிகிச்சைக்காக பெருந்தொகைப் பணம் தேவைப்படுகின்றது.

இந்நிலையில் பெற்றோர் உதவிகளைப் பரோபகாரிகளிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.

உதவி செய்ய விரும்புவோர் யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளையின் 80722448 என்னும் கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்புச் செய்யமுடியும் .

மேலதிக தகவல்களைப் பெற தொடர்பு கொள்ளவும்
076 527 7045
+91975 140 2086

# சிறுவன் மீதான தாக்குதல் வழக்கில் கைதான இருவரின் மறியல் நீடிப்பு

(கரணவாய்)

சிறுவன் ஒருவனை மூர்க்கத்தனமாக அடித்து காயப்படுத்திய நபரையும் அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட தாயையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தும்பளைப் பகுதியில் சிறுவன் ஒருவன் நபரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

இதுதொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த பருத்தித்துறை பொலிஸார் அந்நபரையும் அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட தாயையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. மீண்டும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09.10.2017) நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரையும் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

# குறுகிய காலக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் தொடர்பாடலுக்கான பேச்சு ஆங்கில (Spoken English) குறுகிய காலக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக்கற்கை நெறியானது மூன்று மாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக்கற்கை நெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும் இல.363, தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள மன்னார் கற்கை நிலையம் ஆகியவற்றிலும் நடைபெறவுள்ளது. இக்கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் மேற்கூறிய கற்கை நிலையங்களில் விண்ணப்பங்களைப் பெற்று 15.10.2017 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)




# சமூக பிறழ்வுகளை கட்டுப்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும்

## சீ.வீ.கே.சிவஞானம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களில் இளைஞர்கள் கூட்டாக செயற்படுவது போன்று சமூக பிறழ்வுகளை கட்டுப்படுத்தவும் இளைஞர்கள் கூட்டாக முன்வரவேண்டும் என வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனசமூக நிலையங்களில் இளைஞர்கள் கூட்டாக செயற்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனினும் எமது பிரதேசத்தின் ஒரு பகுதி இளைஞர்கள் வழிதவறிப் போவது மிகவும் கவலை தரும் விடயமாக இருக்கின்றது. குறிப்பாக மது பாவனை, போதைப்பொருள் பாவனைகள் எமது சமூகத்துக்குள் உள்வாங்கப்பட்ட காரணத்தினால் சில இளைஞர்கள் வழிதவறிப் போகின்றார்கள். இதனால் சமூகத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

சனசமூக நிலையங்களில் இளைஞர்கள் கூட்டாக, ஒற்றுமையாகச் செயற்படுகின்றீர்கள். இது வரவேற்கத்தக்கது. இவ்வாறு நீங்கள் கூட்டாக இணைந்து கைதடியை போதைப்பொருள், மது பாவனை இல்லாத கிராமமாக உருவாக்க வேண்டும்.

இவ்வாறு நீங்கள் முன்மாதிரியாகச் செயற்படுவதன் மூலம் இதே மாதிரியான நிலைப்பாட்டை ஏனைய கிராமங்களில் உள்ள சனசமூக நிலையங்களைச் சேர்ந்த இளைஞர்களும் முன்னெடுப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு கிராமங்களிலும் போதைப் பொருள், மதுபாவனைகளை இல்லாமல் செய்வதன் மூலம் .சமூக பிறழ்வு பாதிப்புக்களில் இருந்து நாங்கள் விடுபடலாம். இதற்கு கைதடி இளைஞர்கள் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பகவத்கீதை வாராந்த விளக்கவுரை

யாழ்.சின்மயா மிஷனில் பிரதி புதன்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 6 மணிவரை யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியாரால் ஸ்ரீமத் பகவத்கீதை வாராந்த விளக்கவுரை நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் இன்று ஸ்ரீமத் பகவத் கீதையில் கீதா தியான சுலோகம் என்றதலைப்பில் விரிவுரை நடைபெறவுள்ளது. (இ-7)

# தரம்-5 புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**புலோலி புற்றளை மகா வித்தியாலயம்**

கி.மகீபன்-190, ம.கார்த்தீபன்-172, வீ.காவியன்-170, சி.நிரூஜன்-166, சு.நீலஜா- 166, வி.துஷானி-164, ய.யுடோ கௌசிகன்- 160, ஐ.தனரூபன்-157.

**வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்**

கா.ருகாஷன்-176.

**புனித.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**

பி.செறின் பிரவீனா-159, யோ.திரிஷா-155.

**சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்**

பா.கவிப்பிரியன்-158.

# காசோலை கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

மகளிர் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபா காசோலையை சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினரிடம் அமைச்சரின் மானிப்பாய் தொகுதி இணைப்பாளர் தேசகீர்த்தி லயன் பா.சுரேஸ்குமார் அண்மையில் கையளித்தார். (இ-7)

# 'விரியப்போராடும் அரும்புகள்' கவிதைத் தொகுப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கவிஞர்முகமது அஸ்கரின் "விரியப் போராடும் அரும்புகள்" எனும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக மொழி பெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளர் கலாநிதி ச.க.கண்ணதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியிட பீடாதிபதி கலாநிதி சு.சுதாகர், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் ஜே.பி.ஜெயதேவன், யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா, யாழ். பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் திருமதி து.துஷ்யந்தி மிகுந்தன், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி கலாநிதி சு.ரவிராஜ், யாழ்.பல்கலைக்கழக பொறியியல்பீட பீடாதிபதி கலாநிதி அ.அற்புதராஜா, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் எஸ். எஸ்.உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-7)

# முன்பள்ளி திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)


கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கிராமத்துக்கு ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ், இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க முன்பள்ளியின் திறப்பு விழா நேற்று முன்தினம் இணுவிலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தெற்கு (உடுவில்) பிரதேச செயலாளர் திருமதி.மதுமதி வசந்தகுமார், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம், வலி.தெற்கு (உடுவில்) பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாகாந்தன் ஆகியோர் விருந்தினர்களாகக்கலந்து கொண்டதுடன், பொது மக்கள், முன்பள்ளிச் சிறார்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாநாயக்கர்கள் தவறான புரிதல்களை களைய வேண்டும்

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் செவ்வி



இலங்கையில் புகழ்பெற்ற சட்டவாளராகவும் உயர் நீதி மன்ற நீதியரசராகவும் இருந்த சி.வி. விக்னேஸ்வரன் தற்போது வடமாகாண முதலமைச்சராக பணியாற்றுகின்றார். இவர் தனது கருத்துக்களை அச்சமின்றி வெளிப்படுத்தக்கூடிய ஒரு மனிதராகவும் திகழ்கிறார்.

அண்மையில் சிறிய சத்திர சிகிச்சைக்கு உட்பட்டிருந்த விக்னேஸ்வரன், புதிய அரசியல் யாப்பு மீதான விவாதம் தொடர்பாக சிலோன் ருடே ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலின் ஒருபகுதி இங்கு தரப்படுகின்றது.

**கேள்வி:-** தாங்கள் அண்மையில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தீர்கள். இதன் பின்னர் இடம்பெற்ற பொது நிகழ்வொன்றில் மகாநாயக்க தேரர்கள் தவறான புரிந்துணர்வைக் கொண்டுள்ளதாக தாங்கள் தெரிவித்திருந்தீர்கள். இது தொடர்பாக விளக்கமாகக்கூற முடியுமா?

**பதில்:-** முதலாவதாக, கூட்டாட்சிக்கான எமது கோரிக்கையானது நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான கோரிக்கையாக மகாநாயக்க தேரர்கள் கருதுகின்றனர்.

இரண்டாவதாக, இந்த நாடானது சிங்கள பௌத்த தேசம் எனவும் இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகத்தவர்கள் பௌத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

மூன்றாவதாக, தேவநம்பிய தீசன் ஒரு சிங்கள மன்னன் என மகாநாயக்க தேரர்களில் ஒருவர் என்னிடம் கூறினார்.

இதுபோன்றே அவர்கள் தெரிவித்த பல கருத்துக்கள் தவறான கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தன. ஆனாலும் தற்போது நான் குறிப்பிட்டுள்ள மூன்று விடயங்களைப் பற்றி விரிவாக விளக்க விரும்புகிறேன்.

கூட்டாட்சி என்பது வேறுபட்ட சமூகங்களை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் அரசியல் முறைமையே கூட்டாட்சி என அனைத்துலக நாடுகள் கூறுகின்ற அதே வேளையில், கூட்டாட்சி என்பது பிரிவினைவாதம் என பௌத்த மதகுருமார்கள் தொடர்ந்தும் கூறிவருகின்றனர்.

அதாவது கூட்டாட்சி என்கின்ற நிர்வாக அலகின் கீழ் வடக்கு- கிழக்கின் தனித்துவத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் வடக்கு- கிழக்குப் பிரிந்து செல்வதற்கான அனுமதி வழங்கப்படுவதாக தேரர்கள் அச்சம் கொள்கின்றனர் என நான் நினைக்கிறேன். உண்மையில் இவ்வாறு அச்சப்படுவதற்கான எந்தவொரு காரணமும் இல்லை.

அவ்வாறாயின் கூட்டாட்சியின் கீழ் செயற்படும் நாட்டின் ஒவ்வொரு நிர்வாக அலகும் எதிர்காலத்தில் தனித் தனியாகப் பிரிந்து விடும் எனக் கருதமுடியுமா? இவ்வாறான சம்பவங்கள் வரலாற்றில் இடம்பெறவில்லை. பிரெஞ்ச் மொழியைப் பேசும் கியூபெக் மக்கள் ஆங்கில மொழியைப் பேசும் கனேடியர்களுடன் இணைந்து வாழ விரும்பினார்கள்.

இந்த வகையில் ஏற்கனவே இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாகாணமும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கூட்டாட்சி என்பது மக்கள் தற்போது வாழும் நிலையிலிருந்து பெரியளவிலான வேறுபாட்டை உருவாக்காது.

இலங்கை முற்றிலும் கூட்டாட்சி நாடாக பிரகடனப்படுத்தப்பட்டால் அதன் பின்னர் இங்குள்ள ஒன்பது மாகாணங்களும் கூட்டாட்சி நிர்வாக உரிமையைக் கொண்டிருக்கும். தற்போதும் கூட இலங்கையிலுள்ள மக்கள் தமது மாகாணங்களிலிருந்து பிற மாகாணத்திற்கு பாரியளவில் குடியேறும் நிலை ஏற்படவில்லை.

கூட்டாட்சி நிர்வாகம் நடைமுறைக்கு வந்தால் தமிழ் மக்கள் அனைவரும் வடக்கு- கிழக்கிலும் சிங்களவர்கள் தெற்கிலும் குடியேறி விடுவார்கள் என்கின்ற அச்சம் நிலவுகிறது. ஆனால் இதில் எவ்வித உண்மையும் இல்லை. இது மக்களின் தெரிவாகும். அவர்கள் இலங்கையர்களாக இருப்பதால் பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திரமுனை வரை தமக்கு விரும்பிய இடங்களுக்குப் பயணம் செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர்.

கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் தாங்கள் பரந்த நகரத்தில் வாழ்வதை உணர்ந்து கொள்ள வேண்டும். கொழும்பு நகரில் சிங்களவர்களை விட சிங்களவர்கள் அல்லாத சமூகத்தவர்களே அதிகம் வாழ்கின்றனர் என நான் நம்புகின்றேன். இந்த வகையில் கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் வடக்கு- கிழக்கிற்கு குடியேற வேண்டிய தேவையில்லை.

இதேபோன்று வடக்கு- கிழக்கில் வாழும் சிங்களவர்களும் அங்கிருந்து வெளியேற வேண்டிய தேவை ஏற்படாது. அவர்கள் தொடர்ந்தும் தற்போது தாங்கள் வாழும் இடங்களில் வாழ முடியும். இலங்கையின் மத்திய அரசாங்கம் தற்போது தமிழ் மக்களுடன் எவ்வாறான தொடர்பைப் பேணுகிறதோ அவ்வாறே வடக்கு-கிழக்கில் வாழும் சிங்களவர்களும் கூட்டாட்சியின் பின்னர் நிர்வாக அலகுடன் தொடர்பைப் பேணமுடியும்.

வடமாகாண சபையில் இரண்டு சிங்கள இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு நாங்கள் சிங்களத்தில் பதில் அளிக்கின்றோம். இவர்களுக்கு சிங்கள மொழியில் ஆவணங்கள் மொழிபெயர்த்து வழங்கப்படுகின்றன. அத்துடன் மொழிபெயர்ப்பு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் அஸ்கிரிய மகாநாயக்க தேரரினதும் இவரது சபை உறுப்பினர்களினதும் அச்சம் பயனற்றதாகும்.

அடுத்தது இந்த நாடானது சிங்கள பௌத்த தேசம் என இவர்கள் நம்புகின்றனர். இது தவறானது. இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்கள் சிங்கள பௌத்தர்களாக இருக்கலாம். இதன் காரணமாக இந்த நாட்டை 'சிங்கள பௌத்த' தேசம் என அழைத்து விட முடியாது.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது கூடத் தவறானது. அத்துடன் இந்தச் சட்டத்தை எதிர்த்தவர்களைக் கொடுமைப்படுத்தியமை மிகவும் மோசமான நடவடிக்கையாகும். இது பெரும்பான்மையினரின் அதிகாரத்துவத்தைக் காண்பிக்கின்றது.

இந்த நாட்டின் ஆதிக்குடி மக்கள் திராவிடர்கள் என அண்மைய கல்வெட்டுக்கள் மற்றும் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. சிங்களவர்கள் திராவிட வம்சாவளியினர் என்பதை மரபணுப் பரிசோதனைகள் உறுதிப்படுத்துகின்றன. சிங்கள மொழியானது கி.பி 6ஆம் நூற்றாண்டின் பின்னரே பயன்பாட்டிற்கு வந்தது.

மகாவம்சமானது பாளி மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. இது சிங்கள மொழியில் எழுதப்படவில்லை. இதுவே சிங்கள மொழி மகா வம்சம் எழுதப்பட்ட காலத்தில் தோன்றவில்லை என்பதற்கான சான்றாகும். 40 சதவீத சிங்கள மொழிச்சொற்கள் தமிழ் மொழியிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் வடக்கு- கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் பௌத்தர்களாவர்.

எமது பிரபலமான இலக்கிய வேலைப்பாடுகள் அதாவது மணிமேகலை போன்றன பௌத்த உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவில் பௌத்த தமிழ் கல்விக் கூடங்கள் காணப்பட்டன. ஆகவே இலங்கையின் பௌத்த ஆதிக்குடிகள் தமிழ் மக்களாவர்.

நான்கு நாயனார்கள் தோன்றிய போது தமிழ் மக்கள் பௌத்தத்தைக் கைவிட்டார்கள். இதன் பின்னர் பௌத்தர்களாக இருந்த தமிழ் மக்கள் தமது விசித்திரமான ஆன்மீக மற்றும் பக்தி வெளிப்பாட்டின் மூலம் இந்துக்களாக மாறினர். இந்தச் சந்தர்ப்பத்தில் பௌத்தம் இந்துமதத்தால் மறைக்கப்பட்டது.

முன்னைய காலத்தில் வடக்கு - கிழக்கில் வாழ்ந்த மக்களால் பௌத்தம் நிராகரிக்கப்பட்டது. வடக்கு- கிழக்கில் இன்று எஞ்சியுள்ள தொல்பொருளியல் சான்றுகள் தமிழ் பௌத்தர்களால் விட்டப்பட்டதே அன்றி சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானதல்ல.

ஆகவே நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களில் பௌத்த மதம் பெரும்பான்மையாக இருந்தாலும் கூட வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் நீண்ட காலத்திற்கு முன்னர் பௌத்த மதத்தை நிராகரித்து இந்து மதத்தை ஏற்றுக்கொண்டனர். இந்த வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் கூட்டாட்சி மற்றும் மதச் சார்பற்ற நிர்வாக அலகாகச் செயற்பட முடியும்.

பௌத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதென்பது புத்தருக்கோ அல்லது அவரது போதனைகளுக்கோ முக்கியத்துவம் கொடுப்பதை நோக்காகக் கொண்டதல்ல. பௌத்த மதகுருமார்கள் தமக்கென தனியிடத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் அரசாங்கத்திலும் நிர்வாகத்திலும் தலையீடு செய்வதற்காகவுமே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அற்புதமான புத்தரின் போதனைகளை பௌத்த தேரர்கள் தமது நடவடிக்கைகள் மூலம் அவமதிக்கின்றனர். பௌத்த மதம் போதிக்கும் அடிப்படை நெறிமுறைகள் அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளன. இதற்கேற்ப நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் புத்தரின் போதனைகளுக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும். ஆனால் இதனை எவரும் கருத்திற்கொள்ளவில்லை என நான் நினைக்கிறேன்.

தொண்டுகளைச் செய்யும் கிறிஸ்தவர்கள், சகோதரத்துவத்தைப் பேணும் முஸ்லிம்கள், தன்னலமற்ற அன்பை வெளிப்படுத்தும் இந்துக்கள் ஆகியோரும் அரசியல் யாப்பில் சமமாக மதிக்கப்பட வேண்டும். பௌத்த மதத்திற்கு அரசியல் யாப்பில் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் வடக்கு -கிழக்கில் தேவையற்ற இடங்களில் பௌத்த வணக்கத்தலங்களை உருவாக்குவதற்கும் மறைமுகமாக எமது மக்களை மதம் மாற்றுவதற்கும் வழிவகுக்கப்படுகிறது.

தேவநம்பிய தீசன் சிங்கள மன்னன் எனக் கூறப்பட்டுள்ளமை வரலாற்று ரீதியாகத் தவறானதாகும். அவர் வாழ்ந்த காலத்தில் சிங்கள மொழி நடைமுறையிலில்லை. இவரது உண்மையான பெயர் தேவனை நம்பிய தீசன் என்பதாகும். அதாவது கடவுளை நம்பியவர் என்பதே இதன் கருத்தாகும். இது தமிழ்ப் பெயராகும்.

ஆகவே தமிழ் மக்கள் மீது குற்றம் காண்பதற்கு முன்னர் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் தம்மிடையே காணப்படும் தவறான புரிந்துணர்வுகள் மற்றும் பிழையான நம்பிக்கைகளை இல்லாதொழிக்க வேண்டும். வடக்கு- கிழக்கில் கடந்த காலங்களில் உண்மையில் என்ன நடந்தது என்பதை பேராசிரியர்களான பத்மநாதன், சிற்றம்பலம், இந்திரபாலா (இவர் 2005 இல் கடைசியாக ஒரு நூலை வெளியிட்டிருந்தார்) போன்ற தமிழ் வரலாற்றாசிரியர்களின் நூல்களை மகாநாயக்க தேரர்கள் வாசிப்பதன் மூலம் உண்மையைக் கண்டறிய முடியும்.

வழிமூலம் -Ceylon today
ஆங்கிலத்தில் - Sulochana Ramiah Mohan
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரத்து 418 ஏக்கரில் நிலக்கடலை செய்கை

## முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு இரண்டாயிரத்து 418 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கடலை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கான சந்தை வாய்ப்பும் கிடைத்துள்ளதாக முல்லை.மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோக செய்கையின் போது மாவட்டத்திலுள்ள 10 கமநல சேவை நிலையங் களின் கீழ் 4 ஆயிரத்து 500 ஏக்கர் நிலக்கடலை செய்கைக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தொடர்ந்து நிலவிய வரட்சி காரணமாக 2 ஆயிரத்து 418 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டும் நிலக்கடலை செய்கை பண் ணப்பட்டது. இதன் அறுவடைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. ஏக்கருக்கு குறைந்தது 850 கிலோ முதல் ஆயிரம் கிலோ வரையான அறுவடை செய்யப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர். நிலக்கடலைக்கு தற்போது நல்ல சந்தை வாய்ப்புக்கள் கிடைத் திருக்கின்றன.

இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த இலாபத்தை எட்டியுள்ளனர் எனத் தெரி வித்த அவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக செய்கையின் போது வருடாந்தம் 10 ஆயிரம் ஏக்கர் சிறுதானியச்செய்கை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ளபோதும், வரட்சி காரணமாக நான் கில் ஒரு பகுதி செய்கை மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கிணறுகளில் நீர்வற்றியமையால் குடிநீர் பெறுவதற்கு அலைகின்றோம்

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் குடிநீர் கிணறுகள் வற்றியுள்ள நிலையில் இங்குள்ள மக்கள் குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு கிராமத்தில் தமது பூர்வீக நிலங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படாத நிலையில் 298 வரையான குடும்பங்கள் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் வசித்து வருகின்றன.

இந்நிலையில் 298 குடும்பங்களின் தண்ணீர்த் தேவைகளுக்கு அமைக்கப்பட்ட பதினொரு பொதுக்கிணறுகளும் நீர் வற்றிக்காணப்படுகின்றன.

இதைவிட ஏழு குழாய்க் கிணறுகளில் நான்கு கிணறுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இங்கு வாழும் 298 வரையான குடும்பங்களும் குடிநீர் முதல் கொண்டு ஏனையதேவைகளுக்கான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

நாங்கள் எங்கள் சொந்த நிலத்தில் எந்த வரட்சிக் காலங்களிலும் தாக்குப்பிடிக்கக்கூடிய வகையில் கிணறுகளையும் வசதிகளையும் கொண்டு வாழ்ந்த எங்களை எங்களின் நிம்மதிகளை சிதைக்கும் வகையிலும் கஷ்டப்படுத்தும் வகையிலும் இவ்வாறு நலன்புரி நிலையத்தில் தங்க வைத்துள்ளனர்.

இதனால் குடிநீர் முதல் தொடங்கி தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரம் எல்லாவற்றுக்கும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(2-315)

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய இருவருக்கு தலா 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் உழவு இயந்திரத்தில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இரண்டு பேரையும் உழவு இயந்திரங்களையும் கைது செய்து வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த இரண்டு சாரதிகளையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 30ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இரண்டு பேரும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த நபருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(கண்டாவளை)

கிளிநொச்சி திருநகர் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டபோதும், மீளவும் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 75ஆயிரம் ரூபா தண்டப் பணம் நீதிமன்றினால் விதிக்கப்படட்டுள்ளது.

கிளிநொச்சி திருநகர் பகுதியில் ஒரு போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றினூடாக தண்டிக்கப்பட்டு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்ட நிலையில் மீளவும் 20 போத்தல்கள் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்ட குறித்த நபர் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த நபருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வலைப்பாடு கிராமத்திலுள்ள குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுங்கள்

## பெண்கள் அமைப்புக்கள் கோரிக்கை

பூநகரி வலைப்பாடு கிராமத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை வரட்சி நிவாரணம் எதுவும் வழங்கப் படவில்லையெனவும் இதனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள வலைப்பாடு கிராமத்தில் சுமார் 200இற்கும மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றபோதும் 75 வரையான குடும்பங்களுக்கு மட்டுமே வரட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய குடும்பங்களுக்கு இதுவரை நிவாரண உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ள இப்பகுதி மக்கள் வலைப்பாடு கிராமமானது முழுமையாகவே வரட்சியினால் பாதிக்கப்பட்ட ஒரு கிராமமாகும். எனவே இப் பகுதி உள்ள சகல குடும்பங்களுக்கும் வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்ற நிலையில் 75 வரையான குடும்பங்களுக்கு மட்டுமே இந்த நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே ஏனைய குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என இப்பகுதி பெண்கள் அமைப்புக்கள்,மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் என்பன கோரிக்கை விடுத்துள்ளன.(2-315)




# கலைஞர்கள் தங்கள் கலைத்திறனால் போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர்

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

தமிழ் இனத்தின் இருப்பிற்கும் தமிழ்த்தேசியத்தின் இருப்பிற்கும் இன்றியமையாதிருப்பது கலைகளே என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் தமிழ்த்தாய் கலாமன்றத்தின் மண்வாசனை இறுவெட்டு நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு இறுவெட்டை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எமது இன விடுதலைப் போராட்டத்திற்கு கலைகளும் கலைஞர்களும் ஆற்றிய பங்கு மகத்தானது. போராட்டம் நடந்த காலங்களில் கலைஞர்கள் தங்களின் கலைத்திறனால் போராட்டத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்று போராட்டத்தை மேலும் வலுச் சேர்த்தார்கள்.

யுத்தம் முடிவுற்ற தன் பின்னர் எமது கலை கள் முடிவுறவில்லை என் பதை தமிழ்த்தாய்க் கலாமன்றத்தினர் எடுத்தியம்பி நிற்கின்றார்கள்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், வடக்கு மாகாணசபையின் பிரதித் தவிசாளர் கமலேஸ்வரன் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் துணுக்காய், மாந்தை பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார், மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் தமிழ்த்தாய் கலாமன்றத்தினரின் தமிழர்களின் பாரம்பரிய மற்றும் யுத்தகால வாழ்வுகளை சித்தரிக்கின்ற "மண்வாசனை" இறுவெட்டு வெளியீடு நேற்று முன்தினம் நடைபெற்றது.தமிழ்த்தாய் கலாமன்றத்தினரின் இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞாகுணசீலன்,வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு இறுவெட்டை வெளியிட்டு வைத்தனர் இறுவெட்டிலுள்ள பாடல்கள் மேடையில் நேரடியாகவும் பாடப்பட்டது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் 2 ம் லெப்.மாலதி நினைவு தினமும் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு அலுவலக வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# 2ம் லெப்.மாலதி நினைவுதினம் புதுக்குடியிருப்பில் அனுஷ்டிப்பு

(பனிக்கன்குளம்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு அலுவலக வளாகத்தில் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் 2ம் லெப் மாலதியின் 30 ஆவது ஆண்டு நினைவு தினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

கைவேலி பெண்கள் அமைப்பை சேர்ந்த எம்.பி.ராஜேஸ்வரி தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 2ம் லெப் மாலதியின் நினைவாக பொதுச் சுடரினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தி.கிந்துஜன் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து .கேப்பாபிலவு முள்ளிவாய்க்கால் கைவேலி ஆகியவற்றின் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து கைவேலி பெண்கள் அமைப்பின் பிரதிநிதி சிறிரஞ்சினி திருவுருவப் படத்திற்கு மலர்.மாலை அணிவித்ததை தொடர்ந்து அகவணக்கமும் மலரஞ்சலியும் இடம்பெற்றது.

தொடர்ந்து கைவேலி பெண்கள் அமைப்பை சேர்ந்த எம்.பி.ராஜேஸ்வரி தலைமை உரை நிகழ்த்தினார். இதன் போது இன்று பெண்களாக நாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் இன்று அரசியலில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அதிகரிக்கவும் வித்திட்டது தமீழீழப் பெண்களின் எழுச்சி என தெரிவித்தார்.

தொடர்ந்து சிறப்புரையினை கைவேலி பெண்கள் அமைப்பின் பிரதிநிதியும் அறநெறி ஆசிரியையுமான மல்லிகா நிகழ்த்தினார். அவர் உரைநிகழ்த்துகையில், தமிழ்த்தேசியத்தில் பெண்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியம் என்பதனை எமது முன்னாள் போராளிகள் எடுத்துக் காட்டினார்கள் என தெரிவித்தார். (2-281)




# காளான் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

## வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் அதிகளவு விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.இதனடிப்படையில் தேசிய விவசாயிகள் வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட விவசாய திணைக்களத்தின் அனுசரணையுடன் பெரியார்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள காளான் வளர்ப்பு செய்கைக்கான சத்தியம்மா எனும் செய்கையாளர் இல்லத்தில்,காளான் வளர்ப்பு தொடர்பானவிழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் அதிகளவு பெண்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், எதிர் வரும் காலங்களில் அதிகளவு புரதச்சத்தைக் கொண்டதும் சேதனமுறையில் உற்பத்தி செய்யக்கூடிய காளானைதாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

வவுனியாமாவட்டத்தில் கடந்த காலங்களில் விவசாயத் திணைக்களத்தின் மானிய உதவிகள் மூலம் சுமார் நாற்பது விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், இவர்கள் நேரடியாக விவசாயத் திணைக்களத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் காளான் விற்பனைக்குசிறந்த சந்தைவாய்ப்பு உள்ளதாகவும்,நுகர்வோர் மத்தியில் அதிகளவு கேள்வி உள்ளதாகவும் தெரிவித்தார். எதிர்காலத்தில் காளான் வளர்ப்பு சங்கங்களை உருவாக்கிஅ தன் மூலம் நிலையான சந்தை வாய்ப்புக்களை பெற்று தருவதற் கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2)

# வவுனியாவில் 200 ஏக்கர் பரப்பில் பெரும்போகத்தில் உழுந்து செய்கை



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பெரும் போகத்தில் 200 ஏக்கர் பரப்பில் உழுந்து செய்கை பண்ணப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரி வித்துள்ளார்.

சுய. விதை உற்பத்தி, வர்த்தக உற்பத்தி ஆகிய நோக்கங்களில் விதை உழுந்து விவசாயிகளிற்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

தேசிய விவசாயிகள் வாரத்தினை முன்னிட்டு கடந்த 6 ஆம் திகதி பம்பை மடு விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்டபட்ட இராசேந்திரன் குளத்தின் கீழ் நான்கு சில்லு உழவு இயந்திரத்துடன் பொருத்தப்படும் விதையிடும் கருவிமூலம் எட்டு ஏக்கர் பரப்பில் உழுந்து செய்கை பண்ணப்பட்டது. தொடர்ந்து மருதமடு பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் பரப்பில் சோளம் செய்கை பண்ணப்பட்டது.

இத்திட்டமானது வவுனியா மாவட்ட பிரதி மாகாணவிவசாயத் திணைக்கள, உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு பொறுப்பான உத்தியோகத்தர் அ.சுஜேந்திரா தலைமையில் விவசாய போதனாசிரியர்களான க.சுதர்சினிதேவி, எம்.ஜே.பி.கஜால் ஆகியோரின் பங்களிப்புடன் நடத்தப்பட்டது. (2)

# தேசிய விவசாயிகள் வாரத்தையொட்டி பழமரக்கன்றுகள் விற்பனை சேவை

## வவுனியாவில் இன்று

தேசிய விவசாயிகள் வாரத்தினை முன்னிட்டு வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களமானது பல்வேறு வகையான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதனடிப்படையில் அரச திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பயனடையக்கூடிய வகையில் நடமாடும் பழமரக்கன்றுகள் விற்பனை சேவையொன்றை வவுனியா மாவட்ட விவசாய திணைக்களம் நடத்த திட்டமிட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக வளாகங்களில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் குறித்த விற்பனை சந்தை நடைபெற உள்ளது.

இங்கு தரமான பழமரநாற்றுக்கள், பொதி களில் உள்ள மரக்கறி நாற்றுக்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

"விளைச்சல் பெருகிட அனைவரும் ஒருமித்து எழுவோம்" எனும் தொனிப்பொருளுக்கமைய,அனைவரும் இந்த நடமாடும் சந்தை சேவையில் இணைந்து பயனடையுமாறு அவர் கேட்டுள்ளார். (2)



மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணிக்கும் வீதியில் உள்ள ஒலுமடு பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த நிலையில் டிப்பர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளான நிலையில் தெய்வாதீனமாக எவருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத போதும் டிப்பர் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதைப் படத்தில் காணலாம். இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 45 மணியளவில் நடைபெற்றது. (படம்:- மல்லாவி செய்தியாளர்)

# ரம்பைப்புல் விதைகளின் பரம்பலை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை மகிழங்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட விளக்கு வைத்தகுளம் கிராமத்தில் 6 அடிக்கும் மேலாக வளர்ந்து வரும் ரம்பைப்புல் எனப்படும் ஒரு வகை புல் கிராமத்தில் அனைத்து இடங்களிலும் மிக வேகமாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தகாலத்தில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசமாக காணப்பட்ட இக் கிராமத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தால் இப் புல் வளர்க்கப்பட்டதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்புல்லின் அதிக வளர்ச்சியினால் விவசாய செய்கைகள் மேற்கொள்ள முடியாதுள்ளதுடன் யானைகள் மற்றும் காட்டு மிருகங்களின் அட்டகாசமும் இக் கிராமத்தில் அதிகமாக உள்ளது என கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

மனிதர்களை மறைக்கும் அளவிற்கு உயரமாக வளரக்கூடிய இப்புல்லினால் திருடர்களின் அச்சுறுத்தல்கள் காணப்படுவதாகவும் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர், சிறுமியர்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் உள்ளதெனவும் இம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விசமிகளினால் இப்புல்லிற்கு தீ வைத்தால் தமது வளவுகளில் உள்ள பயன்தரு பயிர்கள் அழிவடைவதாகவும் அப்புல்லினை அழித்தாலும் மிக வேகமாக காற்றின் மூலம் அதன் விதைகள் பரப்பப்பட்டு மீண்டும் வளர்ந்து தமது கிராமத்தினை முழுமையாக ஆக்கிரமித்து வருவதாகவும், ஏனைய இடங்களுக்கும் பரவும் நிலை உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.ஆதலால் சம்பந்தப்பட்டவர்கள் இக்கிராமத்திற்கு வருகை தந்து இதனை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென மக்கள் கோருகின்றனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## கருஞ்சீரகம்

Botonical Name- Nigella sative
Family- Ranunculaceae
Engl- Black Cumin
Sinh- Kaludura

ஓராண்டு வாழும் செடி. 35-50 செ.மீ உயரம் வளரக்கூடியது. செடியின் மேல் பகுதியிலேயே கிளை கள் காணப்படும். 6-10 செ.மீ நீளமான, ஒன்று விட்ட இலையமைப்புக் கொண்டிருக்கும். மெல்லிய சோணையான இலைகள். பழத்தினுள் கறுப்பு நிற முக்கோண வடிவ விதைகள்.

இச் செடியானது இலங்கையில் வளரக்கூடியதல்ல ஆனாலும் விதைகளை தமிழ் மருந் துக் கடைகளில் வாங்க லாம். விதைகள் மருத்துவ குண மிக்கவை.

இரத்தத்திலுள்ள அதிகரித்த கொலஸ்ரோலை கட்டுப்படுத்தக்கூடியது. இதனை விட கருஞ்சீரக விதைகளிலிருந்து எடுக் கும் கருஞ்சீரக எண்ணெய் கெட்ட கொலஸ் ரோலை நல்ல கொலஸ் ரோலாக மாற்றும் ஆற்றலுடையது. இதன் கரிய சிறிய விதை களுக்கு வயிற்று வாயு அகற்றல், சிறுநீர் பெருக்குதல், மாதவிடாய் உண்டா க்குதல், தாய்ப்பால் மிகுத்தல், நுண்புழுக் கொல் லுதல், வரட்சியகற்றுதல் போன்ற மருத்துவப் பண்புகளும் உண்டு.

❖ கருஞ்சீரக பொடி 5 கிராம் பழச்சாற்றில் கல ந்து கொடுக்க குடற்புழுக்கள் வெளியேறும்.

❖ 5 கிராம் கருஞ்சீரகத்தை நீரில் அரைத்து தேன் கலந்து கொடுக்க நெஞ்சடைப்பு, பெருமூச்சு, கல்லடைப்பு ஆகியவை தீரும்.

❖ கருஞ்சீரகத்தை எலுமி ச்சம்பழச்சாற்றில் எலுமிச்சம்பழச்சாறு அல்லது நல் லெண்ணெயில்



அரைத்து பற்றுப் போடப் படைகள் தீரும்.

❖ கருஞ்சீரகத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைதுப் பற்றுப் போட வீக்கம் குறையும்.

❖ கருஞ்சீரகப் பொடி 2 கிராம் அளவு மோரில் கலந்து கொடுக்க தொடர் விக்கல் குணமாகும்.

❖ கருஞ்சீரகத்தை தயிர் சேர்த்து அரைத்து, உட லில் அரிப்பு உள்ள இடங்களில் தடவி வந்தால் படை, சொறி, சிரங்கு போன்றவை மறையும்.

❖ கருஞ்சீரகம் 100 கிராம் எடுத்து பொடி செய்து தேங்காய்ப்பால் 500 மில்லி சேர்த்து கொதிக்க வைத்து கடை சியாகக் கிடைக்கும் வண்டலை தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி தைலமாக்கி, புண்கள் மீது தடவினால் புண்கள் உடனே ஆறும்

❖ கருஞ்சீரகம் 2 கிராம் அளவு தினம் 2 வேளை 3 நாட்கள் பனை வெல்லத்துடன் சேர்தது சாப்பிட தடைப்பட்ட மாதவிலக்கு உடனே வெளிப் படும்.

❖ 100 கிராம கருஞ்சீரகத்தை 500 மில்லி நெல்லிக்காய் சாற்றில் ஊற வைத்து, உலர்த்தி பொடி செய்து தினமும் 2 கிராம் அளவு அதிகாலையில் சாப்பிடுவர அதிகரித்த பித்தம் தணியும்.

❖ கருஞ்சீரகத்தை நல்லெண்ணையில் போட்டுக் காய்ச்சி தைலமாக்கி நாட்பட்ட தோல் நோய்களுக்கு பூசி வர குணமாகும்.

❖ கருஞ்சீரகத்தை பொன் . னாங்காணிச் சாற்றில் ஊற வைத்து அரைத்து தினமும் 2 கிராம் அளவு சாப்பிட்டு வர கண் பார்வை கூர்மை யாகும்.

❖ நீர்கோவை/பீனிச் சத்திற்கு கருஞ்சீரகம், சுக்கு (தோல் சுரண்டவும்) இரண் டும் 50 கிராம் வீதம் எடுத்து பொடி செய்து அரித்து 2 கிராம் அளவு காலை, மாலை சாப்பிட்டுவர மேற்படி நோய் நிலைமை குணமாகும்.

❖ தோலில் கொப்புளங்கள் காணப்பட்டால் கருஞ்சீரக விதைகளை நல்லெண்ணெய் சேர்த்து அரைத்து பூச வேண்டும்.

❖ கருஞ்சீரக விதைகளை வாலை இயந்திரத் தில் இட்டு கருஞ்சீரக தீனீர் வடித்து அத் தீனீரை முகர்ந் தால் அல்லது பூசினால் தலை நோய், மூக்குநீர் வடி தல், பீனிசம் குண மாகும்.

❖ கருஞ்சீரக விதை களை வெந்நீர் விட்டரைத்து கீல்களில் ஏற்படும் வீக் கத்திற்கு பற்றிட கீல் வீக்கம் குணமாகும்.

❖ கருஞ்சீரகப் பொடி 2 கிராம் அளவு 30 மில்லி நொச்சிக்குடி நீருடன் கலந்து காலை மாலை 3-5 நாட்கள் எடுத்து வர பீனிசம், காய்ச்சல் (சுரம்) தணியும்.

❖ கசகசா, கருஞ்சீரம், காட்டுச்சீரகம் ஒரேயளவாக எடுத்து பொடித்து அரித்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து உடலில் எப்பகுதியில் அரிப்பு ஏற்பட்டாலும் பூசிவர அரிப்பு குணமாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



# பிரதமர் ரணில் - பின்லாந்து அமைச்சர் சந்திப்பு

(ஹெல்சின்கி)

பின்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அந்நாட்டின் சமூக அலுவல்கள் மற்றும் சுகாதார அமைச்சர் திருமதி பிர்க்கோ மற்றிலாவுக்கும் இடையில நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பின்லாந்தின் சுதந்திரத்திற்கு பின்னரான 100 ஆவது வருடத்தில் தமது நாட்டுக்கு வருகைதந்தமையை விசேடமாக கௌரவிப்பதாக திருமதி பிர்க்கோ மற்றிலா (Pirkko Mattila) குறிப்பிட்டார்.

ஜனநாயகம்மனிதஉரிமை சமூக சமநிலை, கல்வி சுகாதாரம் ஆகிய துறைகளில் இலங்கைக்கும் பின்லாந்திற்கும் இடையில் இருந்துவரும் அடிப்படை சமமானதாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அபிவிருத்தி மற்றும் தொழிற்றுறைகளில் இரு நாடுகளுக்கிடையிலுள்ள தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.



ஹெல்சின்கி நகரில் அரச விருந்தினர்களுக்கான விருந்துபசார மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பின்லாந்திலுள்ள சுகாதாரத் துறையுடன் தொடர்புபட்ட முக்கிய பிரதிநிதிகளும்கலந்து கொண்டனர்.

இரண்டு நாடுகளின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் சுகாதாரத்துறையுடன் தொடர்புபட்ட பல விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இலங்கை சுகாதார அமைச்சும், சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவும் சுகாதாரத்துறை தொடர்புகளை உறுதிசெய்வதற்கு வழங்கிவரும் ஒத்துழைப்பு குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பின்லாந்திற்கும் இலங்கைக்கும் இடையில் சுகாதாரக் கல்வி இலவச சுகாதார சேவை தொடர்பில் நீண்டகால வரலாறு உண்டு. இவற்றில் வரலாற்று அனுபவங்களுடன் இந்தச் சேவைகளை பயனுள்ளதாக முன்னெடுத்து தற்போதைய காலத்திற்கேற்ற வகையில் வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் துறைமுகம் மற்றும் கப்பல் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க, கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவாசம், பிரதமரின் செயலாளர் சமன் ஏக்க நாயக்க, நிதி அமை ச்சின் செயலாளர் கலாநிதி எச்.எவ். ஆர்.சமரசிங்க, பின்லாந்தின் இலங்கை க்கான தூதுவர் ஜயந்த பொலிப் பான, பிரதமரின் மேலதிக செயலாளர் சமன் அதாவுத ஹெட்டி, தொழிற்றுறை சபை யின் மேலதிக செயலாளர் சுரேஸா பெர்னாண்டோ, பிரதமரின் விசேட உதவியா ளர் சென்றா பெரேரா, இலங்கை க்கான பின்லாந்து கவுன்சிலர் ஜெனரல் எமோஸ் சிறில் டேவிட் ஜிலென் போகல, இலங்கைக்கான பின்லாந்து கவுன் சிலர் ஜெனரல் அஸ்ரப்குமார், இலங்கை பின்லாந்து வர்த்தக பேரவையின் தலைவர் ஜயந்த சமரக்கோன், சர்வதேச நிறுவத்தின் பணிப்பாளர் சுரேஸ் சுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-7)

# விவசாயத்திலும் அரசியலிலும் விசம் கலந்துள்ளது- தமிழரசு



(கொழும்பு)

இயற்கையை அனுசரிக்காமல் விவசாயம் எவ்வாறு விசமாக மாறிப்போனதோ அது போன்றே எமது நாட்டின் இயற்கையை அனுசரிக்காத காரணத்தினால் எமது நாட்டின் அரசியலும் விசமாக மாறியுள்ளது.

விசம் கலந்த நம்முடைய நாட்டின் அரசியலை விசமற்ற அரசியலாக ஆக்குகின்ற செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

. விவசாய செயற்பாட்டினை மேம்படுத்தும் முகமாக ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட உணவு உற்பத்தி ஆண்டு திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இயற்கையை அனுசரிக்காமல் வேறு பாதைக்குச் சென்ற விவசாயத்தைத் தற்போது மீண்டும்இயற்கையை நோக்கியதாக ஆக்குகின்ற நிலைமையை எந்தளவிற்கு நாங்கள் அனுசரிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதேபோன்று, விசம் கலந்த நம்முடைய நாட்டின் அரசியலை விசமற்ற அரசியலாக ஆக்குகின்ற செயற்பாட்டிலும் அனுசரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

அதனடிப்படையில் தான் நல்லாட்சி என்கின்ற அரசு மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகவும் கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்த ஆட்சியிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்களும் சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்று அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 12 செவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/ இத்தாலி PR
தொ.இ: B/7856

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 21
தகைமை/தொழில்:O/L/அரச தொழில்
தொ.இ: B/7857

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்: வெல்டிங்
தொ.இ: B/7858

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 12 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி லண்டன் PR
தொ.இ: B/7860

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 57 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
தொ.இ: G/7896

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA/அரச தொழில்
தொ.இ: G/7102

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 42 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, MSc, QS/ விரிவுரையாளர்
தொ.இ: G/7103

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 13 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/7104

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைபேசித் தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## யாழ்ப்பாணம் மாநகரசபை பொதுசன தொடர்பு அதிகாரியும் தகவல் வழங்கும் அலுவலரும் ஆகிய நான் நன்றி தெரிவிக்கின்றேன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சனசமூக நிலைய மேற்பார்வை உத்தியோகத்தராகவும், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தராகவும் தகவல் வழங்கும் அலுவலராகவும் கடமையாற்றி 10.10.2017 ஆம் திகதி ஒய்வுபெற்றுச் சென்ற **திரு.ச.லோகசிவம்** ஆகிய நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

பல்லாயிரம் மக்கள் மனதில் இடம் பெற்றுத்தர காரணமாகிய எனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் என்னை இந்த மண்ணில் அடையாளப்படுத்தி எனக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் சனசமூக நிலைய உத்தியோகத்தர் பதவி வழங்கிய எனது மதிப்பிற்குரிய முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரும், வடக்கு மாகாண சபை அவைத்தலைவருமான கௌரவ திரு.சீ.வீ.கே.சிவஞானம் அவர்களுக்கும் பின் எனக்கு மீளவும் அப்பதவியில் அமர காரணமாகிய முன்னாள் ஆணையாளர் உயர்திரு.பொ.பாலசிங்கம் அவர்களுக்கும் அப்போதைய ஆணையாளர் கௌரவ திரு.சீ.வீ.கே.சிவஞானம் அவர்களுக்கும் அதன்பின் எனக்கு பொதுசனத் தொடர்பு உத்தியோகத் தராகவும் தகவல் வழங்கும் உத்தியோகத்தராகவும் பதவி வழங்கிய எனது மதிப்பிற்கும் அன்பிற்குரியவர்களுக்கும் தற்போதைய யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் திரு.பொ.வாகீசன் மற்றும் பிரதி ஆணையாளர் திரு.ஆ.சீராளன் அவர்களுக்கும் என்னோடு சேர்ந்து எனக்கு உறு துணையாக இருந்த பொதுசனத் தொடர்புப் பகுதி மற்றும் ஆணையாளர் பகுதி, அலுவலக உத்தியோகத்தர்கள், மாநகர சபை அதிகாரிகள், உத்தியோக்த்தர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் சனசமூக நிலைய நிர்வாகிகள், பத்திரிகை நண்பர்கள், சைவசமய விவகாரக்குழு நிர்வாகிகள், யாழ்.மாநகரசபை முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவானாகப்பதவிக்கு வழிகோலிய நாடாளுமன்ற உறுப்பினர்கௌரவ திரு. சி.சிறீதரன் அவர்களுக்கும், நல்லூர் வாழ் மக்கள், வரியிறுப்பாளர்கள், யாழ். மாநகர சபை ஆலோசனை சபையினர், என்னை வாழ்த்திய மாநகர சபை நண்பர்கள், ஏனைய நண்பர்கள் மற்றும் முகநூலில் வாழ்த்திய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்புடன்,
திரு.ச.லோகசிவம் J.P

(950)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# தமிழக மீனவர்கள் மீது இந்திய கடற்படை தாக்குதல்



(நாகை)

இலங்கையில் இருந்த படகுகளை மீட்கச் சென்ற தமிழக மீனவர்கள் மீது இந்தியக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை வசம் இருந்த படகுகளை மீட்க சென்றபோது, தமிழக மீனவர்களுக்கு போதிய எரிபொருள் வழங்கப்படவில்லை. அதே சமயம் இந்திய கடலோரப் பகுதியை நோக்கி திரும்பி வந்து கொண்டிருந்த போது, வழியில் ஒரு படகு பழுதாகி நின்றதால் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக மீனவர்களுக்கும், இந்திய கடற்படை வீரர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதத்தில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை இந்திய கடற்படை வீரர்கள் தாக்கியுள்ளனர்.

மேலும், பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வலைகளையும் இந்திய கடற்படை வீரர்கள் சேதப் படுத்தியதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது.

இந்திய கடற்படைத் தாக்குதலில் காயமடைந்த மீனவர்கள் நாகை அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களை இந்திய கடற்படையினர் தாக்கிய சம்பவத்தால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (8)

# இலஞ்சம் கேட்பவர்களை செருப்பால் அடியுங்கள்

## தெலுங்கானா முதலமைச்சர் பரபரப்பு பேச்சு



(ஐதராபாத்)

இலஞ்சம் கேட்கும் அதிகாரிகளை செருப்பால் அடியுங்கள் என்று தெலுங்கானா மாநில முதலமைச்சர் கே.சந்திரசேகர ராவ் தெரிவித்தார்.

ஆந்திராவில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்ட தெலுங்கானா மாநிலத்தில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி தலைவரது நிறுவனத்தில் பெருமளவில் ஊழல் நடப்பதாக மாநில முதலமைச்சரிடம் தொழிலாளர்கள் முறையிட்டனர்.

அதைக்கேட்ட முதலமைச்சர் கே.சந்திரசேகர ராவ், தொழிலாளர்களிடையே பேசியதாவது.

இங்கு எல்லாவற்றுக்கும் அதிகாரிகள் இலஞ்சம் கேட்பதாக புகார் வந்துள்ளது.

உடல்நலக்குறைவு என வைத்திய சான்றிதழ் பெறுவதற்கு ரூ.6 இலட்சம் இலஞ்சம் தர வேண்டியுள்ளது.

காய்ச்சல் காரணமாக விடுமுறை பெறுவதற்குக்கூட அதிகாரிகளுக்கு இலஞ்சம் அளிக்க வேண்டிய நிலையுள்ளது.

ஊழியர் குடியிருப்பை மாற்றுவதற்கும் இலஞ்சம் கேட்பதாக தெரிகிறது.

ஆனால், இன்று முதல் யாரும் இலஞ்சம் கொடுக்க வேண்டாம். எந்த அதிகாரியாவது இலஞ்சம் கேட்டால், அவரை செருப்பால் அடியுங்கள். இலஞ்சம் கொடுப்பவர்களையும் செருப்பால் அடியுங்கள் எனத் தெரிவித்தார்.

அவரது பேச்சு, அதிகாரிகளிடையே சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

நிலக்கரி சுரங்க தொழிலாளர்கள் பிரச்சினையில் கடந்த 40 மாதங்களாக உரிய கவனம் செலுத்தாததற்காக, தொழிலாளர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும் சந்திரசேகர ராவ் தெரிவித்திருந்தார். (8)

# பா.ஜ.க அலுவலகத்தில் பயங்கர ஆயுதங்கள் பறிமுதல்





(திருவனந்தபுரம்)


கேரள மாநிலம் கண்ணூர் மாவட்ட பா.ஜ.க அலுவலகத்தில் இரும்பு குண்டுகள், உடைவாள் உள்ளிட்ட பல பயங்கர ஆயுதங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில பா.ஜ.க மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இடையே அடிக்கடி மோதல் நடைபெற்று வருகிறது. பா.ஜ.க. தொண்டர்களை இடதுசாரிகள் தாக்குவதாக கூறி அக்கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா அம்மாவட்டத்தில் பேரணி நடத்தினார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த பேரணியில் பா.ஜ.கவின் பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆனால், போதியளவு மக்கள் ஆதரவு இல்லாததால் இந்த பேரணி பல இடங்களில் பிசுபிசுத்தது. இதற்கிடையே, இதே மாவட்டத்தில் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை கண்டித்து பானூர் பகுதி மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டன பேரணி நடத்தினர்.

பேரணி பானூர் சந்திப்பை அடைந்த போது திடீரென ஒரு கும்பல் பேரணியாக வந்தவர்கள் மீது வெடிகுண்டு வீசியது. இதில் பொலிஸார் உட்பட 18 பேர் பலத்த காயமடைந்தனர்.

இந்நிலையில், பா.ஜ.க மாவட்ட அலுவலகத்தில் நேற்று பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர். சோதனையின் போது அங்கிருந்த இரும்பு குண்டுகள், உடைவாள் உள்ளிட்ட பயங் கர ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றினர். மேலும், இது தொடர்பாக விசாரணை நடத்திவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8)

# இந்தியாவுடன் இ அமைதியைப் பேணு



(பீஜிங்)

நாதுலா எல்லை பகுதிக்கு இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் பயணம் மேற்கொண்டதை தொடர்ந்து, இந்தியாவுடன் இணைந்து எல்லையில் அமைதியைப் பேணுவதற்கு தயாராக இருப்பதாக சீனா அறிவித்துள்ளது.

காஷ்மீரில் இருந்து அருணாசலப் பிரதேசம் வரை 3,488 கி.மீ. தூர எல்லையை இந்தியாவும், சீனாவும் பகிர்ந்து கொண்டுள்ளன.

இதில் 220 கி.மீ. பகுதி சிக்கிம் மாநிலத்தில் வருகிறது. இங்குள்ள டோக்லாம் எல்லையில் இந்திய-சீன படைகள் இடையே அண்மையில் மோதல் ஏற்பட்டு பதற்றம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் சிக்கிமையும், சீனாவின் தன்னாட்சி பிரதேசமான திபெத்தையும் இணைக்கும் 'நாதுலா' எல்லைப்பகுதியை இராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் முதல் முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

அங்கு அசல் எல்லைக்கோட்டுக்கு சென்ற அவர், அங்கு பணியில் இருந்த சீன

# அமெரிக்க ஜனாதிப்தி ட்ரம்பால் மூன்றாம் உலகப் போர் மூளும்

## அமெரிக்க எம்.பி. கருத்து



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சர்ச்சைக்குரிய கருத்துகளால் மூன்றாம் உலகப் போர் மூளும் ஆபத்துள்ளது என்று ஆளும் குடியரசு கட்சியின் மூத்த எம்.பி. பாப்கார்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "வடகொரியாவை முற்றிலும் அழித்து விடுவேன். அந்த நாட்டுடன் அமைதிப் பேச்சு நடத்துவதற்கு வாய்ப்பில்லை, இராணுவ நடவடிக்கை மட்டுமே ஒரே தீர்வு" என்று டுவிட்டரில் அவ்வப்போது கருத்துகளை பதிவிட்டு வருகிறார்.

அணு குண்டைவிட பல மடங்கு சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டை வடகொரியா அண்மையில் சோதனை செய்தது. மேலும் அமெரிக்காவின் குவாம் தீவு வரை பாய்ந்து செல்லும் திறன் கொண்ட அதிநவீன ஏவுகணைகளையும் சோதனை செய்துள்ளது.

இவை மட்டுமன்றி சீனாவும் ரஷ்யாவும் வடகொரியாவுக்கு மறைமுகமாக ஆதரவு அளித்து வருகின்றன.

இந்தப் பின்னணியில் அமெரிக்காவின் ஆளும் கட்சியான குடியரசு கட்சியின் செனட் சபை மூத்த எம்.பி. பாப் கார்கர், நியூயோர்க் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில், பயிற்சி ஜனாதிபதி போல டொனால்டட ட்ரம்ப் செயற்படுகிறார்.

டுவிட்டரில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டு வருகிறார். வடகொரியா குறித்த அவரது சர்ச்சை கருத்துகளால் 3ஆம் உலகப் போர் மூளும் அபாயம் உள்ளது' என்று அச்சம் தெரிவித்துள்ளார். (8)

# நான்தான்

## ட்ரம்பின் முதல் ம

(வோஷிங்டன்)

டொனால்ட் ட்ரம்பின் முதல் மனைவியான இவானா ட்ரம்ப், நான்தான் அமெரிக்காவின் முதல் பெண்மணி என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளார்.

ஜனாதிபதியின் மனைவிக்கு முதல் பெண்மணி என்ற அந்தஸ்து கிடைக்கும். தற்போது அமெரிக்காவில் ஜனாதிபதியாகப் பதவி வகுக்கும் டொனால்ட் ட்ரம்புக்கு 3 மனைவிகள். அவர்களில் ஒருவரை விவாகரத்து செய்து விட்டார்.

அவருடன் 3-வது மனைவி மெலானியா வாழ்ந்து வருகிறார். அவருக்கும் ட்ரம்புக்கும் பிறந்த ஒரு மகன் இருக்கிறான். எனவே இவருக்கு அமெரிக்காவின் முதல் பெண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ணைந்து எல்லையில் ...வதற்கு சீனா தயார்



வீரர்...டன் கைகுலுக்கி வெகு இயல்பாக உ...யாடினார். அப்போது சீன வீரர்களுக்கு 'நமஸ்தே' (வணக்கம்) சொன்ன நிர்மலா சீதாராமன், அதன் அர்த்தத்தையும் அவர்களுக்கு விளக்கினார்.

இது தொடர்பான படங்களும் வீடியோ பதிவுகளும் இரு நாட்டு ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன.

நிர்மலா சீதாராமனின் இந்த இணக்கமான அணுகுமுறை சீனாவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இது தொடர்பாக அந்நாட்டு ஊடகங்கள் அனைத்தும் நேர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக இந்திய-சீன 'எல்லை விவகாரத்தில் அமைதியை மேம்படுத்த விரும்புவதாக சீனா அறிவித்துள்ளது.

டோக்லாம் விவகாரம் தொடர்பாக இந்தியா-சீனா இடையே அடிக்கடி மோதலும், பதற்றமும் ஏற்பட்டு வரும் நிலையில், சீனாவின் இந்த அறிவிப்பு அங்கு அமைதிக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (8)

## கலிபோர்னியாவின் 8 நகரங்களில் பற்றி எரியும் காட்டுத்தீ;10 பேர் பலி!

(கலிபோர்னியா)

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் 8 நகரங்களில் எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீயில் சிக்கி இதுவரை 10 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத்தீ பரவி வருகிறது. அங்குள்ள நபா, சோனோமா, யுபா, மென்டோசினோ உள்ளிட்ட 8 நகரங்களில் காட்டுத்தீ எரி...து.

...பகுதிகளில் திராட்சைப்பழம் அதிகளவில் விளைகின்றன. எனவே இங்கு வைன் தொழிற்சாலைகள் பெருமளவில் உள்ளன. இங்கு வரட்சி நிலவுவதால் வனப்பகுதியில் தீ பிடித்தது. பலத்த காற்று காரணமாக தீ நகரப் பகுதிகளுக்கும் பரவுகிறது.

எனவே வனப்பகுதிகளை ஒட்டி தங்கியிருக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற்போது கலிபோர்னியாவில் 8 நகரங்களில் காட்டுத்தீ எரிந்து கொண்டிருக்கிறது.

தீயை அணைக்கும் பணியில் ஏராளமான தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காற்று வேகமாக வீசுவதால் தீ பரவுவதை கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே 1500 கட்டடங்கள் மற்றும் வீடுகள் தீயில் எரிந்து சேதம் அடைந்துள்ளன. 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீயில் சிக்கி இதுவரை 10 பேர் பலியாகியுள்ளனர். அதில் சோனோமா நகரப் பகுதிகளில் மட்டும் 7 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் நபாவில் 2 பேரும், மெடோ சினோவில் ஒருவரும் அடங்குவர். பலர் காயம் அடைந்துள்ளனர். ஏராளமானோரை காணவில்லை. ஒரு பள்ளத்தாக்கில் மட்டும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பகுதி தீயில் எரிந்து கருகியுள்ளது.

இந்தக் காட்டுத்தீ சம்பவத்தை தொடர்ந்து கலிபோர்னியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கலிபோர்னியா மாகாணத்தில் 14 இடங்களில் எரியும் காட்டுத்தீயால் 70 ஆயிரம் ஏக்கர் எரிந்து சாம்பலானது. கடந்த மாதம் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் பயங்கர காட்டுத்தீ பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. (8)

## ...ன் முதல் பெண்மணி

### ...னைவி போர்க்கொடி



மணி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு ட்ரம்பின் முதல் மனைவி இவானா எதிர்ப்பு தெரிவித்து போர்க்கொடி உயர்த்தியுள்ளார். அண்மையில் இவர் தான் எழுதிய ட்ரம்பின் எழுச்சி என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து ஒரு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், "பொதுவாக நான் தான் டொனால்ட் ட்ரம்பின் முதல் மனைவி. எனவே நான்தானே அமெரிக்காவின் முதல் பெண்மணி. அது சரிதானே" என்றார்.

மேலும் ட்ரம்ப் பற்றி கூறும்போது, "நான் என் முன்னாள் கணவர் ட்ரம்புடன் 2 வாரங்களுக்கு ஒருமுறை பேசுவேன். வெள்ளை மாளிகையின் நேரடி தொலைபேசி இலக்கம் என்னிடம் உள்ளது. ஆனால் அந்த இலக்கத்தில் நான் ட்ரம்புடன் பேச மாட்டேன். ஏனெனில் அங்கு மெலானியா இருக்கிறார். அவர் மீது எனக்கு பொறாமை எதுவும் கிடையாது என்றும் தெரிவித்தார்.

டொனால்டு ட்ரம்பை இவானா கடந்த 1977ஆம் ஆண்டு திருமணம் செய்தார். இவர்களுக்கு டொனால்ட் ஜூனியர், இவாங்கா மற்றும் எரிக் ட்ரம்ப் என்ற 3 குழந்தைகள் உள்ளனர். (8)

## டுபாயில் செயற்பாட்டிற்கு வந்தது

# பொலிஸாரே இல்லாத பொலிஸ் நிலையம்




(டுபாய்)

பொலிஸாரே இல்லாமல் முற்றிலும் இணைய வழியில் இயங்கக்கூடிய உலகின் முதல் ஸ்மார்ட் பொலிஸ் நிலையம் டுபாயில் செயற்பாட்டுக்கு வந்து ள்ளது.

'எஸ்.பி.எஸ்.' என பெயர் சுருக்கம் கொண்ட இந்த ஸ்மார்ட் பொலிஸ் நிலையத்தில், புகார் அளித்தல், போக்குவரத்து அபராதம் செலுத்துதல், விபத்து குறித்து பதிவு செய்தல், தேவையான ஆவணங்கள் பெறுதல் உள்ளிட்ட 60 சேவைகளை பொதுமக்கள் பெற முடியும்.

இந்த ஸ்மார்ட் பொலிஸ் நிலையத்தில் காத்திருப்பு பகுதி, கண்காட்சி பகுதி, சேவை பகுதி என 3 முக்கிய பிரிவுகள் உள்ளன.

இங்கு வரும் மக்கள், ஸ்மார்ட் பொலிஸ் நிலையத்தின் முகப்பு அறையில் வைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தில், தாங்கள் எந்த சேவையை பெற வந்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தி, அதற்கான சிட்டையைப் பெற்றுக் கொண்டு, காத்திருப்பு அறையில் காத்திருக்க வேண்டும். பின்னர் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் பொலிஸ் அதிகாரியை தொடர்பு கொண்டு தங்களுடைய புகாரை பதிவு செய்யலாம். காணொலிக்காட்சி மூலம் 24 மணி நேரமும் பொலிஸ் அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்.

ஸ்மார்ட் பொலிஸ் நிலையத்துக்கு வரும் மக்களின் உதவிக்காக தற்போது அங்கு 2 பொலிஸார் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இச்சேவையை மக்கள் முழுமையாக பயன்படுத்த தெரிந்துகொண்ட பின் பொலிஸார் இருவரும் அங்கிருந்து திரும்பப்பெறப்படுவார்கள். (8)

## அமெரிக்க பல்கலையில் துப்பாக்கிச்சூடு; பொலிஸார் ஒருவர் பலி!

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் டெக் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள லப்போக் நகரில் டெக்சாஸ் டெக் பல்கலைக்கழகம் உள்ளது. பல்கலைக்கழக வளாகத்திற்குள் பொலிஸ் நிலையமும் உள்ளது. இங்குள்ள பொலிஸார் பல்கலைக்கழக மாணவர்களை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபடுவதுடன், அவ்வப்போது மாணவர்களின் அறைகளிலும் சோதனை செய்வதுண்டு.

அவ்வகையில், மாணவர்கள் போதைப் பொருள் பயன்படுத்துவதாக கிடைத்த தகவலையடுத்து அவர்களின் அறைகளில் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட் கிழமை மாலை சோதனையிட்டுள்ளனர். அப்போது ஒரு அறையில் போதை மருந்துகள் மற்றும் அவற்றை பயன்படுத்தும் சாதனங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை பொலிஸார் கைப்பற்றினர். 3

மேலும் இது தொடர்பாக ஒரு மாணவனை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரித்தனர்.



அப்போது யாரும் எதிர்பார்க்காத வகையில், அந்த மாணவன் திடீரென துப்பாக்கியை எடுத்து பொலிஸ்காரை நோக்கி சுட்டுள்ளான்.

இதில் அந்த பொலிஸ்காரர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உடனடியாக அந்த மாணவன் துப்பாக்கியுடன் தப்பி ஓடிவிட்டான்.

இதனால் அப்பகுதி முழு வதும் பதற்றம் ஏற்பட்டது. இந்த தாக்குதல் பற்றி அறிந்ததும் பல் கலைக்கழக வளாகத்தில் தங்கி யிருக்கும் மாணவர்களுக்கு சமூக வலைத்தளங்கள் மூலம் தகவல் அனுப்பப்பட்டது. அத்துடன், யாரும் வெளியே வரவேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து பல்கலைக்கழக வளாகம் முழுவதும் பொலிஸ் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. தப்பி ஓடிய மாணவனை தேடி வருகின்றனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் நியாயத்தை அரசு புரிந்துகொள்ள வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் வலியுறுத்து

வவுனியா நீதிமன்றத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 3 தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதை எதிர்த்தும், தம்மை மீண்டும் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நேற்று முன்தினம் காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுதல் சட்டதிருத்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய செயலாளர் நாயகம், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் 3 கைதிகளும் தம்மை விசாரணைகளே இல்லாமல் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவில்லை. அநுராதபுரத்தில் தமது வழக்கு நடைபெற்றால் தாம் மொழிப் பிரச்சினையை எதிர்கொள்வதாகவும், வவுனியாவில் தமது வழக்கு நடைபெற்றால் தமது நியாயத்தை அல்லது சாட்சியத்தை தமிழ் மொழியில் முன்வைப்பதற்கு வசதியாக இருக்கும் என்றும் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தியே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையிலும் ஆராய்ந்து அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்து அரசாங்கத்தின் தேசிய நல்லிணக்க விருப்பத்தை எமது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.


இதேவேளை எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவோரின் சட்டவிரோதச் செயற்பாடுகள் எமது தொழிலாளர்களுக்கு தொடர்ந்தும் தொழில் பாதிப்புக்களையும், தொழில் உபகரணங்கள் பாதிப்பையும் ஏற்படுத்துவதாகவே அமைந்து வருகின்றன.

பல தடவைகள் இவ் விடயம் தொடர்பில் நான் இந்த சபையில் எல்லை தாண்டி வருவோரின் அத்து மீறல்கள் தொடர்பாகவும், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் அவர்கள் ஈடுபடுவதால் எமது கடல் வளத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தியுள்ளேன். ஆனாலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை

இதனால் தொழில் செய்ய முடியாமலும், தொழில் உபகரணங்கள் பாதிக்கப்பட்ட நிலையிலும் எமது கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர். இவ்வாறு தொழில் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்பட வேண்டும். அதே வேளை தொடர்ந்தும் எல்லை தாண்டி வருவதையும், தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில் உபகரணங்களைப் பாவிப்பதையும் கட்டுப்படுத்த இராச்சிய ரீதியில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

காப்புறுதி நிறுவனங்கள் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும்.

காப்புறுதித் திட்டங்கள் விவசாயிகளுக்கு இருப்பது போல, கடற்தொழிலாளர்களுக்கும் தெங்கு, பனந்தொழில் வல்லுநர்களுக்கும் காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமாகவுள்ளது. அத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக்குப் பாதுகாப்பாகவும் துரதிர்ஷ்டவசமாக சடுதியான தொழில் சார் அனர்த்தங்களும் மரணங்களும் ஏற்படும் பொழுது இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு அத்தொழிலாளர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த உதவியாக இருக்கும்



"தேசத்தின் பிள்ளைகளை நிதமும் பாதுகாப்போம்" என்ற தொனிப் பொருளில் சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 11 ஆயிரத்து 242 அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஏறத்தாழ 45 இலட்சம் 5 வயது முதல் 19 வயதான மாணவர்கள் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டுள்ளமை இந்நாட்டின் இலவசக் கல்வித் திட்டத்தில் இன்னுமொரு மைல்கல்லாகும். 'இத் திட்டத்தின் ஊடாக 24 மணித்தியாலயமும் செயற்படும் காப்புறுதித் திட்டமாக அமைந்திருப்பதுடன், அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் மாணவர்களுக்கு 30 நாட்கள் வரை தினமொன்றிற்கு 1000 ரூபா வழங்கப்படவிருப்பது மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இருந்தபோதும் கவர்ச்சியாக அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தக் காப்புறுதித் திட்டத்தின் நன்மைகளை பெற்றோர்கள் எவ்வாறு உரிய காலத்தில் பெற்றுக்கொள்வது என்பதற்கான செயற்பாட்டுப் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டு, இலகுவான வழிகாட்டல் பெற்றோருக்கு வழங்கப்பட வேண்டும்.

எனவே சுரக்ஷா காப்புறுதித் திட்டம் வெற்றிகரமாக அமையவும், மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையவும் வேண்டுமாக இருந்தால் பாடசாலைகளில் காப்புறுதிக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதிலும், வைத்தியசாலைகளில் உறுதிப்படுத்தல்களைச் செய்வதிலும் பெற்றோர் தேவையற்ற அலைச்சல்களைச் சந்திக்க நேர்ந்தால், மாணவர்களுக்கு காப் புறுதியின் பயன் கிடைக்காது.

இந்த நாட்டில் வரவேற்கத்தகுந்த பல மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தாலும், அந்தத் திட்டத்தைக் குறிக்கும் சந்தைப்படுத்தும் சொற்களானது உரிய தமிழ் வடிவத்தில் அரச ஆவணங்களில் குறிப்பிடப்படாத படியினால் தமிழ் பேசும் எமது மக்களால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியாதுள்ளது. கடந்த காலத்தில் "திவிநெகும" எனும் சொல் முன்வைக்கப்பட்டபோது அதை தமிழில் "வாழ்வின் எழுச்சி" என்று தமிழ் மொழியில் மாற்றியமைக்கும் எமது முயற்சி அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு தற்பொழுது நடைமுறையிலுள்ளமை தாங்கள் அனைவரும் அறிந்ததே.

இப்போது மாணவர்களுக்கான "சுரக்ஷா" அறிமுகப்படுத்தப்பட்டது வரவேற்கத்தக்கது. ஆனால் "சுரக்ஷா" என்பதன் அர்த்தத்தை விளங்கிக் கொண்டு தமிழ்பேசும் மக்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வசதியாக அந்தச் சொல் தமிழில் எவ்வாறு குறிப்பிடப்படுவது என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும். சிலர் "சுரக்ஷ" என்பதற்கு "உயிர்காப்பு" என்று கூறுகின்றார்கள் அது சரிதானா? என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக தற்போது நாட்டில் இருக்கும் காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி பெற்றுக்கொள்ளும் ஒருவர், தொடர்ந்து பணத்தை செலுத்த முடியாத நிலையேற்படும்போது, அதுவரை தன்னால் செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெற்றுக் கொள்ள ஏந்த வழிவகையும் உத்தரவாதமும் இல்லை. இந்த நிலைமை அமைச்சரால் கவனத்தில் கொள்ளப்பட்டு மக்கள் செலுத்தும் பணத் திற்கு காப்புறுதி நிறுவனங்கள் உத்தரவாதமளிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண் டும் என்றும் தெரிவித்தார்.(இ-7)

# ஜனாதிபதி- பிரதமர் வழங்கும் வாக்குறுதிகளை நம்ப வேண்டாம்

## மகாநாயக்க தேரர்களுக்கு கம்மன்பில அறிவுரை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நம்ப வேண்டாம் என்று மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரரிடம், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில ; புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்தின் நிலை தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் வழங்கியுள்ள உத்தரவாதம் குறித்து மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் தெரிவித்துள்ள கருத்து தமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும், பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை அகற்றுவதற்குமான அரசியல் நிகழ்ச்சி நிரலை மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் மனதில் கொள்ள வேண்டும்.

இனரீதியாக நாட்டைப் பிரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தை மகாநாயக்கர் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நாம் எவ்வழி; அவ்வழி நம்மவர்கள்

எனக்குத் தெரிந்த ஒருவர் தன் பிள்ளைகள் எந்த வீட்டிற்குப் போய்விட்டு வந்தாலும் அங்கே நடந்தவை பற்றி ஏகமாகக் குடைவார். உதாரணமாக,

அவங்க வீட்டில் ரெலிவிஷன் இருந்ததா? பிளக் அன்ட்வைற்றா, கலரா?என்பார். இது கூடப் பரவாயில்லை. அவங்க என்ன பேசிக்கிட்டாங்க? சண்டையா என்ன சண்டை? நீ இருக்கும் போது அலுமாரியைத் திறந்தாங்களா? அதில என்னெல்லாம் இருந்துச்சு? அந்த வீட்ல அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டாங்களா? என்பன போன்ற கேள்விகளைத் தான் அதிகம் கேட்பார்.

இன்று அந்தப் பிள்ளைகளைப் பார்க்கிறேன். அந்தப் பிள்ளைகளின் பார்வைகள் திருட்டுப் பார்வைகளாக ஆகிவிட்டன. காதுகள் தவறான செய்திகளுக்கு மட்டுமே அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கின்றன. மூளை மோசமான செய்திகளை மட்டுமே நன்கு பதிவு செய்து கொள்கின்றது.

மொத்தத்தில் அந்தப் பிள்ளைகள் கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்டன. இவர்களைக் கெடுத்த பெருமை இவர்களது தந்தையைத் தான் சேரும்.

காரணம் அப்பா முதல் நாள் என்ன கேள்வி கேட்டார்? நாளை என்ன கேட்பார்; அவற்றிற்கு நாம் ஏதாவது சொல்லியாக வேண்டுமே என்கிற கண்ணோட்டத்தில் தான் கருத்தே செல்கிறது.

நண்பர் செக் கொடுக்கின்றார். அதைத் தன் ஊழியரிடம் கொடுத்து மாற்றி வரச் சொல்கிறார் இவர். ஊழியர் பணத்தைக் கொடுத்ததும் நண்பர் கணக்கில் என்ன பாக்கியிருக்கின்றது? என்று இவர் கேட்டால் அடுத்த முறை என்ன நடக்கும் பாங்க் ஊழியர் லெட்ஜரைப் புரட்டி என்ரி போடும் போது இந்த ஊழியர் திருட்டுத்தனமாக எட்டிப்பார்க்கத்தான் செய்வார்.

பிறரைப் பற்றி ஒருவரிடம் புலன் விசாரணை செய்பவர்கள் பிறரது கண்ணோட்டங்களில் விசத்தைக் கலக்குகிறார்கள் என்பேன்.

இத்தகைய சந்தர்ப்பங்களால் இவர்களது கேள்விகள் என்பவை வெறும் கேள்விகளாக அமைந்து விடுவதில்லை. அடுத்த முறை நீ இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்து வந்து செய்தியைச் சொல்லு என்று அறிவுறுத்தும் மோசமான வற்புறுத்தல்கள்.

சில விடயங்கள் இந்த நிலைமையோடு நின்றுவிடுவதில்லை. எதிர் அணியில் போய் இப்படியெல்லாம் கேட்கிறாருங்க என்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்லிக் கொடுத்து விடுவார்கள்.

மன அசிங்கங்களை வெளிப்படுத்தி அடுத்த தலைமுறையையும் சுற்றியிருப்பவர்களையும் பாழடிக்கும். இதுபோன்ற குடையும் மன்னர்கள் தங்களை மாற்றிக் கொள்வார்களா?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிதி மோசடி விவகாரம்

# புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் சாலிலா முனசிங்க கைது



தாய்வான் வங்கி ஒன்றிலிருந்து சட்டவிரோதமாக 1.1 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கையிலுள்ள தனது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு மாற்றிய குற்றச்சாட்டில் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரும் புதிய ஜனநாயக முன்னணியின் தலைவருமான சாலிலாமுனசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

இணைய மோசடிகளின் மூலம் தாய்வானின் தூர கிழக்கு அனைத்துலக வங்கியின் 60 மில்லியன் டொலர் இலங்கை, கம்போடியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள பல்வேறு வங்கிக்கணக்குகளுக்கு மாற்றப்பட்டது.

சாலிலாமுனசிங்கவின் வங்கிக் கணக்கிற்கும் 1.1 மில்லியன் டொலர் பணம் மாற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை நடத்தி லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவரான சாலிகாமுனசிங்கவை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவர், முன்னாள் நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்கவினாலேயே இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன, சாலிலா முன்சிங்கவை தலைவராகக் கொண்ட புதிய ஜனநாயக முன்னணியின் அன்னம் சின்னத்திலேயே பொது வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டு புதிய ஜனநாயக முன்னணியை உருவாக்கிய சாலிலாமுனசிங்கவின் அன்னம் சின்னத்திலேயே 2010ஆம்ஆண்டு சரத் பொன்சேகாவும் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கந்தமுருகேசனார் முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

புலோலிதென்மேற்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளிமண்டபத்தில் அதன் முகாமைக்குழுத் தலைவர் மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.சிறிபாஸ்கரனும் புலோலி தென்மேற்கு கிராம அலுவலர் திருமதி விமல்சினி நிமல்ராஜும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுயாந்தினி சேரனும் கலந்து கொள்வர். (இ-60)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 20, கலீபா அப்துல்காதர் வீதி, ஆதன இல. 86 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் முகம்மது அப்துல்காதர் முகம்மது மீரான் மொகிதீன் பெண் முகம்மது சரீபா என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

01.05.2008 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு A. இராஜரட்ணம் முகதாவில் 4542 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியில் யாழ்ப்பாணம், நாவாந்துறை, நாவலர் வீதியைச் சேர்ந்த இல. 44, திருமதி. மொகமட் சரீபா மீரான் மொகதீன் என்பவர் இவ்வாதனமானது பிரசித்த நொத்தாரிசு M.M.M. மன்சூர் முகதாவில் 1898/1982.12.10 நிறைவேறிய அறுதியால் முகமட் மீராப்பிள்ளை ஹாஜியார் முகமட் அப்துல்லா ஆகியவருக்கு (குளி17.5) சொந்தமும் ஆட்சியுமாய் இருந்து இதனை அதே நொத்தாரிசு முகதாவில் 2073/1983.09.10 ஆம் இலக்க ஈட்டு உறுதியால் தனக்கு கட்டுப்படுத்தி இருந்தார் என்றும் ,1990 ஆம் ஆண்டு மீள முடியாத நிலையில் தனக்கு குறித்த நொத்தாரிசு முகதாவில் முறையான அறுதி உறுதி நிறைவேற்றி இருந்தார் என்றும், மேலும் தான் குறித்த நொத்தாரிசு முகதாவில் 1899/1982.12.10 ஆம் இலக்க உறுதி மூலம் தனது மகள் முகமட் அப்துல் காதர் மீரான் மொகதீன் மகள் ஆரியாவுக்கு (குளி 14) நன்கொடையாக கையளித்திருந்தார் என்றும் குறித்த சித்தி ஆரிபா 1990 ஆம் ஆண்டு குறித்த நொத்தாரிசு முன்பாக மீளவும் தமக்கு நன்கொடையாக கையளித்து நன்கொடை உறுதியும் நிறை வேற்றி இருந்தார் என்றும் உறுதிகள் யாவும்1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வு நிமித்தம்குறித்த நொத்தாரிசு மூலப் பிரதியோ இணைப்பிரதியோ சமர்ப்பிக்கப்படாத நிலையில் தேடுதல் மூலம் அறிய முடிந்ததென்றும் குறித்த அறுதி, நன்கொடை உறுதிகள் மூலம் மொத்தமாக நில.பர. 1,3/4 இற்கு தாம் சொந்தமும் இடையறா ஆட்சி உடையதுமாகும் என வெளிப்படுத்தியுள்ளதுடன் தனது மகள் தற்காலம் மதவாச்சி கட்டுவல டெல்வெலவில் வசிக்கும் தனது மகள் மீறான்மொகிதீன்ஜாஜிஸ் மொகமட்டிற்கு 4542ஆம் இலக்க நன்கொடை உறுதி முலம் நன்கொடையாக வழங்கியுள்ளார். 01.05.2008 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு A. இராஜரட்ணம் முகதாவில் 4543/2008.05.01 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் மேற்குறித்த மீரான் மொகதீன் ஜாஜிஸ் முகமட், யாழ்ப்பாணம், நாவாந்துறை நாவலர் வீதி இல. 71/16 ஐச் சேர்ந்த ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும், முத்துராசா ஆனந்தராசாவும் பெண் ஜெயசீலியும் ஆகியோருக்கு அறுதியாக விற்றுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய 7700/2017.08.17 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் நாவலர் வீதி 86 ஐச் சேர்ந்த ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும் முத்துராசாவும் பெண் சிசிலியம்மாவும் சேர்ந்து 4543/2008.05.01 இலக்க உறுதியில் தங்களின் 3 ஆம் பேரின் பெயர் ஜெயசீலி எனத் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதென்றும் சிசிலியம்மா என இருத்தல் வேண்டும் என்றும் திருத்தம் செய்து வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஆதனவிபரம்- வடமாகாணம்; யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம் பகுதி, வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை புளியடி இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆ.செல்வராஜா அவர்களின் வரைபட இல-325/2017.07.25 துண்டு 1 எனக் காட்டப்பட்ட நில பர. 01, குளி-14.26 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு- ஸ்ரீபன் கிறேஸ்மேரியின் ஆதனம், வடக்கு-கலீபா அப்துல்காதர் வீதி, மேற்கு-சேகு அப்துல்காதர் நாச்சியாவின் ஆதனம், தெற்கு- முகமட் சுல்தான் முகமட் யூசுப்பின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும் முத்துராசா ஆனந்தராசாவும் பெண் சிசிலியம்மாவும் தங்களது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ண ப்பித்துள்ளார்கள். இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகைபிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆனந்தராசா அன்ரன் ஜெய்கிஷனும் முத்துராசா ஆனந்தராசாவும் பெண் சிசிலியம்மாவும் என்பவர்களது பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-9954)

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2016/2017 (வெளிவாரி)

**Bachelor of Business Management Degree Programme – 2016/2017 (External)**

புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2016

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடத்தப்படும் தமிழ்மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக்கான தகைமைகள்:

க.பொ.த.(உ/த) பரீட்சை - 2015அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

அல்லது

பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக்கொண்டவர்கள்.

வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:

பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட 1 ஆம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு. உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

முக்கிய குறிப்பு:-இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

மாணவர் தெரிவு:

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:

1.விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக்கட்டணமாக ரூபா 1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 1000 க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:

விண்ணப்பங்கள் யாவும் பிரதிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு"என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 17.11.2017. (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

மேலதிக விபரங்களுக்கு: 021 222 3612, 021 222 3610, 021 222 1106 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி-9952) பதிவாளர்

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-19, மொகிடீன் பள்ளிவாசல் வீதி, ஆதன இல 50/1 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் யூசுப் முகமது இஸ்மயில் தர்ஸா உம்மா என்னும் பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

மொகமட் இஸ்மயில் நபீசா, இல 28, மெகடீன் பள்ளிவாசல் வீதி யாழ்ப்பாணத்தையும் தற்பொழுது இல 76/1 கொற்றாவத்தை வீதி, கொற்றாவத்தை, பாணாந்துறையைச் சேர்ந்தவரும் (2) உமர் முசாமில் 58/7 கமால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். தற்பொழுது அரபா நகர் தில்லையடி புத்தளத்தைச் சேர்ந்தவர்களாகிய இவர்களால் குறித்த ஆதனத்திற்கு 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரசித்த நொத்தாரிசு M.M மன்சூர் முகதாவில் அறுதி உறுதி நிறைவேற்றப் பட்ட தென்றும் காணிப்பதிவகம் அக் காலப்பகுதியில் சரியாக இயங்காததால் பதியப்பட வில்லை எனவும் 1990 இடம் பெயர்வில் சகல ஆவணங்களையும் இழந்துள்ளதாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு M.M.M ரமீஸ் முகதாவில் நிறைவேறிய 438/2003.12.16 இலக்க அறுதி உறுதி யில் மூலம் நிலப்பரப்பு 1 குளி 14.75 இல் 2/3 பங்கையும் அதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய அறுதி உறுதி இல 442/2003.12.21 மூலம் மிகுதி 1/3 பங்கையும் 113 கலீபா அப்துல் காதர் வீதி யாழ்ப்பாணம் தற்பொழுது இலக்கம் 3 கிறகரி பிளேஸ் தெகிவளை கொழும்பைச் சேர்ந்த மமுனா லெப்பை செய்யது அமீருக்கு அறுதியாக வழங்கப்பட்டது. பிரசித்த நொத்தாரிசு A.இராஜரட்ணம் முகதாவில் நிறைவேறிய 3208/2005.07.12 இலக்க அறுதி உறுதி மூலம் மமுனா லெப்பை செய்யட் அமீரும் பெண் றபீக்காவும் யாழ்ப்பாணம் தென்மராட்சி மீசாலை தெற்கு கிட்டினன் இராஜேந்திரகுமாரும் பெண் சுரேக்காவுக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

ஆதன விபரம்: வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார் பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு "இறை காரயன்கனி" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.திருஞானசம்பந்தர் அவர்களின் வரைபட இலக்கம் 1299/1989.04.22 இல் துண்டு -1 எனக் காட்டப்பட்ட நில.பர.1 குளி 14.75 ஆகும். இதற்கு எல்லை

வடக்கு: வரி மதிப்பு எண் 54 கலீபா அப்துல் காதர் வீதியில் உள்ள வீடும்,கலீபா அப்துல் காதர் வீதியும்

கிழக்கு: மொகதீன் பள்ளிவாசல் வீதி வரிமதிப்பு எண் - 24ம், லைலா மொகதீனும் கரிமா அஸ்ரப்புக்கும் உரிய ஆதனம்.

தெற்கு: மொகதீன் பள்ளிவாசல் வீதி வரிமதிப்பு எண்- 24ம், லைலா மொகதீனுக்கும் கரிமா அஸ்ரப்புக்கும் உரிய ஆதனமும் 7 1/2 அடி அகலமான தனிப்பட்ட பாதையும்

மேற்கு: மொகதீன் பள்ளிவாசல் வீதி வரி மதிப்பு எண்-24ம், லைலா மொகதீனுக்கும் கரிமா அஸ்ரப்புக்கும் உரிய ஆதனமும் மொகதீன் பள்ளிவாசல் வீதியும்.

தற்போது இவ்வாதனத்தை கிட்டினன் இராஜேந்திரகுமாரும் பெண் சுரேக்காவும் தங்களது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கிட்டினன் இராஜேந்திரகுமாரும் பெண் சுரேக்காவும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சி-9953) ஆணையாளர், மாநகரசபை.யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபீர் ஹாசீம், மலிக் சமரவிக்கிரமவுக்கு ஜனாதிபதி ஆணைக்குழு இன்று அழைப்பு

(கொழும்பு)



அமைச்சர்களான கபீர் ஹாசீம் மற்றும் மலிக் சமர விக்கிரம ஆகியோரை ஜனா திபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப் பாணை விடுக்கப்பட்டுள் ளது.

பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய் வதற்காக நியமிக்கப்பட்டு ள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஆஜராகுமாறே குறி த்த இரு அமைச்சர்களுக்கும் அழைப்பாணை விடுக்கப்பட் டுள்ளது.

இரு அமைச்சர்களும் இன்று 11 ஆம் திகதி புதன்கிழமை விசாரணைக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்னாள் பொலிஸ் பரிசோதகர் உட்பட ஆறுபேர் ஹெரோயினுடன் கைதாகினர்

கண்டி பல்லேகலை பொலி ஸார் தங்கள் அதிகார பிரி வில் நேற்று முன்தினம் நடத்திய திடீர் சோதனைக ளின் போது போதைப்பொ ருள் வியாபாரத்துடன் தொடர் புடையவர்கள் என்ற சந்தே கத்தின் பேரில் முன்னாள் உதவி பொலிஸ் பரிசோதகர் உட்பட ஆறு பேரை கைது செய்தனர்.

பல்லேகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டொனால் அபேரத்ன, பொலிஸ் சார்ஜன்ட் நவரத்ன ஆகி யோரின்தலைமையிலேயே இத் திடீர் சோதனை இடம்பெற்றது.

கெங்கல்ல, பலகொல்ல , கொலங்காவத்த, அரங்கல, மகவத்த போன்ற கிராம பகுதிகளில் பொலிஸார் இச் சோதனைகளை நடத்தி சந் தேக நபர்களை கைது செய் ததுடன் அவர்களிடமிருந்த 60 மில்லி கிராம் ஹெரோ யின், 1650 மில்லிகிராம் கஞ்சா ஆகியவற்றையும் கைப்பற்றி யுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இப்பிரதேசங்களில் நீண்ட காலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தாக பொலிஸாரின் விசார ணையின் மூலம் தெரிய வந்துள்ளது. குறித்த ஆறு பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நட வடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அமெரிக்க கப்பல்படைத் தளபதி இலங்கையில்



அமெரிக்காவின் பசுபிக் கப்பல்படையின் கட்டளைத் தளபதி அட்மிரல் ஸ்கொட் சுவிவ்ற் இலங்கைக்குப் பய ணம் மேற்கொண்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஆரம்பமான, இலங் கைக் கடற்படையின் 'காலி கலந்துரையாடல்-2017" கடல் சார் கருத்தரங்கில் பங்கேற் கவே அவர் இலங்கை வந் துள்ளார்.

அட்மிரல் சுவிவ்ற் நேற்று, முன்தினம் காலி கலந்து ரையாடலில், 'பாதுகாப்பைக் கட்டியெழுப்புவதற்கு நம்பி க்கை அடிப்படையிலான கடல்சார் உறவுகள்' என்ற தொனிப் பொருளில் உரை யாற்றியிருந்தார்.

அதேவேளை, அமெரி க்காவின் பெறுமானங்களை காலி கலந்துரையாடலில் வலியுறுத்துவதற்காக அவர் இலங்கை வந்திருப்பதாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார். (இ-7)

# முஸ்லிம்களை அடிமைகளாக்க ஹக்கீமும் றிசாத்தும் துணை

## அதாவுல்லா குற்றச்சாட்டு



கிழக்கு மாகாண முஸ் லிம்களை மீண்டும் மேலா திக்க சக்திகளின் அடிமைக ளாக மாற்றுகின்ற செயற்பா டுகளுக்கு ரவூப் ஹக்கீமும் றிசாத் பதியுதீனும் துணை போய்க் கொண்டிருக்கின்ற னர் என தேசிய காங்கிர ஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டவரும் கைத்தொ ழில், வர்த்தக அமைச்சின் கீழுள்ள நடா நிறுவனத்தின் பணிப்பாளருமான அன்வர் முஸ்தபா, தேசிய காங்கிர ஸில் இணைந்து கொள்வது தொடர்பான ஊடக மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கி ழமை இரவு கல்முனையில் நடைபெற்றபோதே அதாவு ல்லா இதனைத் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

"முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் தொடர்பில் எவ்வித குறிக்கோள்களு மின்றி பயணிக்கின்ற சில முஸ்லிம் கட்சிகள், எமது முஸ்லிம்களை படுகுழியில் தள்ளுகின்ற செயற்பாடுக ளில் ஈடுபட்டு வருகின்றன.

நல்லாட்சியை கொண்டு வந்தவர்கள் நாங்களே என்று மார்தட்டிக் கொள்கின்ற அமைச் சர்களான ரவூப் ஹக்கீமும் றிசாத் பதியுதீனும் இந்த ஆட்சி முஸ்லிம்களுக்கு எதிரான பொல் லாட்சியாக மாறியிருப்பது தொடர்பில் பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்கின்றனர்.

நாங்கள் இறைவனுக்கு பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொண்டே அவர்கள் தொடர்ந்தும் முஸ் லிம்களுக்கு துரோகமிழை த்து வருகின்றனர். மாகாண சபைகள் திருத்த சட்டத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு பாரிய அநியாயம் இழைக்கப்பட்டி ருக்கிறது. அதற்கும் இவர்கள் கைதூக்கி ஆதரவு வழங்கி யுள்ளனர்.

கிழக்கு மாகாண மக்க ளின் அபிலாஷைகள் தொடர் பில் ரவூப் ஹக்கீமுக்கோ றிசாத் பதியுதீனுக்கோ எது வும் தெரியாது. அவர்கள் இன்று ரணில் விக்கிரமசிங் கவின் கைக்கூலிகளாக மாறி யிருக்கின்றனர்.

புதிய அரசியலமைப்புக் கான இடைக்கால அறிக்கை மூலம் கிழக்கு முஸ்லிம்க ளுக்கு பாரிய அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறது. இந்த சதியினால் இங்கு வாழ் கின்ற முஸ்லிம்கள் ஆபத் தான சூழ்நிலைக்குள் தள்ளி விடப்பட்டிருக்கின்றனர்.

வடக்கையும் கிழக்கை யும் இணைப்பதற்கு பதிலீ டாக கரையோர மாவட்டம் என்ற ஒன்றை கோருகின்ற னர். இந்த இணைப்பை தீர் மானிக்க வேண்டியவர்கள் இங்கு வாழும் மக்களேய ன்றி சம்பந்தனும் ஹக்கீமும் அல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.


ஏனைய சமூகங்களின் நல்லிணக்கத்துடன் முஸ் லிம் சமூகத்தின் அபிலாஷை களுக்காக தூரநோக்கு சிந் தனையுடன் பயணிக்கின்ற எமது தேசிய காங்கிரஸில் அன்வர் முஸ்தபா போன் புத்திஜீவிகள் இணைந்து கொள்வது காலத்தின் தேவை யாகும்.

மாற்றுத் தலைமைகளி னால் சமூகம் எவ்வாறு ஏமா ற்றப்படுகிறது என்பதை அவ ர்கள் நேரடியாக கண்டுணர் ந்தே அங்கிருந்து விலகி, எம் முடன் இணைய முன்வந் துள்ளனர். சத்தியம் என்றோ ஒருநாள் வென்றே தீரும் என் பதில் நாம் எப்போதும் நம் பிக்கை கொண்டுள்ளோம் என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை, தேசிய காங் கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர் சட்டத்தரணி எம்.எம்.பஹீஜ், கலாநிதி எஸ்.எல்.றியாஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (இ-7)

# சர்வதேச தூக்கு மேடைக்கு இலங்கை ராணுவம் செல்லும்

## விமல் வீரவன்ச அச்சம்



வடக்கு-கிழக்கு இணைப் பின் மூலம் சமஷ்டி ஆட்சி யினை வழங்கி இறுதியில் தமிழீழத்தினை உருவாக் கும் பாதையிலேயே அரசாங் கம் பயணித்து வருகின்றது. இராணுவம் தண்டிக்கப்படு வதே இதன் பிரதான நோக்க மாகும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மூலமாகவே ஈழத்துக் கான பயணம் முன்னகர்த் தப்பட்டு வருகின்றது என வும் அவர் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்ன ணியின் மக்கள் சந்திப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் முழு மையாக சர்வதேச மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் தேவைக்கு அமையவே ஆட் சியமைத்து வருகின்றது. இதன் பாரதூரமான நகர்வு களை இன்று அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. சர்வதேச சட்டத்திற்கு அமைய நாட்டினை இரண்டாக்கி தனி இராச்சியம் அமைக்கும் வேலைத்திட்டம் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக இரண்டு நிபந்த னைகள் இடப்பட்டுள்ளன.

அதில் முதலாவது சிறிது காலத்திற்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் தனித்த அதிகாரங்களில் மாகாணங்களை நடத்தி செல்லுதலாகும். இது மிக வும் மெதுவாக முன்னெடுக் கப்படும் ஒரு தந்திரமாகும். வடக்கு-கிழக்கு மாகாண ங்களை இணைத்து சமஷ்டி அதிகாரங்களை கொடுத்த வுடன் இந்த காரணி நிறை வேறும்.

அடுத்ததாக வடக்கு-கிழ க்கில் மக்கள் இராணுவ குற்றங்களுக்கு உள்ளாக்கப் பட்டதாக கூறி அவை தொட ர்பில் விசாரணைகளை முன் னெடுக்க வலியுறுத்தலாகும். அதற்காகவே இப்போது இரா ணுவ குற்றங்கள் என்ற பெய ரில் சர்வதேச விசாரணை கள் ஏற்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்குச் சாதகமாக சரத் பொன்சேகா, தமிழர் தரப்பு உள்ளிட்ட இந்த அரசாங்க த்தின் சிலரும் போர்க்குற்ற ங்கள் தொடர்பில் தானா கவே வாய் திறந்து வருகின் றனர். இது சர்வதேச தரப்பின ருக்கு போதுமான சாட்சிய மாக அமையும். அதன் மூலம் எமது இராணுவத்தை தண்டி க்க சாட்சியங்கள் நிறுவப்ப டும். அதன்மூலமாக எமது இராணுவம் சர்வதேச தூக்கு மேடைக்கு கொண்டு செல் லப்படும்.

ஆகவே இரண்டாவது காரணியை நிறைவேற்று வதன் மூலமாக இலங்கை யில் தமிழர்கள் மீது இரா ணுவ அடக்குமுறை கையா ளப்பட்டதாகவும் அரசாங் கம் இதனை தடுக்கவோ அல்லது முழுமையாக நிறுத்தவோ முடியாது போனதனால், வடக்கு- கிழக்கு மக்களுக்கு சமஷ்டி மூலமாக சில நியா யங்கள் கிடைக்கும் நிலை யில் வடக்கு- கிழக்கு பிரதேச ங்கள் தனி இராச்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும் என வும் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் ஒன்றை நிறை வேற்றும். இந்த நகர்வுகளே இப்போது முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இதற்கு தேவையான இர ண்டு நகர்வுகளை தான் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க முன்னகர்த்தி வருகின்றார். அவர் தனது ஆட்சிக் காலத் தில் தமிழீழத்தை உருவாக் கிக்கொடுக்கும் பலமான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்ற எதிர்பா ர்ப்பில் தனது ஆட்சிக் காலத் தினை கொண்டு நடத்துகி ன்றார்.

இறுதியில் எமது இரா ணுவம் போர்க்குற்றவா ளிகள் என தண்டிக்கப்படு வதும், நாடு இரண்டாக பிள வுபடுவதும் புலிகளை நியா யப்படுத்தி தமிழீழம் உரு வாகுவதிலுமே முடிவடை யும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முஸ்தீபு



(கொழும்பு)

அரச பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்கள் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பிக்க தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சைட்டம் எதிர்ப்பு அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டீ. லால்காந்த இவ்வாறு தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் எப்போது ஆரம்பிக்கும் என்பது தொடர்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சுகானந்த தேரர், லகிரு உள்ளிட்ட மாணவ செயற்குழுவினருக்கு தடை

(கொழும்பு)

டெம்பிடியே சுகதானந்த தேரர், லகிரு வீரசேகர, சுஜித பிரியங்கர பெரேரா உள்ளிட்ட மாணவ செயற்குழு உறுப்பினர்கள் எவரும், ஜனாதிபதி செயலகம் அல்லது எந்தவொரு அரச நிறுவனங்களுக்குள்ளும் அத்துமீறி நுழையக் கூடாது என கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவ செயற்குழு உறுப்பினர்கள் நேற்று குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் கூடவுள்ளதாக, புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமையவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சைட்டம் எதிர்ப்பு போராட்டங்களை அடக்கும் நோக்குடனேயே அரசு இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக மாணவர் செயற்பாட்டாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-7)

# ஜானக பெரேரா படுகொலை வழக்கு; ஹாபிதாபியின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவின் முன்னாள் தூதுவரும் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 31 பேரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, பிரதான சந்தேகநபரான உமார் ஹாபி தாபியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அவரை, நவம்பர் மாதம் 2ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜானக உள்ளிட்ட 31 பேரை, தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திப் படுகொலை செய்தது டன், மேலும் 60 பேருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்துவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவர், கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு, அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே, கம்பஹா மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி மற்றும் அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதியுமான ரேகாஸ்வரணாதிபதி கட்டளையிட்டார்.

இதேவேளை, அன்றைய தினம் சாட்சி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள பழைய பேருந்து நிலையத்துக்கு அருகில், ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அலுவலக திறப்பு விழா, 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதியன்று இடம்பெற்றது.

அன்று காலை 8:45 மணியளவில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா, அவரது மனைவி உட்பட 31 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், 60 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (இ-7)

# நாம் சிறைக்குச் செல்லவே ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம்

## வாசுதேவ எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

நாம் சிறைக்குச் செல்ல எதிர்பார்த்தே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றோம் எனவும், நீதிமன்ற தடை உத்தரவுகளுக்கோ, அரசாங்கத்தின் தடைகளுக்கோ எமது எதிர்ப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்த முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இந்தச்சட்டங்களால்எம்மை அடக்க முடியாது. இந்த சட்டங்கள் நாய்க் குணமுள்ள சட்டங்கள் எனவும் அவர் விமர்சித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1215

Search for people, places and things | Nagendram | Home

**துர்க்கா**




**கஜானன்**




**ராகவ்**




**தீபிகா**




**புவனா**




**சகானா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை திட்டமிடல் சேவைக்கு பிரமாணக் குறிப்புக்கு முரணாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கைத் திட்டமிடல் சேவையின் 3ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு பொது நிர்வாக அமைச்சினால் கோரப்பட்டிருந்த விண்ணப்பங்கள் இலங்கைத் திட்டமிடல் சேவையின் பிரமாணக் குறிப்புக்கு முரணானது என இலங்கைத் திட்டமிடல் சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கவனமெடுக்குமாறு தாம் ஜனாதிபதியின் கவனத்திற்கும் பொது நிர்வாக அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளதாக இலங்கைத் திட்டமிடல் சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கச் செயலாளர் ஏ.எல்.எம். அஸ்லம் தெரிவித்தார்.

இலங்கைத் திட்டமிடல் சேவையின் பிரமாணக் குறிப்பின்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதலாம்,இரண்டாம் வகுப்பு சித்தி பெற்றவர்கள் திறந்த போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெறுகின்றனர்.

பொருளியல், புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களை பல்கலைக்கழகப் பட்டத்திற்காகக் கொண்டவர்களும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் 3ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

எனினும் கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலில் இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றவரும், விஞ்ஞானவியலை ஒரு பாடமாகக் கொண்டு விஞ்ஞானமானி முதலாம்,இரண்டாம் வகுப்பு சித்தி பெற்றவர்களும் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலால் பல்கலைக்கழகங்களில் கலை, வர்த்தகப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகள் மேற்படி இலங்கைத் திட்டமிடல் சேவைக்குள் உள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டுள்ளன.

இது ஒரு அடிப்படை மீறலாகும். எனவே, இந்த அறிவித்தலை கலை மற்றும் வர்த்தகப் பட்டதாரிகளும் விண்ணப்பிக்கும் வகையில் வெளியிடுமாறும் இலங்கைத் திட்டமிடல் சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# நாமலின் செயலாளருக்குப் பிணை



கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ க்வர்ஸ் .நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் இரேஷோ சில்வாவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் முன்னாள் செயலாளரான ஊர்நிலா இரேஷா சில்வா கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவினால் கறுப்புப் பணம் வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அவரது முன்னாள் செயலாளரான ஊர்நிலா இரேஷா சில்வாவை கைது செய்ய நீதிமன்ற அனுமதியை கோரியிருந்தனர்.

வெளிநாட்டில் இருந்த அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகாததால் நீதிமன்றம் அனைத்துலகப் பிடியாணை பிறப்பித்திருந்தது.

அனைத்துலக பொலிஸாரின் உதவியுடன் அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்த நிலையில் அபுதாபி விமான நிலையம் வழியாக நேற்று அதிகாலை 5 மணியளவில் ஊர்நிலா இரேஷா சில்வா கட்டுநாயக்க விமான நிலையம் வந்தார்.

அவரை குடிவரவு அதிகாரிகள் கைது செய்து நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளித்துள்ளனர். இந்நிலையில் அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. (இ-7)

# வடகொரியாவுக்கு எதிரான தடைகள் குறித்து நாடாளுமன்ற விவாதத்துக்கு அரசு தயார்

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



வடகொரியாவுக்கு எதிரான தடைகள் குறித்து நாடாளுமன்றில் விவாதமொன்றை நடத்த தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது. வடகொரியா விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வட கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் யாவை, பொருளாதாரத் தடை விதிப்பதாயின் எவ்வாறான பொருட்களுக்கு தடை விதிக்கப்படுகிறது என்பன தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற விவாதமொன்றை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது என சபை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# யாழ். ரத்னா விருது மற்றும் கலைத்துறை சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையால் வழங்கப்படுகின்ற விருதான யாழ். ரத்னா விருது-2017 இற்கு இலக்கியம் மற்றும் எழுத்துத்துறை, நாடகம், இசை நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டியம், சங்கீதம் , இசை (வயலின், வீணை.....) , ஓவியம், சிற்பம் , உலோகக்கலை , ஏனையவை ஆகிய துறைகளில் கலைப்பணியாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

60 வயது பூர்த்தியடைந்த இதுவரை யாழ். ரத்னா விருதினைப் பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் கலைத்துறைச் சான்றிதழுக்கான விண்ணப்பங்களும் மேற்படி துறைகளில் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 18 வயதிற்குட்பட்டவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன் யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கலைஞர்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் கோரப்பட்ட ஆவணங்களுடன் உரிய கலைத்துறை சார்ந்த ஆ[illegible]ணப்பிரதிகளுடனும் 17.10. 2017 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பொன்னம்பலம் தயானந்தன் அறிவித்துள்ளார்.(இ-107)

# கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை

வணிகமாணி (வெளிவாரி) 2014/ 2015 பட்டக் கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 13, 14 மற்றும் 15 ஆம் திகதி வரை (வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. எனவே மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கப்பெறாதோர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்துடன் நாளை 12ஆம் திகதிக்கு முன்னர் (வியாழக்கிழமை) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமல தாசன் அறிவித்துள்ளார். (இ

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி! பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

(கரணவாய்)

துப்பாக்கிச் சூட்டில் இளை ஞன் ஒருவர் பலியான சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பொலிஸ் சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார். கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி குடத்தனைப் பகுதியூடாக மணல் கடத்தி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியானார். இச்சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக் கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களை மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தியபோதே எதிர்வரும் 23.10.2017 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

# கால்நடைகளை கட்டி வளர்க்கவும்

தென்மராட்சி கமநல சேவைகள் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் நெல் சிறுதானியப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு சாவகச்சேரி கமநல சேவைகள் பெரும்போக உத்தியோகத்தர் கேட்டுக் கொண்டுள்ளார். தவறும் பட்சத்தில் கால்நடை வளர்ப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (இ-10-101)



சர்வதேசத்தின் பங்களிப்புடனான சர்வமதகுழுவாகிய URI இன் நான்காவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு யாழ். மாவட்ட URI இன் தலைவர் லயன் கலாநிதி நா. தனேந்திரன் தலைமை தாங்கினார். தொடர்ந்து 3 நாட்களாக இந் நிகழ்வு நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் கலந்து சிறப்பித்தார். அத்துடன் இலங்கைக்கான URI இன தலைவர் சர்வோதய செயலாளர் மற்றும் தெற்காசிய பிரதிநிதிகளும் இலங்கை பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்திருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் பலர் பங்கேற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீ மனிதம் மிக்கவனாக இரு" டேவிற் ஐயாவின் மகுட வாசகம்



டேவிற் ஐயாவின் இரண்டாவது நினைவு தினம் இன்றாகும் இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது

கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையில் 24.04.1924 இல் பிறந்து 11.10.2015 வரை வாழ்ந்து இறைபதமடைந்த அமரர் சாலமன் அருளானந்தம் டேவிட் அவர்களின் 2ஆம் ஆண்டு நிறைவில் அவரை மனிதம் நிறைந்த அனைவருமே நினைவுகூர வேண்டியவர்கள்.

கடல்சூழ்ந்தலைடன்தீவில் ஓலை மண்குடிசையில் ஓர் வியாபாரியின் கடைசிமகனாகப் பிறந்தார். தந்தையின் வியாபாரம் தள்ம்பிய போது டேவிட் அவர்கள் தன் தாயாரின் தங்கையின் அரவணைப்பில் வளர்ந்தார். (01-08 வயது வரை)

மிகவும் கெட்டிக்காரச் சிறுவனாக இருந்த டேவிற்றை குடும்ப நிலைமை கல்விக்கு தடையாக இருந்த நிலையிலும் வெள்ளையர் ஆட்சியில் கிறிஸ்தவ மதக் கல்வி பரப்பும் முறைமையாலும் இவரின் திறமையைக் கண்ட அதிபரின் அரவணைப்பினாலும் அவரது கல்வி இடையீடின்றி தொடரப்பட்டது. எட்டாம் வயது தொடங்கி 18ஆம் வயது வரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்விச்சாலையில் டேவிற் படித்தார். இங்கு கல்வி கற்பதற்கு இவரது மாமனும் கல்லூரியின் அதிபருமான சகோதரர் பாக்கியநாதன் அவர்களின் உதவி கிடைத்தது. அத்துடன் அக் கல்லூரியின் விடுதியில் கட்டணம் எதுவுமின்றித் தங்கிப்பிடிக்கவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

அறிவைத் தேடிக் கற்பதற்கு ஆர்வம் கொண்ட டேவிற் கிறிஸ்தவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் திறமையான கல்விச் தேர்ச்சியுடைய மாணவர்களுக்கு இறுதி தேர்வில் பரிசுகள் வழங்கும் நடைமுறையிருந்தது. டேவிற் அவர்கள் தனது 6ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் 12 பாடங்களிலும் முதன்மைப் புள்ளி பெற்று 12 புத்தகங்களைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

அப்புத்தகத்தினை வாசித்துப் பெற்ற பல்துறை அனுபவம் டேவிற் அவர்களின் அறிவின் தேடலுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டின.

இள நிலை பள்ளிச் சான்றிதழ் (10ஆம்வகுப்பில்) இறுதிப் பரீட்சையில் கணிதம், ஓவியம் தீட்டுதல் பாடங்களில் சிறந்த முதல்மதிப்பெண் பெற்றார். அதற்காகப் பரிசுகள் பெற்றார். உயர் கல்வியை ஹற்றன் புனித ஜோண் பொஸ்கோ பள்ளியில் கற்று சிறந்த மதிப் பெண்ணையும் பெற்றார்.

இக் கல்வித் தராதரங்களுடன் அரச வேலை தேடி முதலில் எழுதுவினைஞர் பணியில் அமர்த்தப்பட்டார். இவ்வாறு பல இடங்களில் தொழில் புரிந்த டேவிற் அவர்கள் அவ்வேலையை விட்டுவிட்டு கட்டடக் கலைக் கல்வியை கற்று அவற்றிலும் முதன்மைச் சித்தியைப் பெற்றிருந்தார். இதனால் இலங்கை அரசின் கட்டடக் கலைப்படிப்பிற்கு உரிய உதவிப்பணம் பெற்று அவுஸ்திரேலிய மெல்போர்ன் நகர பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலைத்துறையில் கற்பதற்காக சென்றார்.

இலங்கையில் பல நகரங்களின் அமைப்பிற்கான வரைபடங்களை வரைந்தார். இவரின் வரைபடங்களை பார்வையிட்ட அக்கால பொதுப் பணித்துறை அமைச்சர் எந்த விண்ணப்பமோ நேர்காணலோ இல்லாமல் இவரைத் தேர்வு செய்து 1947ஆம் ஆண்டுகொழும்பிலுள்ள அரசு பொதுப்பணித்துறை அலுவலகத்தில் கட்டட வரைபடக் கலைஞர் வேலையில் அமர்த்தினார்.

இத்தகைய துறைசார்ந்த சிறப்பில் உயர்நிலை பெற்றிருந்த டேவிற் மிகுந்த ஞாபக சக்தி மிக்கவர். இவர் சிறுவனாக இருக்கும் போதே தமிழர்கள் மீது சிங்களவர்களின் அடக்குமுறைகள் ஆரம்பமாகின. தமிழர்கள் நெஞ்சில் பயம் புகுந்த காலம் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நடந்து கொண்டிருந்தன. தமிழர்களின் எதிர்காலம் நிச்சயமற்றிருந்ததை டேவிற் கண்டு கொண்டார்.

இவருக்கு 23 வயதாக இருக்கும் போது தந்தை செல்வா பாராளுமன்றத்தில் "சிங்களக் குடியேற்றங் களை நிறுத்தாவிடின் அப்பகுதியில் இரத்தம் தான் ஓடும்'' என்று பேசியபோது சிங்கள உறுப்பினர்கள் கொதித்தெழுந்து ஆபாசமாகப் பேசியமையை கண்ணுற்றார் டேவிற்.

அன்றே அவர் ''தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக சந்தோசமாக வாழ முடியாது'' என்கின்ற எண்ணம் அவரின் மனதில் உதயமாயிற்று. இந்நிகழ்வு டேவிற் அவர்களின் மனதை உறுத்திய இன்னொரு சம்பவம். தந்தை செல்வா தலைமையில் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பொலிஸார் பலவீனமான தமிழரைக் தூக்கிக் கொண்டுபோய் பக்கத்திலிருந்த பெய்ரா ஏரியில் போட்டார்கள். அவர் துடிப்பதைப்பார்த்து பொலிஸார் கைகொட்டிச் சிரித்த காட்சி டேவிட் அவரின் இதயத்தைப் பாதித்தது. இந்நிகழ்வில் அவரின் போராட்ட வேகத்தை அதிகரிக்கச் செய்தது.

கட்டடக்கலையில் பற்பல பட்டங்கள் பெற்ற அறிவின் உச்சத்திலும் செயல் திறனிலும் சிறந்து விளங்கிய டேவிற் அவர்களை இங்கிலாந்து, நைஜீரியா, கென்யா போன்ற நாடுகளின் நகர அமைப்புக்கான வரைபடம் கீறும் வேலைக்காக அழைத்தனர். குறிப்பாக கென்யாவின் மொம்பாஸா நகரை அமைப்பதற்காக அங்கு சென்றபோது மெம்பாஸா நூலகத்திற்குச் சென்று அங்கிருந்து இந்தியா பற்றிய ஏராளமான புத்தகங்களை வாசித்தார். அப்புத்தகங்கள் காந்தியைப் பற்றியும் அவருடைய சிந்தனைகள் பற்றியும் டேவிற்றுக்கு உணர்த்தியது. காந்தியின் சிந்தனைகள் டேவிட்டின் சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி அதனைத் தமிழீழத்திற் புகுத்த வேண்டும் என்ற அவாவையும் ஏற்படுத்தியது.

தமிழரின் விடுதலைத் தாகம் மிக்கவராக டேவிட் மாற்றமடைய சிங்கள ஆட்சியாளர்களின் அவாவடித்தனங்களே காரணமாயின. டேவிட் அவர்கள் தான் வெளிநாட்டில் உழைத்துவந்த பணத்தை தன் சுய நலத்திற்காகச் செலவழிக்கவில்லை. வெளிநாடுகளில் அவர் பணிபுரிந்த வேளை இவரை அந்நாடுகள் தம்நாட்டில் வாழும்படி கெஞ்சின. அவரின் மனதில் உறுத்திய தமிழரின் விடிவு உந்தப்பெற்று இலங்கைக்கு வந்து விட்டார்.

வெளிநாடுகளில் பணியாற்றியவேளை அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப் பண்ணை விவசாய முறைமையை தமிழ்ப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்த முற்பட்டார்.

1983 ஆம் ஆண்டு கலவரத்தின் போது மலையக மக்கள் ஓடோடி தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்தபோது அவர்களை வவுனியா, திருகோணமலை, வன்னி போன்ற எல்லாப் பிரதேசங்களில் குடியேற்றி ஆதரவு நல்கினார். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் வறுமையை ஒழிப்பதற்காகவும் விவசாயப் பண்ணைத் திட்டங்களை தானும் ஓர் வறுமை ஒழிப்புப் போராளியாக நின்று அவர்களுடன் அவர்களாக நின்று செயலாற்றினார்.

டேவிட் அவர்கள் தமிழ் பல்கலைக்கழகத்தை நிறுவப் பாடுபட்டார். அரசு செவிசாய்க்காத போது தானே அப் பல்கலைக்கழகத்திற்கான வரைபடத்தைத் கீறினார்.

அத்தோடு வன்னிப் பகுதி இளைஞர்களைச் சேர்த்து அங்கே இஸ்ரேலிய நாட்டு கிபுட்ஸ் கூட்டுப் பண்ணைத் திட்ட அடிப்படையில் ஓராண்டு காலம் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தார். இளைஞர்கள் ஒத்துழைப்பு கிடைக்காமையால் அவரின் விருப்பு நிறைவேறவில்லை. இக் கூட்டுப்பண்ணைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி தமிழரை வறுமையில் இருந்து மீட்டு சுதந்திரமாகவும் வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணத்திற்காக தான் வெளிநாட்டிலிருந்து உழைத்து வந்த பணம் முழுவதையும் செலவு செய்தும் பயன் எட்டா நிலையில் அவர் சேமித்தவை அனைத்தையும் இழக்க நேரிட்டது.

1976 இல் வவுனியாவில் "காந்திய இயக்கம்" முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களை "ஒரு ஏக்கர் பண்ணைத் திட்டம்'' பற்றிய ஆய்வுக்கட்டுரையை ஆய்வுப்பொருளாகக் கொண்டு கட்டுரையை சமர்ப்பிக்கும் படி அழைப்பு வந்தது டேவிட்டுக்கு. டேவிட்டின் கூட்டுப் பண்ணைத் திட்டம் ஐரோப்பிய நாடுகளால் வியப்பாகவும் பெறுமதியாகப் பார்க்கப்பட்டமையே அழைப்பிற்கான விருப்பு என்பது குறிப்பிடத்தக்கது. மகாநாட்டிலும் கலந்து கொண்டார்.

இவர் நியூயோர்க் நகரில் டாக்டர் பஞ்சாட்சரம் கூட்டிய "தமிழ்ஈழம் உலக மகாநாடு" டேவிட்டை கட்டாயம் கலந்து கொண்டு கருத்துரை வழங்க வேண்டும் என்பதற்காக அம்மகாநாட்டிலும் கலந்து கொண்டார். கூட்டுப் பண்ணைத் திட்டம் மூலம் காந்திய இயக்கம் வளர்வதை சிங்கள அரசும் அமெரிக்க உளவுத்துறையும் இலங்கை அரசுக்குத் தவறான தகவலைக் கொடுத்தது. காரணம் தமிழ் ஈழத் தனிநாடு விடுதலைக்கு உதவுகின்றது. "காந்தியம்" என்ற தவறான கருத்தைக் கொடுத்தனர்.

இதனால் டேவிட் அவர்கள் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டார். 1983.04.07இல் கொழும்பிலுள்ள 4ஆம் மாடிச் சித்திரவதைக் கூடத்தில் அடைக்கப்பட்டார். பின்னர் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். மட்டக்களப்புச் சிறைச்சாலை உடைப்பினை வழிப்படுத்திய பெருமை டேவிட் அவர்களுக்கே உரியது.

தப்பித்து இந்தியா சென்ற டேவிட் அவர்கள் தமிழ் இன விடுதலைக்காக ஓயாது சிந்திப்பதும் ஆலோசனைகளைப் பகிர்வது போன்ற உறக்கமில்லா வாழ்வு வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் இலங்கைக்கு வந்த டேவிட் ஐயாவுடன் பற்பல உயர்சிந்தனையாளர்கள் தொடர்பு கொண்டு இன முரண்பாடுகள், மத அடக்கு முறைகள், மனிதம் அற்ற செயல்கள், விடுதலைபற்றிய எண்ணங்கள் போன்ற பல்வேறு விடயங்களை சிந்திப்பதும் செயல்வடிவத்துக்கான ஒத்துழைப்பு வழங்குவதையும் செயற்படுத்தி வந்தனர். இவர் பல்முகப்பார்வை கொண்ட ஒரு மனிதம் மிக்கவர். மத, இன வேறுபாடு அற்றவர். எல்லா மக்களையும் நீ மனிதம் மிக்கவனாக இரு என்பவர், கல்வித்தாகம் மிக்கவர். தன் முயற்சி போல் அனைத்து மக்களும் முயற்சியாளராக இருந்து உழைக்க வேண்டும் என்ற விருப்புக் கொண்டவர். சுயநலமற்ற, பொதுநலம் பேணும் மனிதம் மிக்கவர். இவரின் சிந்தனைகள் இனியவை. அதனால் இன்றும் இவரை மறக்காத நெஞ்சங்கள் தமிழரில் மட்டுமன்றி உலகமெங்கும் உள்ளனர் என்பதே சான்று. மனிதத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய மாமேதை என்றால் மிகையாகாது.

மலர் சின்னையா
(முன்னாள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்)

# சம்பள அதிகரிப்புக்கு எதிராகப் போராட்டம்



ரயில் சேவைகள் உட்பட பல்வேறு துறைசார்ந்த ஊழியர்கள் தங்களது சம்பளத்தை அதிகரிக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தற்பொழுது நடைமுறையிலுள்ள சம்பள முறைமைக்கு மாற்றமான முறையில் இந்த சம்பள அதிகரிப்பைக் கோரியுள்ளதாகவும் அவ்வமைப்பின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரச சேவை சம்பள ஆணைக்குழு என்பவற்றுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில் சேவைக்கோ அல்லது வேறு சேவைகளுக்கோ சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதாயின் அதற்கு சமாந்தரமாக சுகாதார சேவைக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பிக்குகள் ஏன் ஆர்ப்பாட்டம் நடத்த முடியாது

## ராவணா பலயவின் தலைவர் கேள்வி



(கொழும்பு)

மியன்மாரில் நடைபெற்ற சம்பவங்களை வைத்து, எந்த சம்பந்தமும் இல்லாத, மரிக்கார்களுக்கும், அஸாத் சாலிகளுக்கும், முஜிபுர் ரஹ்மான்களுக்கும் ஆர்ப்பாட்டம் செய்ய முடியுமாயின், இந்த நாட்டிலுள்ள பிக்குகளுக்கு ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஏன் முடியாது என ராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் கேள்வியெழுப்பினார்.

அக்மீமன தயாரத்ன தேரருக்கு நேற்று முன்தினம் பிணை மறுக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

எங்கோவுள்ள பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்களை இந்த நாட்டுடன் தொடர்புபடுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த பிக்குகள் வீதியில் இறங்கினர்.

மியன்மார் அகதிகளை ஐக்கிய நாடுகள் சின்னம் பொதிக்கப்பட்ட ஒரு இடத்தில் குடியிருக்கச் செய்திருந்தால் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது. யாரும் அந்த இடத்துக்குச் சென்றிருக்கமாட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## முல்லாவும் மூன்று அறிஞர்களும்

... கேட்டுத்தெரிந்து கொண்டார். சிறிது நேரத்திலேயே தன்நாட்டு மக்கள் யாருமே பதில் சொல்ல வில்லை. அப்படிச் செய்தால் தன் நாட்டிற்கு பெருத்த அவமானம் ஆகுமே என்று நினைத்ததோடு இல்லாமல் இந்த அறிஞர்களுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

தன்னுடைய கழுதையோடு கூட்டத்தின் நடுவே சென்று, அரசனைப் பார்த்து வணக்கம் சொல்லி விட்டு, தான் போட்டியிடப் போவதாகச் சொன்னார்.

அரசனும் சரி என்றார். ஆனால் அந்த மூன்று பேரும் முல்லாவின் ஆடை, கழுதையோடு நின்ற நிலையைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து, உன்னிடம் நாங்கள் ஆளுக்கு ஒரு கேள்வி கேட்போம், நீ சொல்லும் பதிலை நாங்க சரி, தவறு என்று சொல்வோம். அப்படி நாங்க பதில் சொல்லவில்லை என்றால் உனக்கும் இந்த நாட்டுக்கும் அடிமை. நீ தோற்றால் இந்த நாடும் மற்றவர்களும் நீயும் வாழ்நாள் முழுவதும் எங்களுக்கு அடிமை.

முல்லா... அது எல்லாம் சரி, கேள்வியை கேளுங்கப்பா, சீக்கிரம் வீட்டுக்குப் போகணும்?

முதல் அறிஞர் முல்லாவிடம், "இந்த உலகின் மைய இடம் எது?" என்று கேட்டார்.

அதற்கு முல்லா, "என் கழுதை நிற்குமிடம் தான் உலகின் மையம்" என்றார்.

அந்த அறிஞர், "அதை உண்மை என்று நிரூபியுங்கள் பார்க்கலாம்" என்றார்.

உடனே முல்லா, "அது உங்க வேலை. நான் சொன்னது தவறு என்று நிரூபியுங்கள். உலகை அளந்து பாருங்கள். அப்போது என் கழுதை நிற்குமிடம் உலகின் மையம் என்று தெரியும்" என்றார்.

முதல் அறிஞர் என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாமல் இருந்தார்.

அடுத்து இரண்டாம் அறிஞர், "ஆகாயத்தில் மொத்தம் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?" என்று கேட்டார்.

அதற்கு முல்லா, "என் கழுதையின் உடலில் எத்தனை உரோமங்கள் இருக்கின்றனவோ அத்தனை நட்சத்திரங்கள் ஆகாயத்தில் உள்ளன. வேண்டுமானால் எண்ணிப் பாருங்கள்" என்றார்.



இரண்டாம் அறிஞர் பேசாமல் இருந்துவிட்டார்.

மூன்றாவது அறிஞர் முல்லாவிடம், "மக்கள் கடைபிடிப்பதற்காகச் சான்றோர்கள் வகுத்த நெறிகள் எவ்வளவு?" என்றார்.

அதற்கு முல்லா, "அறிஞர்களே உங்கள் மூவருடைய தாடியிலும் எவ்வளவு உரோமங்கள் உண்டோ அத்தனை நெறிகளைச் சான்றோர்கள் மக்களுக்காக வகுத்துள்ளனர்.

"இதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள். உங்கள் மூவருடைய தாடியிலும் உள்ள உரோமங்களைப் பிடுங்கி எண்ணிக்கை சரியானது என்று நிரூபிக்கிறேன்" என்றார்.

இவ்வாறு முல்லா கூறியதும், "வேண்டாம். வேண்டாம் நீங்கள் சொன்ன பதிலை ஒப்புக் கொள்கிறோம்" என்று கூறி அந்த அறிஞர்கள் தாங்கள் தோற்றுப் போனதை ஒப்புக் கொண்டு தங்கள் பரிசுகளை முல்லாவிடம் சமர்ப்பித்தனர், தங்களை அந்த நாட்டின் அடிமை என்று அறிவித்தார்கள்.

போட்டியில் வென்றதால் அரசன் முல்லாவை கட்டிப்பிடித்து, நன்றி சொன்னார். என்ன கேட்டாலும் கொடுக்கத் தயார் என்றார். உடனே "அந்த மூன்று அறிஞர்களையும் தங்கள் நாட்டிற்கு போக அனுமதிக்க வேண்டும். இனிமேல் அவர்கள் இதுபோல் போட்டியிட மாட்டார்கள்" என்றார்.

அந்த மூவரும் முல்லாவுக்கு நன்றி சொல்லி தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடி போனார்கள். முல்லாவின் புகழ் மேலும் பரவியது.

(முற்றும்)



10.2017 11

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1138 - சிரியாவில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 200,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1582 - கிரகொரியின் நாட்காட்டி அறிமுகப் படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.
- 1634 - டென்மார்க் மற்றும் ஜேர்மனியில் இடம்பெற்ற பெரும் வெள்ளத்தினால் 15,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1801 - காளையார் கோயிலைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனையும் சுற்றியுள்ள காடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.
- 1811 - ஜோன் ஸ்டீவன்ஸ் கண்டுபிடித்த ஜூலியானா என்ற முதலாவது நீராவிப் படகுக் கப்பலின் சேவை நியூயோர்க்கிற்கும் நியூ ஜேர்சிக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1852 - அவுஸ்திரேலியாவின் மிகப் பழைமையான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1865 - ஜமெய்க்காவில் நூற்றுக்கும் அதிகமான கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது அன்றைய பிரித்தானிய அரசால் நசுக்கப்பட்டதில் நாநூறுக்கும் அதிகமான கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1899 - இரண்டாவது போவர் போர் தென்னாபிரிக்காவில் ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக ஆரம்பமானது.
- 1941 - மக்கடோனியாவில் தேசிய விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1944 - துவீனிய மக்கள் குடியரசு சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது.
- 1954 - வட வியட்நாமை வியட்மின் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.
- 1958 - நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமலே மீண்டும் இரண்டு நாட்களில் பூமியில் வீழ்ந்து எரிந்தது.
- 1968 - நாசா முதற் தடவையாக மூன்று விண்வெளி வீரர்களை அப்பலோ 7 விண்கலத்தில் விண்ணுக்கு ஏவியது.
- 1984 - சலேஞ்சர் விண்ணோடத்தில் சென்ற கத்ரின் சலிவன் விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கப் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1987 - விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப் படை பவான் நடவடிக்கை என்ற பெயரில் போரை ஆரம்பித்தனர்.
- 1998 - கொங்கோவில் வானூர்தி ஒன்று தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 40 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - பின்லாந்தில் கடைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - ஈழப்போர்: முகமாலையில் இடம்பெற்ற சமரில் 129 இராணுவத்தினரும் 22 விடுதலைப்புலிகளும் கொல்லப்பட்டனர். 300 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

### பிறப்புகள்

- 1738 - ஆர்தர் பிலிப், நியூ சவுத் வேல்சின் 1வது ஆளுநர் (இ. 1814)
- 1758 - ஹென்ரிச் ஒல்பெர்ஸ், செருமானிய வானியலாளர் (இ. 1840)
- 1820 - ஆனல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், தமிழாசிரியர், இதழாசிரியர், புலவர் (இ. 1896)
- 1826 - மாயூரம் வேதநாயகம்பிள்ளை, தமிழ்ப் புதின முன்னோடி (இ. 1889)
- 1884 - எலினோர் ரூசுவெல்ட், அமெரிக்காவின் 39ஆவது முதல் சீமாட்டி (இ. 1962)
- 1896 - உரோமன் யாக்கோபுசன், உருசிய-அமெரிக்க மொழியியலாளர் (இ. 1982)
- 1902 - ஜெயபிரகாஷ் நாராயண், இந்திய அரசியல்வாதி (இ. 1979)
- 1916 - நானாஜி தேஷ்முக், இந்தியக் கல்வியாளர் (இ. 2010)
- 1926 - திக் நியாட் ஹன், வியட்நாமிய கவிஞர்
- 1930 - கே. பி. உமர், இந்திய நடிகர் (இ. 2001)
- 1942 - அமிதாப் பச்சன், இந்திய நடிகர்
- 1947 - லூகாசு பாபடெமோசு, கிரேக்கத்தின் 183ஆவது பிரதமர்
- 1952 - ஐசக் இன்பராஜா, ஈழத்து நாடகக் கலைஞர் (இ. 2014)
- 1962 - ஆன் என்ரைட், ஐரிய எழுத்தாளர்
- 1977 - மாட் போமேர், அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- 1889 - ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கிலேய இயற்பியலாளர் (பி. 1818)
- 1896 - ஆன்டன் புரூக்னர், ஆஸ்திரிய இசையமைப்பாளர் (பி. 1824)
- 2006 - ஏ. ஜே. கனகரத்னா, ஈழத்தின் எழுத்தாளர், கல்வியாளர் (பி. 1934)
- 2015 - எஸ். ஏ. டேவிட், கட்டடக் கலைஞர் (பி. 1924)

### சிறப்பு நாள்

- புரட்சி நாள் (மக்கடோனியக் குடியரசு)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 140 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 320 | 400 | 500 | 350 |
| தக்காளி | 200 | 200 | 150 | 180 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 80 | 60 | 80 |
| கோவா | 140 | 160 | 90 | 160 | 120 | 140 |
| கரட் | 80 | 200 | 100 | 200 | 160 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 120 | 120 | 70 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 75 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 240 | 200 | 250 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 100 | 150 | 75 | 100 | 140 | 140 |
| பாகற்காய் | 300 | 500 | 230 | 280 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 60 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 90 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 | 100 | 140 | 160 |
| லீக்ஸ் | 140 | 250 | 180 | 200 | 300 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 70 | 80 | 120 | 80 |
| கறிமிளகாய் | 250 | 250 | 240 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 180 | 100 | 120 | 160 | 200 | 250 |
| போஞ்சி | 180 | 250 | 100 | 180 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 | 140 | 100 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 50 | 40 | 35 |
| தேசிக்காய் | 280 | 200 | 220 | 280 | 400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80-100 | 70 | 75 | 60-80 | 80 |
| இராசவள்ளி | 250 | 500 | 380 | - | - | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 | 240 | - |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 80 | 100 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | - | 60 | 30 | - | 60 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை மாறினால் வாழ்க்கை மாறும்.

~ கவிப் பேரரசு வைரமுத்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மற்றவர்களிடம் இருந்து பேசக் கற்றுக் கொள்ளுங்கள்

ஒரு காலத்தில் தமிழ் அரசியல் என்றால் அதற்குத் தனி மதிப்பு. அந்தளவுக்கு சட்ட வல்லுநர்களும் பேச்சாளப் பீரங்கிகளும் தமிழ் மீது அளவு கடந்த பாசம் கொண்டவர்களும் தமிழ் அரசியலை அலங்கரித்தனர்.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் உலகறிந்த சட்ட மேதை. நீதிமன்றங்களில் அவரின் வாதத்தைப் பார்ப்பதற்காகவே அங்கு மக்கள் கூடுவர்.

தந்தை செல்வநாயகம் சிங்களத் தலைவர்களும் மதிக்கின்ற அரசியல் ஞானி. பாராளுமன்றத்தில் தந்தை செல்வநாயகம் பேசுகிறார் என்றால், அத்தனை சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாகி இருப்பதுடன், அவரின் உரையை உற்றுக் கவனிப்பர்.

அந்தளவுக்கு அவரின் உரையில் தத்துவம் இருக்கும். அரசியல் சித்தாந்தம் இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக மனிதம் இருக்கும்.

இதேபோன்றுதான் தளபதி அமிர்தலிங்கமும். அவர் பாராளுமன்றத்தில் பேசினால் சபை அதிரும். அமிர்தலிங்கத்துக்கு ஈடாகப் பேசுவதற்கு எங்களிடம் ஆட்கள் இல்லையே என்று சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவலை கொள்வராம்.

இவை ஒருபுறம் இருக்க, தளபதி அமிர்தலிங்கம், சிம்மக் குரலோன் எம்.சிவசிதம்பரம், இரும்பு மனிதன் நாகநாதன், கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கம் இப்படி ஒரு பெரும் பட்டியலை தந்துவிடலாம்.

இவர்கள் அன்று தேர்தல் மேடைகளில் ஆற்றிய உரைகள்தான் இன்றுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடிக்கட்டுப் பசளையாக உள்ளது.

எல்லாம் ஒரு காலம் என்று கூறுமளவுக்கு இப்போது நிலைமை வந்துவிட்டது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதிலும் அடித்துப் பேசுவதிலும் நம் அரசியல்வாதிகள் தடக்குப்படுகின்றனர்.

போதாக்குறைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் ஆற்றுகின்ற பேச்சுக்களைப் பார்க்கும் போது கடவுளே! தமிழரசுக் கட்சியின் பாசறை படைத்த தமிழ் மகனா? இவர் என்று கூறி நம் தலையில் அடிக்க வேண்டும் போல் உள்ளது.

அந்தளவுக்கு அவர் ஆற்றுகின்ற உரைகள் தமிழ் மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு நம் தமிழ் அரசியல்வாதிகளின் உரைகள் இருக்க; சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆற்றுகின்ற உரைகளைக் கேட்கும்போது, இவர்களைப் போல எங்களிடம் பேசுவதற்கு ஆட்கள் இருந்தால் என்று எண்ணத்தோன்றும்.

அந்தளவுக்கு சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள் தர்க்கரீதியாக, நுட்பமாக, தங்கள் கருத்தை நியாயப்படுத்தக் கூடியவாறு உரையாற்றுகின்றனர்.

அதில் சில இடங்களில் தமிழ் மக்களுக்காக சிங்கள அரசியல்வாதிகள் சிலரும் மல்வத்த பீடமும் கூறுகின்ற கருத்துக்கள் அற்புதமானவை.

நாங்கள் கூறவேண்டிய கருத்துக்களை அவர்கள் கூறுகின்றனர் எனும்போது அவர்களிடம் இருந்து நம் தமிழ் அரசியல்வாதிகள் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என மக்கள் மத்தியில் நிரூபிப்பதற்கு பேச்சுக்கலை தவிர்க்க முடியாத ஒன்று என்பதால் மற்றவர்களிடம் இருந்தும் நாம் பேசக் கற்றுக் கொள்வது அவசியமாகின்றது.

## 45 வருடங்களின் பின்னர் சாதனை படைத்த மாணவி

### ஜனாதிபதி கொடுத்த இன்ப அதிர்ச்சி

(கொழும்பு)

கடும்வறுமையான நிலையிலும் புலமைப் பரிசீல் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தன.

இந்நிலையில் குறித்த மாணவியை தன்னிடம் அழைத்து வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம் ஊடாக கலேவெல கல்வி இயக்குநரிடம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை புலமைப் பரிசில் பரீட்சையில் துலஞ்சலி மதுமாலி பிரேமரத்ன என்ற மாணவி 168 புள்ளிகளை பெற்றுள்ளார்.

திக்கல ஆரம்ப பாடசாலை 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் முதல் முறையாக புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதல்மாணவி இவராவார்.

மாணவியின் தந்தை சிறுநீரக நோயினால் உயிரிழந்துள்ள நிலையில் அவரது தாயார் தற்போது கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்திவருகினறார்.

அதற்கமைய உடனடியாக செயற்படும் வகையில் சிறுநீரக நோய் நிவாரண நிதியை மாணவியின் உயர்தரக்கல்வி வரை வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி இல்லத்திற்கு குறித்த மாணவியை அழைத்து வ்ருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.(இ-7)

## தங்கூசி வலைக்கு தண்டம்


(யாழ்ப்பாணம்)

தங்கூசி வலையை பயனபடுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட உள்ளூர் மீனவர்கள் நான்கு பேருக்கு 20 ஆயிரம் தண்டமும் அவர்கள் பயன்படுத்திய படகு மற்றும் இயந்திரத்தை அரசுடமையாக்க ஊர்வகாவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம். றியால் உத்தரவிட்டுள்ளார்

அல்லைப்பிட்டி கடற்பரப்பில் அதே பகுதியை சேர்ந்த 4 மீனவர்கள் இணைந்து ஒரு இயந்திர படகில் தங்கூசி வலையை பயன்படுத்தி கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட யாழ் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய உபகரணாங்களை கைபற்றியதுடன் அவர்கள் மேல் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

குறித்த வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது குறித்த நான்கு மீனவர்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன், அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய வலையை அழிக்குமாறு உத்தரவிட்டதுடன், படகு மற்றும் இயந்திரத்தைஅரசுடமையாக்குமாறும் நீதவான் ஏ.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார். (மு-9)




திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

கல்லாலடித்துக் காயப்படுத்தித் துரத்திய வேடன் முகம் அவள் நெஞ்சில் அழியாது நின்றுவிட்டது. ஊண் பிடிக்கவில்லை. உறக்கம் பிடிக்கில்லை. வேடனைத்தான் தன் உள்ளம் விரும்புகிறது என உணர்ந்து.கொண்டாள்.

அரசிளங்குமரியான தான், ஒரு வேடனை விரும்புவதாகச் சொன்னால் அன்னையும் தந்தையும் யாது சொல்வார்களோ என்றெண்ணி அவள் மருண்டிருந்த வேளையில் அரண்மனை வாச லில் குறி சொல்வதற்குக் குறத்தி ஒருத்தி வந்திருக்கிறாள் என்ற செய்தி அவளை எட்டியது. (தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### அறிவால் மேம்படுங்கள்



✦ கடவுள் மீது பக்தி செலுத்துங்கள். எதிலும் மூடத்தனமாக இருக்காதீர்கள். அறிவால் வாழ்வில் மேம்படுங்கள்.

✦ பனி, தண்ணீர், நீராவி மூன்றும் ஒரே பொருளின் வெவ்வேறு வடிவங்களே. ஒரே கடவுள் பல வடிவில் இருக்கிறார்.

✦ உலக விடயங்களில் இருந்து மனதை விடுவிக்காமல் கடவுளை சென்றடைய முடியாது.

✦ முத்தின் வளர்ச்சிக்கு சிப்பி உதவுவது போல சடங்கு, சம்பிரதாயம் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவுகின்றன.

✦ அடிக்கடி கோபத்திற்கு ஆளாவதால் நல்லது, கெட்டதை பகுத்தறியும் தன்மை இல்லாமல் போகும்.

## மகனை தாக்கிய தந்தையை மறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மகனைத் தாக்கிய தந்தையை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியாவைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவன் தந்தையின் தாக்குதலுக்குப் பயந்து யாழ்ப்பாணம் நகுலேஸ்வரம் பகுதியிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டிற்கு வந்துள்ளான்.

சிறுவனைத் தாக்கிய தந்தை தொடர்பில் உறவினர்களால் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு கடந்த 6ஆம் திகதி விசாரணைக்காக குறித்த சிறுவனின் தந்தை வருகை தந்த நிலையில் குறித்த தந்தை மற்றும் அவருடன் வந்த மற்றொரு நபரும் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருடன் முரண்பட்ட நிலையில் இருவரையும் கைது செய்து மதுபான சோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சோதனைக்குட்படுத்தியபோது இருவரும் மதுபோதையில் இருப்பது தெரியவந்தது.

அதன்பின்னர் கடந்த 7 ஆம் திகதி இருவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே சந்தேக நபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10-104)

## இடைக்கால வரைபு தொடர்பில் திறந்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பின் இடைக்கால வரைபு தொடர்பான ஓர் திறந்த கலந்துரையாடலும் அது தொடர்பான பல்கலைக்கழக சமூகத்தினது அறிக்கையிடலும் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம், கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்களான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (மு)

## உளநல தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் உளநல தினம் இனறு புதன்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் முகாமைத்துவ உதவிக் கல்விப்பணிப்பாளர் கே. அகிலதாஸ் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம தேச பாடசாலையின் அதிபர் டாக்டர் ஏ.விமலேந் திரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண உளநல முகாமைத்துவ உதவி முகாமையாளர் எஸ்.உதயகலாமற்றும் கோணடாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் எஸ்.சுயதீப் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-136)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மாலை மாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சி**

பெண்ணையும் பிள்ளையையும் ஒருவரையொருவர் எதிர் நோக்கும்படி அமரச் செய்து மாற்று மாலையாகிய முகூர்த்த மாலையை மூன்றுமுறை இருவரும் மாற்றி மாற்றி அணிவித்துக்கொள்ள வேண்டும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்க ங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் வல்லிபுரம், உபய கதிர்காமம், புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ஆம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் -. ஐப்பசி 2017

மார்பகத்தில் ஏற்படுகின்ற எல்லாக் கட்டிகளுமே புற்றுநோய்க் கட்டிகளல்ல. ஆனால் எந்த மார்பகக் கட்டிகளும் புற்றுநோய்க் கட்டிகளாகவும் மாறலாம். மாதவிடாய்ச் சக்கரத்தின் முன்பாக, மார்பகத்தில் கட்டிகளும் நோவும் தோன்றுவது சாதாரணமானதே. பயம் கொள்ளத் தேவையில்லை.

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை

யாழ்ப்பாணம் மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபாலை கிரிக்கெட் சமர் முடிசூடியது கரவெட்டி ஞானம்ஸ்

















இருபாலை கிரிக்கெட் சமர் பரபரப்பான இறுதி ஆட்டத்தில் ஒரு ஓட்டத்தால் கலைஒளியினை வீழ்த்தி இருபாலையின் கிரிக்கெட் சிகர கிண்ணத்திற்காக மகுடம் சூடியது கரவெட்டி ஞானம்ஸ். இறுதி போட்டி 11 வீரர் 16 பந்துப்பரிமாற்ற போட்டி யாக நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கலைஒளி அணி தலைவர் களத்தடுப்பினை தெரிவு செய்தார்.

கலைஒளி அணியினர் திறமை யாக பந்து வீசி ஞானம்ஸின் அதிரடி யினை கட்டுப்படுத்தினர்.

75 ஓட்டங்களிற்குள் அனைத்து விக்கெட்டையும் இழந்தது ஞானம்ஸ் அணி. துடுப்பாட்டத்தில் அணி தலைவர் சேர்ந்திரன் இரண்டு 6 ஓட்டம் அடங்கலாக 15 ஓட்டமும் ரயிவன் ஒரு 6 ஓட்டம் அடங்கலாக 9 ஓட்டத்தினை பெற்றனர். பந்து வீச்சில் மோகன்ராய், பிரதீஸ் தலா மூன்று விக்கெட்டை வீழ்த்தினர்.

16 பந்துப்பரிமாற்றத்தில் 76 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கியது கலை ஒளி ஞானம்ஸ். பந்து வீச்சாளர்களும் கட்டுக்கோப்புடன் பந்து வீசி சீரான இடைவெளியில் விக்கெட்டை கைப்பற்றினர்.

கலைஒளியின் சிறி தர்சன் மூன்று 6 ஓட்டங்கள் அடித்து வெற்றியின் பக்கம் கலைஒளி யினை அழைத்து சென்ற வேளை அவர் 19 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

ஒரு கட்டத்தில் 11 பந்து பரி மாற்ற முடிவில் 6 விக்கெட்டை இழந்து 46 ஓட்டங்களை பெற்றி ருந்தது கலைஒளி. 5 பந்துபரி மாற்றத்தில் நான்கு விக்கெட் கைவச மிருக்க வெற்றிக்கு 30 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பிரதீஸ் 10 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார். சனந்தன் தொடர்ச்சியாக இரு சிக்சர் அடித்து போக்கை மாற்ற முயற்சித்து அடுத்த பந்தில் ஆட்ட மிழந்தார்.

பினன்ர் இரண்டு விக்கெட் கைவசமிருக்க 12 பந்துகளில் 5 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பந்து வீச அழைக்கப்பட்ட யெனி இரண்டு விக்கெட்டை யும் வீழ்த்த ஒரு ஓட்டத்தால் திரில் வெற்றி பெற்று சிகர கிண்ணத்தினை கைப்பற்றியது.

ஞானம்ஸ் அணியின் சிறந்த பந்து வீச்சாளர் மோகன்ராய் கலை ஒளி விளையாட்டுக் கழகம். சிறந்த துடுப்பாட்ட·வீரர் சிறிதர்சன் கலை ஒளி வி.க., சகல துறைவீரர் யெனி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம். ஆட்டநாயகன் சேந்திரன் ஞான ம்ஸ் விளையாட்டுக் கழகம்.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட கிரிக் கெட் பயிற்று விப்பாளர் கலந்து சிறப் பித்தார்.

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

தீபாவளியை முன்னிட்டு **Chun nakam Black Regins** அணியால் நடத்தப்படும் மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டி எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள் ளது.

அணிக்கு 7 பேர் 6 பந்துப் பரி மாற்றங்கள் கொண்ட போட்டியில் 23 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு 078 987 5197, 078 973 0342 எனும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## உடுவில் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது மல்லாகம் ஸ்ரீமுருகன்




சண்டிலிப்பாய் கல்வளை விநாய கர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய மாபெரும் "கிரிக்கெட் திருவிழா" துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் மல்லாகம் ஸ்ரீமுருகன் வி.க. எதிர் உடுவில் சலஞ்சர்ஸ் வி.க பலப்பரீட்சை நடத்தின. நாண யச்சுழற்சியில் வென்ற உடுவில் சலஞ்சர்ஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதன்படி களமிறங்கிய ஸ்ரீ முருகன் வி.க. நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர்கள் நிறைவில் 2 இலக்கு களை மாத்திரம் இழந்து 74 ஓட் டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிரடி காட் டிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனு சியன் 4 சிக்சர்கள் அடங்கலாக 32 ஓட்டங்களும் தனுசன் 21 ஓட்டங் களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு களமிறங்கிய உடு வில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 6 ஓவர்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

35 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை பெற்றுக் கொண் டது மல்லாகம் ஸ்ரீமுருகன் விளை யாட்டுக்கழகம். பந்துவீச்சில் ஜிந்தா 2 இலக்குக்களையும் அணித்தலை வர் ஜனுசன், கண்ணதாசன், தனுசன் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக துடுப்பாட்டத் தில் அதிரடி காட்டிய தனுசியன் தெரிவானார்.



கீரிமலை உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியில் நல்லிணக்க இளைஞர் அணி சங்கானை கிங்ஸ்ரார் அணி, தெல்லிப்பழை கலையொளி அணி ஆகியவற்றை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது வீனஸ் விளையாட்டுக் கழகம்.



மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 2வது போட்டியாக கம்பர்மலை யங்கம் பன்ஸ் வி.கழகம் எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டன. இதில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியில் சிறப்பாக செயற்பட்டு ஆட்டநாயகன் விருதினை றொபேட் றொசான் பெற்றுக்கொண்டார்.

## பெண்களுக்கான கபடிப்போட்டி வெண்கலம் வென்றது கிளி.இந்து



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

20 வயதிற்குட்பட்ட பெண் களுக்கான கபடிப் போட்டியில் கிளி நொச்சி இந்துக் கல்லூரி பெண் கள் அணி மிகச் சிறப்பாக விளை யாடி வெண்கலப் பதக்கத்தை வென்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளது.

## காளிஅம்பாள் நடத்தும் மாபெரும் தாச்சிப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங் கத்தின் அனுசரணையுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டு கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகி எதிர் வரும் 13 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது. இன்றிரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் நாவலர் அணியை எதிர்த்து அறி வொளி அணி விளையாடவுள்ளது.

தொடர்ந்து 8 மணிக்கு ஆனந்தா அணியினை எதிர்த்து சாந்தை விநாயகர் B அணி விளையாட வுள்ளது என காளிகாம்பாள் விளை யாட்டுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ காஸ்...

அமெரிக்க டொலர் பணத்தை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவர் எஸ்.முனசிங்கவை இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (மு)

## மாணவர்கள் மீது...

மாலபேயிலுள்ள சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக வைத்திய பீட மாணவர்கள் நேற்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் குண்டாந்தடி பிரயோகம் மேற்கொண்டதில் 18 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக கண்ணீர் புகை மற்றும் நீர் தாரை பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று மாணவர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (மு)

## அமைச்சரவையில்...

கும் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் நேற்று அமைச்சரவையில் பிரஸ்தாபித்த அமைச்சர் மனோ கணேசனிடம் இது தொடர்பில் சட்டமாதிபரிடம் உடன் விளக்கம் கோரி தீர்வை தருவதாக ஜனாதிபதி மைத்திபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

**இதுபற்றி கருத்துக் கூறிய அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்ததாவது,**

அமைச்சரவையில் இதுபற்றி பிரஸ்தாபித்ததையடுத்து, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் இதுபற்றிய சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, இந்த விவகாரம் பற்றி ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறினேன்.

இந்த வழக்கின் சாட்சிகள், வவுனியாவில் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தை காட்டியுள்ளனர். இதை காரணமாக கொண்டே வழக்குகள் வவுனியா நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுர நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

சட்டமாஅதிபர் திணைக்களத்தின் இந்த முடிவு நியாயமானது அல்ல. சாட்சிகளின் தேவையை கருதி வழக்குகள் இடம் மாற்றப்படுவது ஏற்புடையதல்ல. இன்று யுத்தம் முடிந்த நிலையில் நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் எவரும் சென்று வரக்கூடிய நிலையில், சட்டமாஅதிபர் இத்தகைய முடிவை எடுத்திருப்பது தமிழ் மக்களுக்கு தவறான செய்தியை தருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் அளித்த ஜனாதிபதி, இது பற்றி தான் அறியவில்லை என்றும், சாட்சிகளின் தேவையை கருதி வழக்குகள் இடம் மாற்றப்படுவது ஏற்புடையதல்ல என்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார். இது பற்றி தான் சட்டமா அதிபரிடம் விளக்கம் கோரி தீர்வு காண்பதாக ஜனாதிபதி என்னிடம் உறுதியளித்துள்ளார்.

இதுபற்றிய கோரிக்கை அடங்கிய கடிதமொன்றை வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் எழுதியுள்ளதாக, ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ இச்சமயத்தில் கூறியுள்ளார். (மு)

## சுவிஸ் நீதியான...

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுவிஸ்லாந்தில் அகதிகள் முகாமில் சுட்டுக்கொல்லப்பட்ட முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்தைச் சேர்ந்த சுப்ரமணியம் கரன் என்பவரின் வீட்டிற்கு நேற்று சுவிஸ்லாந்து தூதரக அதிகாரி ஒருவர் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

இலங்கைக்கான சுவிஸ்லாந்து தூதரகத்தின் வடக்கு, கிழக்கு பிராந்திய அரசியல் பிரிவு அதிகாரி சுஷாந்தினி கோபலகிருஷ்ணன் நேரில் சென்று உயிரிழந்த குடும்பஸ்தரின் உறவுகளுடன் கலந்துரையாடியதோடு தனது ஆறுதலையும் தெரிவித்தார்.

அவர்களிடம் இது தொடர்பாக மேற்கொண்டு ஆறுதல் கூறிய சுஷாந்தினி,

சுட்டுக் கொல்வது என்பது தவறு என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் பணிப்பின் பேரிலேயே நாம் இன்று சுட்டுக்கொல்லப்பட்டவரின் குடும்ப நிலைமைகளை நேரில் கண்டு ஆராய்வதற்காகவே வந்தோம். தந்தையை, சகோதரனை, கணவனை இழந்து தவிக்கும் உங்களின் வலிகளை புரிந்துகொள்கிறோம். உங்கள் நிலைமை தொடர்பில் சுவிஸ் அரசிற்கு அறிவிப்போம் என உயிரிழந்தவர்களின் உறவுகளிடம் கூறினார்.

தூதரக அதிகாரியினை பார்த்து உயிரிழந்தவரின் உறவுகள் கதறி அழுது தமது வேதனையை வெளிப்படுத்தியதோடு சுட்டுக்கொலலப்பட்ட தமது தந்தைக்கு உரிய பதிலை வழங்குமாறும் தமது தந்தையை சுவிஸ் பொலிஸார் சுட்டுக்கொன்றது ஏன் எனவும் சுட்டுக் கொல்லும் அளவிற்கு தமது தந்தை தவறு செய்திருக்க மாட்டார் எனவும் கொலை செய்யப்பட்டவரின் பிள்ளைகள் கதறி அழுதனர்.

மேலும் தமது தந்தை தொடர்பில் சுவிஸ் அரசு நீதியான விசாரணையை நடத்த வேண்டும் எனவும் உயிரிழந்த தமது தந்தை தொடர்பாக நடக்கும் விசாரணைகளை தம் குடும்பத்தின் சார்பில் தாம் சுவிஸ் சென்று ஆராய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். (மு)

# 73 கிலோ கஞ்சா கடத்தல் இருவர் சுன்னாகத்தில் கைது!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 73 கிலோ கஞ்சாவை வாகனத்தில் கடத்தி செல்ல முற்பட்ட இருவர் நேற்றைய தினம் சுன்னாகம் மதுவரி திணைக்களத்தினரால் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் நண்பகல் வேளை தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் வாகனத்தில் சென்ற இருவர் கஞ்சா கடத்தி செல்வதாக புலனாய்வு துறையினரால் மதுவரி திணைக்களத்தினருக்கு அறிவித்தல் கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் அவ் இடத்துக்கு சென்ற மதுவரி திணைக்களத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அப்போது 73 கிலோ கஞ்சா அவர்களிடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

அதனையடுத்து கஞ்சாவை கொண்டு சென்ற இருவரும் உடனடியாக கைது செய்யப்பட்டிருந்தனர். (மு-9)

## நாமல் ராஜபக்ஷ...

ப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவை மீறி அம்பாந்தோட்டையில் கூட்டு எதிரணியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்க நாமல் ராஜபக்ஷ பொலிஸில் சமுகமளித்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கூட்டு எதிரணியினர் அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

இதற்கான அனுமதியை நீதிமன்றம் இரத்துச் செய்திருந்தது.இருந்தபோதும், திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதையடுத்து, ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்களாகக் கருதி, பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, டி.வி.சானக்க, பிரசன்ன ரணவீர உள்ளிட்ட சிலரை விசாரணைக்காக பொலிஸில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நாமல் ராஜபக்ஷ, சானக்க, பிரசன்ன உட்பட ஆறு பேர் அம்பாந்தோட்டை பொலிஸில் ஆஜராகினர்.

இந்நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.இதேவேளை அம்பாந்தோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது குழப்பம் விளைவித்த மேலும் ஐந்து பேரை பொலிஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (மு)

## பேருந்தை மறித்து...

வந்த இரு இளைஞர்கள் பஸ்ஸை வழிமறித்து பஸ்ஸுக்குள் அத்துமீறி நுழைந்து நடத்துநரையும் சாரதியையும் தாக்கியதுடன் பேருந்து சாவியை[illegible] நிலையில் கொடிகாமம் பொலிஸ[illegible]ப்பட்ட குறித்த இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.(மு)

## தமிழ் மக்கள்...

வடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொபர்ட் ஹல்ஃபன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமிழ் மக்கள் முகம்கொடுத்த அசாதாரண சூழ்நிலைகளுக்கும் நீதிகிடைக்கப்பெற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மென்செஸ்ட்டரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர்கள் இந்த விடயத்தைக் கூறியுள்ளனர். (மு)

## தொடர்ந்தும்...

மறுப்புத் தெரிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கைதிகள் மூவர் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் சிறைச்சாலை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். எனினும் அவர்கள் உணவைத் தவிர்த்து வருகின்றனர். அவர்களுடைய உடல்நிலை தொடர்பில் மிக அவதானமாகக் கவனித்து வருகிறோம். உடல் நிலையைப் பரிசோதிப்பதற்காக விசேட் வைத்தியர்களையும் நியமித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல்கைதிகள் மூவர், தம்மை வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் கோரி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(மு)

## வட-கிழக்கு இணை...

மேலும் அவர் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு இணைப்பை நடைமுறைப்படுத்த விடாமலே அரசாங்கம் திட்டமிட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளது. தமிழ் பேசும் திருகோணமலை மாவட்டம் முப்பகுதியினரின் மாவட்டமாகக் கடந்த ஐம்பது வருடங்களுக்குள்ளேயே மாற்றப்பட்டுள்ளது.

சமஷ்டியில் சில தனித்துவ அலகுகளையும் உள்ளடக்கலாம். திருகோணமலை நகரத்திற்கென ஒரு சிறப்பு நிர்வாகத்தை ஏற்படுத்தலாம். வட கிழக்கு இணைப்பு எதற்காக கோரப்படுகின்றது என்பதை நாம் முற்றாக அறிந்திருக்க வேண்டும். தமிழ் பேசும் பிரதேசங்கள் ஒன்றாக இல்லாவிட்டால் திருகோணமலை மாவட்டத்திற்கு நடந்ததே மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் நடக்கும். அரசாங்கத்திற்குப் பல அனுசரணைகள் உண்டு. நாட்டின் மத்திய அரசாங்கம் பெரும்பான்மையினரது கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கூடிய நாட்டு மக்கள் பெரும்பான்மையினத்தவர்கள். பிறநாடுகளுடன் ஒப்பந்தங்கள் வைத்துக் கொள்ளும் அதிகாரம் அவர்களுடையது. மகாவலி அபிவிருத்தி போன்ற சட்டங்களை அவர்களே நடைமுறைப்படுத்துகின்றார்கள். ஆகவே தான் அவர்கள் திருகோணமலை மாவட்டத்தையும் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தையும் பெரும்பான்மையினத்தவரின் குடியேற்ற நிலங்களாக மாற்றி வருகின்றார்கள்.

திருகோணமலைக்கு விசேட நிர்வாக அந்தஸ்தை அளித்து, மிகுதி வடகிழக்குத் தமிழ்ப் பிரதேசங்களை ஒன்றிணைத்து முஸ்லிம் மக்களுக்கு அதனுள் ஒரு தனி அலகை உருவாக்குவதே உசிதமெனத் தோற்றுகின்றது என்றார் முதலமைச்சர்.(மு)

## பொலிஸார் எங்களை கைது செய்து விட்டனர் ஐ.நாவிடம் கூறுகிறார் நாமல்

(கொழும்பு)

தாம் கைதுசெய்யப்பட்டமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஆறுபேர் நேற்று மாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டமை குறித்து நாமல் ராஜபக்ஷ, தமது டு விட்டர் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமைக்காக பொலிஸார் தாம் உள்ளிட்டவர்களை கைது செய்துள்ளதாக நாமல் ராஜபக்ஷ தமது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (மு)

## வயோதிபப்பெண் விழுந்து மரணம்

(மன்னார்)

மன்னார்-முத்தரிப்புரிப்புத்துறை வீதியில் அருவியாற்று பாலப்பகுதியில் உறவினருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் வீதியில் உள்ள பள்ள பகுதியில் மோட்டார் சைக்கிளில செல்லும் போது தலைக்கவசம் ஒழுங்காக அணியாத காரணத்தால் நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்துக்கு உள்ளாகியதில் தலையில் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சகாயநாதன் கூஞ்ஞ (வயது 65) எனும் வயோதிபப் பெண் ஆவார். உயிரிழந்தவரை ஏற்றிச்சென்ற அவரின் உறவினர் தற்போது பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(மு-2)

## சுகிசிவம் பங்கேற்கும் சிறப்பு சொற்பொழிவு யாழ்.பல்கலையில் இன்று

(யாழ்ப்பாணம்)

அறிவுத்திருக்கோவிலின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு சொல்வேந்தர் சுகிசிவம் கலந்து கொள்ளும் சிறப்புச் சொற்பொழிவு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (மு)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வல்லிபுரக்கோயில் சந்தி பகுதியில் மோட்டார் சைக்கிள் தமது கட்டுப்பாட்டை இழந்து பாலத்தோடு மோதுண்டதில் அதில் பயணித்த இளைஞன் ஒருவர், படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கள் வல்லிபுர கோயில் சந்தியில் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் நீர்வேலி பகுதியை சேர்ந்த சிவகுமார் கனகன் (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார்.

இவ் விபத்து தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

UK - 550/= (C-9918)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


# சனி, ஞாயிறு, யாழ். இந்துவில்...

தேசிய தமிழ்த்தின விழா மற்றும் பாடசாலைகள் கலாசார விழாவில் 14ம் திகதி முதலாம் நாள் நிகழ்வில் தேசிய தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கல்வி இரா ஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் மற்றும் 9 மாகாணங்களினதும் ஆளுநர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக நிகழ்வின் ஒழுங்கமைப்பாளர்களால் கூறப்பட்டுள்ளது. இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்த் தின போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலாசார நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் மாலை 7 மணி வரையில் நடைபெறும். இதனோடு தென்னிந்தியாவில் புகழ்பெற்ற பேச்சாளர் சுகிசிவமும் கலந்து கொள்வார். 15ம் திகதி 2ம் நாள் நிகழ்வில் பாடசாலைகளின் கலாசார நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் நடைபெறும்.

அத்னோடு தென்னிந்தியாவில் புகழ்பெற்ற பரதநாட்டிய அக்கடமியான "பாரத கலாஞ்சலி" வழங்கும் ஓம் சிவா முருகா பரதநாட்டிய நிகழ்வும் நடைபெறும். இப் பரதநாட்டிய நிகழ்வில் 20ற்கும் மேற்பட்ட இந்திய பரத நாட்டிய கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வடமாகாணத்தில் திறம்பட செயற்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள், கல்விமான்கள், வியாபார துறையில் மிளிர்ந்தவர்கள் மற்றும் சிறந்த சேவையாற்றிய ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

தொடர்ந்து தென்னிந்தியாவில் புகழ்பெற்ற பட்டிமன்ற பேச்சாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொள்ளும் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

இதேவேளை ஆரம்ப நிகழ்வு உள்ளிட்ட சகல நிகழ்வுகளும் பிரமாண்டமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வுகளில் பிரதானமாக யாழ்.மத்திய கல்லூரியில் இருந்து யாழ்.இந்து கல்லூரி வரையில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் பண்பாட்டு ஊர்தி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 14ம், 15ம் திகதிகளில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் சுமார் 300ற்கும் மேற்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-4)


கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

GUNA BEST PC 0779086737

லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்

LAPTOP COMPUTERS CCTV CAMERA

REPAIR SALE PURCHASE INSTALLATION

கணினி மதர்போட் சீசீரீவி திருத்தம் விற்றல் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் (626)



வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய கிளைகளில் 20 பதவி வெற்றிடங்களும் 8 உயர் பதவி வெற்றிடங்களும் எமது Granton நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளது.

- Distributors
- Supervisor
- Administrator
- Assistant Manager
- Manager

அடிப்படை தகைமையாக O/L, A/L களும், 30 வயதிற்குட்பட்டவராகவும், பயிற்சிக்காலத்தின் போது 16500 - 18500 பயிற்சியின் பின் பதவிக்கேற்ப ஊதியம் (45000 - 55000) வரை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு :

0766399954, 0768775971 (979)



McDonald's

மாதம் 50,000/- வருமானத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற Trans Gulf (Pvt) Ltd. (பதிவு இல. 0742) ஊடாக

மிகக் குறைந்த கட்டணத்துடன் நம்பகமான பயண ஏற்பாடு

ஹொட்டேல் பணி அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை (C-9965)

சொற்பளவானோருக்கே இந்த வாய்ப்பு உடன் தொடர்புகொள்ளுங்கள்

SIKARAM JOB BANK

0777 324 004



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



-அன்பு-
வாசகர்களே...

தமிழர் தலைவிதி தொடர் எதிர்வரும் 16.10.2017 திங்கள் முதல் வெளிவரும்.

- ஆசிரியர்


## பிரபாகரனை...

பிரபாகரனைப் பார்த்து வேதனை அடைந்ததாக காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் துணை தலைவர் ராகுல் காந்தி குஜராத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

வதோதராவில் நேற்று தொழிலதிபர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார். அப்போது, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இக்கேள்விக்கு பதிலளித்த ராகுல், பிரபாகரனின் சடலத்தை பார்த்து நானும் எனது சகோதரி பிரியங்காவும் மிகவும் வேதனை அடைந்தோம். பிரபாகரனின் கு[illegible] பத்தினர் கொல்லப்பட்டதால் து[illegible] மடைந்தேன். மற்றவர்களின் துயரங்களில் பங்குகொள்வதுதான் காந்தி குடும்பத்தின் பாரம்பரியம் என்று குறிப்பிட்டார். (மு)

## மயிலிட்டியில்...

சேவகர் பகுதியில் உள்ள காணி ஒன்றில் உள்ள கிணற்றை உரிமையாளர் துப்புரவு செய்துள்ளார்.

அப்போது கிணற்றினுள் வெடி பொருட்கள் தெரிவதை அவதானித்துள்ளார்.

உடனடியாக காங்கேசன் துறை பொலிஸாருக்கு தெ[illegible]யப்படுத்தியதை அடுத்து அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் கிணற்றினுள் இருந்த 27 மோட்டார் வெடி குண்டுகளை மீட்டுள்ளனர்.

மீள் குடியேற்றப்பட்டுள்ள பகுதியில் உள்ள பல கிணறுகளில் இவ்வாறான வெடி பொருட்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

# மரண அறிவித்தல்

## தம்பையா அருணகிரிநாதர்



பருத்தித்துறை வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அருணகிரிநாதர் 10.10.2017 நேற்றுக் காலமானார்.

அன்னார் அமரர் தம்பையா பொன்னம்மாவின் ஏகபுத்திரனும் அமரர்களாகிய கமலாநாயகி, காந்தபூபதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர் முருகேசு செல்லம்மாவின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், விக்கினேஸ்வரநாதன் (கனடா), குகனேஸ்வரநாதன் (லண்டன்), சிவநேசநாதன் (கனடா), கிருஸ்ணநேசநாதன் (கனடா), ரஞ்சநேசநாதன் (ஜேர்மன்), ரவீந்திரநாதன் (இராமநாதபுரம்), திருநாதன் (லண்டன்), தவநாதன் (இந்தியா), கலியாணி (வட்டக்கச்சி) கலைநாதன் (வட்டக்கச்சி), அருள்வதனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகௌரி (லண்டன்), தர்சினி (கனடா), சாந்தி (கனடா), பிறேமசீலி (இராமநாதபுரம்), சுபாஜினி (லண்டன்), தேனுகா (இந்தியா), சிவசீலன் (வட்டக்கச்சி), செந்தில்குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

நாளை 12.10.2017 வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டக்கச்சி மம்பில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி, வட்டக்கச்சி.

தகவல் - குடும்பத்தினர் 077[illegible]1475

# மரண அறிவித்தல்

## திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா



வரணி இயற்றாலை, வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிப்பிள்ளை கந்தையா 09.10.2017 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர்-குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும், செல்லப்பா கந்தையாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, முருகேசு அவர்களின் சகோதரியும், வரதலட்சுமி, சின்னராசா (நோர்வே), வேலாயுதபிள்ளை (ஜேர்மனி), தேவசேனாதிபதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆறுமுகம், யோகம்மா, சியாமிளா, பத்மாதேவி ஆகியோரின் மாமனாரும், ஜீவாகரன் (நோர்வே), ஊர்மிளா (பிரான்ஸ்), பிரியங்கன் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - பளை), கிருசாந்தன், மகினுசா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2017) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி இயற்றாலை, வரணி. (973)

தகவல் : குடும்பத்தினர் 0777 111 306


அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

0768226243

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய V2 Travels நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.



மு.பானுதரன் - நெல்லியடி

அமெரிக்க விசா வெற்றியாளர் (C-9942)

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| 249A [illegible] | A9 வீதி, [illegible] | 10,பேருந்து நிலையம் | முடக்காடு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.